முன்னுரை

ஆமோஸ் கிராமப்பகுதியில் விவசாய வேலை செய்கிறவர். அவர் ஒரு மேய்ப்பர். ஆமோஸ் என்னும் பெயருக்கு "பாரம்" என்று பொருள் சொல்லலாம். ஆமோஸ் தெளிவாகப் பேசமாட்டார் என்றும், அவர் கொன்னை வாயையுடையவர் என்றும் யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது. ஆமோஸ் கொன்னை வாயோடும், தெற்று நாவோடும் பேசினாலும், அவருடைய வார்த்தையில் உறுதியிருந்தது. கர்த்தர் தனக்கு கொடுத்த வார்த்தைகளை, ஆமோஸ் தெளிவாகவும், உறுதியாகவும், நிச்சயமாகவும் பேசினார். ஆமோஸ் சொன்ன வார்த்தைகள் கர்த்தருடைய பாரமாயிருந்தது.

ஆமோஸ் யூதாதேசத்தைச் சேர்ந்தவர். ஆனாலும் அவர் இஸ்ரவேலுக்கு விரோதமாக அதிகமாய்த் தீர்க்கதரிசனம் சொன்னார். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள பெத்தேலில், ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொன்னார் (ஆமோ 7:13).

ஆமோஸ் ஒளிவு மறைவில்லாமல், எதையும் தெளிவாகப் பேசக்கூடியவர். உள்ளதை உள்ளது என்றும், இல்லாததை இல்லாதது என்றும் பேசக்கூடியவர். இவருடைய காலத்தில், பெத்தேலில் அமத்சியா என்பவர் ஆசாரியராய் ஊழியம் செய்தார். ஆமோசுக்கும் அமத்சியாவுக்கும் கருத்து வேறுபாடு உண்டாயிற்று. ஆமோஸ் அமத்சியாவோடு விவாதம் பண்ணுவதற்கு பயன்படுத்திய வார்த்தைகள், ஆமோசின் மனஉறுதியையும், அவருடைய தெளிந்த சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை ஆமோஸ் கடிந்து சொன்னார். கர்த்தர் தனக்கு கொடுத்த வார்த்தைகளை ஆமோஸ் பயப்படாமல், மறைக்காமல், தெளிவாகச் சொன்னார். ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆமோஸ் இந்த இரண்டு சத்தியத்தையும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் வலியுறுத்தி பேசினார். மனந்திரும்புவதற்கு தேவையான ஆலோசனைகளையும் அவர்களுக்கு தெளிவாக எடுத்துச் சொன்னார்.

இஸ்ரவேல் தேசத்திற்கு, அவர்களுடைய அண்டை தேசத்தார் சத்துருக்களாயிருந்தார்கள். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பும், கோபமும் வரும் என்பதே ஆமோசின் ஆரம்பச் செய்தி (ஆமோ 1,2 - ஆகிய அதிகாரங்கள்).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டுமென்று ஆமோஸ் சொல்லுகிறார். அவர்கள் தங்களுடைய பாவங்களைக் குறித்து கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனையின் நிமித்தமாக, கர்த்தர் அவர்களை நியாயந்தீர்ப்பார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தண்டித்த போதிலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், கடின இருதயத்தோடிருக்கிறார்கள் (ஆமோ 3,4 - ஆகிய அதிகாரங்கள்).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டுமென்று ஆமோஸ் சொல்லுகிறார் (ஆமோ 5 - ஆவது அதிகாரம்). இஸ்ரவேல் புத்திரருக்கு பாதுகாப்புக்கள் இருந்தாலும், அவர்கள்மீது அழிவு வரும் என்று ஆமோஸ் முன்னறிவிக்கிறார் (ஆமோ 6-ஆவது அதிகாரம்) அவர்கள்மீது வரும் ஒரு சில நியாயத்தீர்ப்புக்களை ஆமோஸ் தெளிவுபடுத்துகிறார் (ஆமோ 7- ஆவது அதிகாரம்). விசேஷமாக அமத்சியா மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்.

ஆமோஸ் இஸ்ரவேல் புத்திரரை, அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், தொடர்ந்து கடிந்துகொள்கிறார். அவர்களுக்கு ஆபத்து வரும் என்று எச்சரிக்கிறார் (ஆமோ 8,9 - ஆகிய அதிகாரங்கள்). ஆமோஸ் தன்னுடைய ஆகமத்தின் முடிவுரையில் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரவேலுக்கு நித்திய சந்தோஷமுண்டாகும்.

1 அதிகாரம்

ஆமோஸ் சொன்ன தீர்க்கதரிசனத்திற்கு பொதுவான தலைப்பு கொடுக்கப்படுகிறது (ஆமோ 1:1,2). கர்த்தர் சீரியாவுக்கு விரோதமாக வழக்காடுகிறார் (ஆமோ 1:3-5). பாலஸ்தீன தேசம் (ஆமோ 1:6-8), தீரு (ஆமோ 1:9,10). ஏதோம் (ஆமோ 1:11,12). அம்மோன் (ஆமோ 1:3-15) ஆகிய தேசங்களுக்கு விரோதமாகவும் கர்த்தர் வழக்காடுகிறார். அவர்கள் கர்த்தருடைய ஜனத்தை கொடுமைப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் தேசங்களோடு வழக்காடுவார் என்று யோவேல் சொன்ன தீர்க்கதரிசனம், இங்கு நிறைவேறுகிறது (யோவே 3:1-3).

ஆமோஸ்
ஆமோ 1:1,2

ஆமோ 1:1. தெக்கோவா ஊர் மேய்ப்பருக்குள் இருந்த ஆமோஸ், யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களிலும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுடைய குமாரனாகிய எரொபெயாமின் நாட்களிலும், பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு வருஷத்துக்குமுன்னே, இஸ்ரவேலைக்குறித்துத் தரிசனங்கண்டு சொன்ன வார்த்தைகள்.

ஆமோ 1:2. கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; அதினால் மேய்ப்பரின் தாபரங்கள் துக்கங்கொண்டாடும்; கர்மேலின் கொடுமுடியும் காய்ந்துபோகும்.

ஆமோஸ் சொன்ன தீர்க்கதரிசனங்கள், அவர் இஸ்ரவேலைக் குறித்து தரிசனம் கண்டு சொன்ன வார்த்தைகளாகும். ஆமோஸ் தீர்க்கதரிசி, இந்த வார்த்தைகளை தரிசனமாகக் கண்டார். இந்த வார்த்தைகளையெல்லாம், கர்த்தர் ஆமோசுக்கு, ஒரு தரிசனத்தின் மூலமாக வெளிப்படுத்தினார்.

யோவான் பத்மு தீவிலிருந்தபோது தன்னோடு பேசுகிற சத்தத்தைக் கண்டார். அதுபோலவே, ஆமோஸ் தான் தீர்க்கதரிசனமாக சொல்ல வேண்டிய வார்த்தைகளை, தரிசனமாகக் கண்டார். "அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்" (வெளி 1:12).

ஆமோஸ் தெக்கோவா ஊர் மேய்ப்பருக்குள் இருந்தார். இவர் அந்த ஊரிலிருந்த மேய்ப்பர்களில் ஒருவர். விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரிடத்தில் திரளான ஆடு மாடுகளின் மந்தை இருந்தது என்றும், பெரிய அளவில் இவர் ஆடு மாடுகளை வியாபாரம் செய்தவர் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்த வியாபாரத்தின் மூலமாயும் ஆமோஸ் ஒரு ஐசுவரியவானாயிருந்தார்.

ஆமோஸ் ஒரு ஐசுவரியவானல்ல என்றும், இவர் ஆடுகளை மேய்க்கிற சாதாரண மேய்ப்பர் என்றும், இவர் ஒரு ஏழை என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

"ஆமோஸ் அமத்சியாவுக்குப் பிரதியுத்தரமாக: நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன். ஆனால் மந்தையின் பின்னாலே போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்சொல்லு என்று கர்த்தர் உரைத்தார்" (ஆமோ 7:14,15).

ஆமோசுக்கு நேர்த்தியான போஜனம்கூட கிடைக்கவில்லை. அவர் காட்டத்திப்பழங்களை பொறுக்கிப் புசித்தார். காட்டத்திப்பழங்களே ஆமோசின் போஜனம். அவர் அந்த அளவுக்கு ஏழையாகவே இருந்தார்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களை கடிந்து சொல்லுவதற்கும், எச்சரிப்பதற்கும், ஒரு மேய்ப்பரை அனுப்புகிறார். இது கர்த்தருடைய தெய்வீக சித்தம். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரியமாக, தமக்கு சித்தமான யாரை வேண்டுமானாலும் அனுப்புவார். அவர்களை தகுதிப்படுத்துவார்.

ஆமோஸ் இஸ்ரவேலைக் குறித்து, தரிசனம் கண்டு, தீர்க்கதரிசனம் சொன்னார். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்த பத்துக்கோத்திரத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தைகள் உண்டாயிற்று. அவர்கள் துணிகரமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய கோபமும், அவருடைய நியாயத்தீர்ப்பும், அவர்களுக்கு சமீபமாய் வந்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு அழிவு சமீபமாயிற்று.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எச்சரிக்கிறார். அவர்கள் மத்தியில் தம்முடைய வார்த்தைகளை சொல்லுவதற்கு, கர்த்தர் தீர்க்கதரிசிகளை எழுப்புகிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தீர்க்கதரிசிகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை, அவர்களுடைய வார்த்தைகளுக்கும் செவிகொடுக்கவில்லை.

"உங்கள் குமாரரில் சிலரை தீர்க்கதரிசிகளாகவும், உங்கள் வாலிபரில் சிலரை நசரேயராகவும் எழும்பப்பண்ணினேன்; இஸ்ரவேல் புத்திரரே, இப்படி நான் செய்யவில்லையா என்று கர்த்தர் கேட்கிறார்" (ஆமோ 2:11).

தங்கள் தேசத்தைச் சேர்ந்த தீர்க்கதரிசிகள், கர்த்தருடைய வார்த்தைகளைச் சொன்னபோது, இஸ்ரவேல் புத்திரர், அந்த தீர்க்கதரிசிகளை அங்கீரிக்கவில்லை. தீர்க்கதரிசிகளுக்கு, தங்களுடைய சொந்த ஊரில் கனமுமில்லை, மதிப்பும் மரியாதையும் இல்லை. ஆகையினால் கர்த்தர் யூதாதேசத்திலுள்ள, தெக்கோவா என்னும் ஊரிலிருந்து, ஆமோசை, இஸ்ரவேல் தேசத்திற்கு தம்முடைய தீர்க்கதரிசியாக அனுப்புகிறார்.

ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொன்ன காலத்தில், இஸ்ரவேல் தேசத்திலும், யூதாதேசத்திலும் யாரெல்லாம் ஆட்சி செய்தார்கள் என்னும் விவரம் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் ஆமோஸ் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். உசியாவின் காலத்தில் யூதாதேசம் செழித்திருந்தது.

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுடைய குமாரனாகிய எரொபெயாமின் நாட்களில் ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொன்னார். இவர் இரண்டாம் எரொபெயாம். இவருடைய காலத்திலும், இஸ்ரவேல் தேசம் செழிப்பாகவே இருந்தது. ஆனால் ஜனங்களோ கர்த்தரைவிட்டு விலகி பாவம் செய்கிறார்கள்.

தேசம் செழிப்பாகயிருப்பதினால், ஜனங்கள் நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் கடினப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பாவங்களைக் குறித்தும், பாவங்களினிமித்தமாய் அவர்கள்மீது வரப்போகும். தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைக் குறித்தும், அவர்களுக்கு சொல்லவேண்டியது அவசியமாயிற்று.

தாங்கள் செழிப்பாகயிருப்பதினால், கர்த்தர் தங்களை ஆசீர்வதிப்பதாக இஸ்ரவேல் புத்திரர் நினைக்கிறார்கள். தங்களுக்கு பெரிய இராணுவமும், கோட்டைகளும், அரண்களும் இருப்பதினால், தாங்கள் பாதுகாப்பாயிருப்பதாக நினைக்கிறார்கள். தங்களுடைய சுயபலத்தை அவர்கள் நம்புகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில் பூமியதிர்ச்சி உண்டாக இரண்டு வருஷத்திற்கு முன்னே, ஆமோஸ் இஸ்ரவேலைக் குறித்து, தரிசனம் கண்டு, கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசினமாய்ச் சொன்னார். இந்தப் பூமியதிர்ச்சி உசியாவின் நாட்களில் உண்டாயிற்று.

"அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள்; மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால்மட்டும் போகும்; நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனதுபோல் ஓடிப்போவீர்கள்; என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்" (சக 14:5).

ஆமோஸ் தன்னுடைய தீர்க்கதரிசன செய்தியின் சுருக்கத்தை இங்கு சொல்லுகிறார். "கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; அதினால் மேய்ப்பரின் தாபரங்கள் துக்கங்கொண்டாடும்; கர்மேலின் கொடுமுடியும் காய்ந்துபோகும்" (ஆமோ 1:2).

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் சீயோனிலிருந்து கெர்ச்சிக்கிறார். தீர்க்கதரிசிகள் சொல்லும் கர்த்தருடைய வார்த்தைகள் சிங்கம் கெர்ச்சிப்பதுபோல இருக்கிறது. கர்த்தர் கெர்ச்சிக்கும் சத்தத்தைக் கேட்டு மேய்ப்பர்களும், அவர்களுடைய மந்தைகளும் பயந்து நடுங்கும்.

"அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவார்கள்; அவர் சிங்கத்தைப்போல் கெர்ச்சிப்பார்; அவர் கெர்ச்சிக்கும்போது அவர்கள் சந்ததியார் மேற்குத்திசையிலிருந்து நடுங்கி வருவார்கள்" (ஓசி 11:10).

"கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; வானமும் பூமியும் அதிரும்; ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்" (யோவே 3:16).

தமஸ்கு
ஆமோ 1:3-5

ஆமோ 1:3. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தமஸ்குவினுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அதின் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் கீலேயாத்தை இருப்புக் கருவிகளினால் போரடித்தார்களே.

ஆமோ 1:4. ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன்; அது பெனாதாதின் அரமனைகளைப் பட்சிக்கும்.

ஆமோ 1:5. நான் தமஸ்குவின் தாழ்ப்பாளை உடைத்து, குடிகளை ஆவேன் என்னும் பள்ளத்தாக்கிலும், செங்கோல் செலுத்துகிறவனைப் பெத்ஏதேனிலும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்; அப்பொழுது சீரியாவின் ஜனங்கள் கீருக்குச் சிறைப்பட்டுப்போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆமோஸ் மூலமாய் இங்கு சொல்லுகிற வார்த்தைகளை, அவர் எரேமியா மூலமாக சொன்ன வார்த்தைகளினால் விவரிக்கலாம்.

"இதோ, நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்குக் காணியாட்சியாகக் கொடுத்த என் சுதந்தரத்தைத் தொடுகிற துஷ்டரான அயலார் அனைவரையும் தங்கள் தேசத்தில் இராதபடிக்குப் பிடுங்கிப்போடுவேன் என்று, கர்த்தர் அவர்களைக்குறித்துச் சொல்லுகிறார்; யூதா வம்சத்தாரையும் அவர்கள் நடுவில் இராதபடிக்குப் பிடுங்கிப்போடுவேன்" (எரே 12:14).

தமஸ்கு இஸ்ரவேலுக்கு அருகாமையில், வடக்கு திசையிலுள்ள ஒரு தேசம். தீரு, காத்சா ஆகியவை இஸ்ரவேலுக்கு மேற்கிலும், ஏதோம் இஸ்ரவேலுக்கு தெற்கிலும், அம்மோனும் மோவாபும் இஸ்ரவேலுக்கு கிழக்கிலுமுள்ள தேசங்கள். இந்த தேசங்களெல்லாம் இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலிருந்த அண்டை தேசங்கள். இந்த தேசத்தார் இஸ்ரவேல் புத்திரர்களை மிகவும் கொடுமைப்படுத்தினார்கள்.

இஸ்ரவேலின் அண்டை தேசத்தார், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை தங்கள் தேவனாக அங்கீரித்து, அவரை ஆராதிக்கவில்லை. அவர்கள் புறஜாதியார். அவர்கள் கர்த்தரின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். ஆனாலும் கர்த்தரே சர்வலோகத்திற்கும் நியாயாதிபதியாயிருக்கிறார். புறஜாதியாரும் தங்களுடைய பாவங்களைக் குறித்து நியாயாதிபதியாகிய கர்த்தருக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் தேசத்திற்கு அண்டை தேசத்தாராயிருக்கிற எல்லோருமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்கிறார்கள். அந்த தேசத்தாரிடம் பொதுவான பாதகங்கள் காணப்படுகிறது. அவர்களுடைய, "மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒன்று, அல்லது இரண்டு என்பது குறைவான எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. மூன்று அல்லது நான்கு என்பது அதிகமான எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. இஸ்ரவேலின் அண்டை தேசத்தார், அதிகமான பாதகங்களை செய்கிறார்கள்.

அந்நிய தேசத்தார், இஸ்ரவேல் தேசத்தாரை கொடுமைப்படுத்துகிறார்கள். அவர்களை உபத்திரவப்படுத்துகிறார்கள். அந்நிய தேசத்தாருடைய பாதகங்களினிமித்தமாக, கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுக்கிறார். அவர்களுக்கு அழிவு வரும். சத்துருக்களுடைய பாவங்கள் ஒன்றுபோல இருப்பதினால், அவர்கள்மீது வரும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும் ஒன்றுபோலவே இருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிற அண்டை தேசத்தாரின் பாவங்கள் அதிகரித்திருக்கிறது. ஆகையினால் "நாம் அதில் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்" (ஆமோ 1:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய ஆக்கினையை நிச்சயமாகவே வரப்பண்ணுவார். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். நீதி தன்னுடைய கடமையைச் செய்யும்.

கர்த்தர் சத்துருக்களுடைய வீட்டிலே தீக்கொளுத்துவதாகவும் சொல்லுகிறார். அந்நிய தேசத்திலே கர்த்தர் தீக்கொளுத்துவார். அது அவர்களுடைய அரண்மனைகளை பட்சிக்கும் (ஆமோ 1:4,7,10,12,14). கர்த்தர் அவர்களுடைய நகரங்களிலே அக்கினியை அனுப்புவார்.

இஸ்ரவேல் தேசத்தாருக்கு, அவர்களுடைய அண்டை தேசத்தார் தீங்கு செய்கிறார்கள். அந்த தேசத்தாரைப்பற்றியும், அவர்கள் செய்கிற தீங்குகளைப்பற்றியும், அவர்கள்மீது வரப்போகிற கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளைப்பற்றியும், ஆமோஸ் இங்கு விரிவாகச் சொல்லுகிறார்.

தமஸ்கு சீரியா தேசத்து தலைநகரம். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தாரை பல சந்தர்ப்பங்களில் நெருக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு தீங்கு செய்திருக்கிறார்கள். அவர்கள் கீலேயாத்தை இருப்பு கருவிகளானால் போரடித்தார்கள் (ஆமோ 1:3).

சீரியர்கள் தங்கள் கைகளில் கிடைத்த இஸ்ரவேல் புத்திரரை அதிகமாய்க் கொடுமைப்படுத்தினார்கள். அவர்களை பட்டயத்தினால் வெட்டிக் கொன்றுபோட்டார்கள்.

தாவீது அம்மோன் புத்திரரை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும், இருப்புக் கோடரிகளுக்கும், உட்படுத்தியதுபோல, சீரியர்கள் இஸ்ரவேல் புத்திரரை பட்டயத்தினால் வெட்டிக்கொன்றுபோட்டார்கள்.

"பின்பு அதிலிருந்த ஜனங்களை அவன் வெளியே கொண்டுபோய், அவர்களை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும், இருப்புக் கோடரிகளுக்கும், உட்படுத்தி, அவர்களைச் செங்கற்சூளையையும் கடக்கப்பண்ணினான்; இப்படி அம்மோன் புத்திரரின் பட்டணங்களுக்கெல்லாம் செய்து, தாவீது எல்லா ஜனத்தோடுங்கூட எருசலேமுக்குத் திரும்பினான்" (2சாமு 12:31).

"யோவாகாசுக்குச் சீரியாவின் ராஜா, ஐம்பது குதிரைவீரரையும், பத்து இரதங்களையும், பதினாயிரம் காலாட்களையுமே அல்லாமல், ஜனங்களில் வேறொன்றும் மீதியாக வைக்கவில்லை; அவன் அவர்களை அழித்துப் போரடிக்கும் இடத்துத் தூளைப்போல ஆக்கிப்போட்டான்" (2இராஜா 13:7).

தமஸ்குவின் மனுஷர் இஸ்ரவேல் புத்திரருக்கு தீங்கு செய்ததினிமித்தமாக, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. கர்த்தர் ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவார். அது பெனாதாதின் அரண்மனைகளை பட்சிக்கும். கர்த்தர் அனுப்பும் அக்கினி, சீரியாவின் தலைநகரமாகிய தமஸ்குவை மாத்திரமல்ல, அது ஆசகேலின் வீட்டையும் பட்சித்துப்போடும்.

தமஸ்குவின் ஜனங்கள் தங்கள் நகரத்தைவிட்டு வெளியேறிப் போய்விடுவார்கள். "நான் தமஸ்குவின் தாழ்ப்பாளை உடைத்து, குடிகளை ஆவேன் என்னும் பள்ளத்தாக்கிலும், செங்கோல் செலுத்துகிறவனைப் பெத்ஏதேனிலும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்" (ஆமோ 1:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தமஸ்குவின் தாழ்ப்பாளை உடைப்பார். அவர்களுடைய வல்லமையையும், பாதுகாப்பையும் முறித்துப்போடுவார். தமஸ்கு பெரிய நகரமாகயிருந்தாலும், அது சத்துருக்களுக்கு முன்பாக விழுந்துபோகும். கர்த்தர் தமஸ்குவைத் தண்டிக்கிறார். தமஸ்கு பலனற்றுப்போகும்.

தமஸ்குவின் ஜனங்கள் பட்டயத்தினால் சங்காரமாவார்கள். கர்த்தர் தமஸ்குவின் குடிகளை ஆபேல் என்னும் பள்ளத்தாக்கிலே சங்காரம்பண்ணுவார்.

"சீரியாவின் ராஜாவுடைய ஊழியக்காரர் அவனைப் பார்த்து: அவர்களுடைய தேவர்கள் மலைத்தேவர்கள், அதினால் அவர்கள் நம்மை மேற்கொண்டார்கள்; நாம் அவர்களோடே சமபூமியிலே யுத்தம்பண்ணினால் நல்லது; அப்பொழுது அவர்களை மேற்கொள்வது நிச்சயம்" (1இராஜா 20:23).

தமஸ்குவில் செங்கோல் செலுத்துகிறவனை கர்த்தர் பெத்ஏதேனில் இராதபடிக்கு சங்காரம்பண்ணுவார்.

சீரியாவின் ஜனங்கள் கீருக்கு சிறைப்பட்டுப்போவார்கள். கீர் என்பது மேதிய தேசத்தைக் குறிக்கிறது. ஆமோஸ் இந்த தீர்க்கதரிசனத்தைச் சொல்லி ஐம்பது வருஷங்களுக்கு பின்பு, இது அப்படியே நிறைவேறுகிறது.

"அசீரியா ராஜா அவனுக்குச் செவிகொடுத்து, தமஸ்குவுக்குப்போய் அதைப்பிடித்து, அதின் குடிகளைக் கீர்பட்டணத்திற்குச் சிறைபிடித்துக் கொண்டுபோய், ரேத்சீனைக் கொன்றுபோட்டான்" (2இராஜா 16:9).

காத்சா
ஆமோ 1:6-8

ஆமோ 1:6. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: காத்சாவினுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அதின் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் சிறைப்பட்டவர்களை ஏதோமியரிடத்தில் ஒப்புவிக்கும்படி முழுதும் சிறையாக்கினார்களே.

ஆமோ 1:7. காத்சாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது அதினுடைய அரமனைகளைப் பட்சிக்கும்.

ஆமோ 1:8. நான் குடிகளை அஸ்தோத்திலும், செங்கோல் செலுத்துகிறவனை அஸ்கலோனிலும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணி, பெலிஸ்தரில் மீதியானவர்கள் அழியும்படிக்கு என் கையை எக்ரோனுக்கு விரோதமாகத் திருப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

காத்சா பெலிஸ்தியரின் பட்டணம். பெலிஸ்தியர்கள் சிறைப்பட்டவர்களை ஏதோமியரிடத்தில் ஒப்புவிக்கும்படி முழுவதும் சிறையாக்கினார்கள். பெலிஸ்தியரிடத்தில் இஸ்ரவேல் தேசத்தாரோ அல்லது யூதாதேசத்தாரோ சிறைப்பட்டிருக்கவேண்டும்.

இந்த சம்பவம் ஒருவேளை யோராமின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றிருக்கலாம்.

"அப்படியே கர்த்தர் பெலிஸ்தரின் ஆவியையும், எத்தியோப்பியாவுக்கடுத்த தேசத்தாரான அரபியரின் ஆவியையும் யோராமுக்கு விரோதமாக எழுப்பினார். அவர்கள் யூதாவில் வந்து, பலாத்காரமாய்ப் புகுந்து, ராஜாவின் அரமனையில் அகப்பட்ட எல்லாப் பொருள்களையும், அவன் பிள்ளைகளையும், அவன் மனைவிகளையும் பிடித்துக்கொண்டுபோனார்கள்; யோவாகாஸ் என்னும் அவன் குமாரரில் இளையவனை அல்லாமல் ஒரு குமாரனும் அவனுக்கு மீதியாக வைக்கப்படவில்லை" (2நாளா 21:16,17).

சனகெரிப் யூதாவின்மீது யுத்தம்பண்ண வந்தபோது, யூதர்கள் அவனுக்கு பயந்து ஜீவன் தப்பிக்க ஓடிப்போனார்கள். சனகெரிப் அவர்களைப் பிடித்து கிரேக்கரிடத்திலோ அல்லது ஏதோமியரிடத்திலோ விற்றுப்போட்டிருக்கவேண்டும்.

"தீருவே, சீதோனே, பெலிஸ்தியாவின் சகல எல்லைகளே, உங்களுக்கும் எனக்கும் என்ன? இப்படி எனக்குச் சரிக்கட்டுகிறீர்களோ? இப்படி எனக்குச் சரிக்கட்டுவீர்களாகில், நான் தாமதமின்றி அதிசீக்கிரமாய் நீங்கள் சரிக்கட்டுகிறதை உங்கள் தலையின்மேல் திரும்பும்படிசெய்வேன். நீங்கள் என் வெள்ளியையும் என் பொன்னையும் எடுத்து, இன்பமும் உச்சிதமுமான என் பொருள்களை உங்கள் கோவில்களிலே கொண்டுபோய், யூதாவின் குமாரரையும் எருசலேமின் குமாரரையும் அவர்களுடைய எல்லைகளுக்குத் தூரமாக்கும்படிக்கு கிரேக்கரிடத்தில் விற்றுப்போட்டீர்கள்" (யோவே 3:4-6).

பெலிஸ்தியர் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக தீங்கு செய்தார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் காத்சாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவார். அது அதினுடைய அரண்மனைகளை பட்சிக்கும் (ஆமோ 1:7).

கர்த்தர் பெலிஸ்தரை சங்காரம்பண்ணுவார். "நான் குடிகளை அஸ்தோத்திலும், செங்கோல் செலுத்துகிறவனை அஸ்கலோனிலும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணி, பெலிஸ்தரில் மீதியானவர்கள் அழியும்படிக்கு என் கையை எக்ரோனுக்கு விரோதமாகத் திருப்புவேன்" (ஆமோ 1:8) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

தீரு
ஆமோ 1:9,10

ஆமோ 1:9. மேலும்: தீருவினுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நாலுபாதகங்களினிமித்தமும், நான் அதின் ஆக்கினையைத் திருப்ப மாட்டேன்; அவர்கள் சகோதரரின் உடன்படிக்கையை நினையாமல், சிறைப்பட்டவர்களை முழுதும் ஏதோமியர் கையில் ஒப்பித்தார்களே.

ஆமோ 1:10. தீருவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது அதின் அரமனைகளைப் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீரு மிகப்பெரிய பட்டணம். இந்தப் பட்டணமே ஒரு சேதமாகவும் இருக்கிறது. தீரு தேசத்தார், சகோதரரின் உடன்படிக்கையை நினையாமல், சிறைப்பட்டவர்களை, முழுதும் ஏதோமியர் கையில் ஒப்புவித்தார்கள். தங்களிடத்தில் அடைக்கலம் தேடி வந்த இஸ்ரவேல் புத்திரரை, தீருவின் ஜனத்தார் பிடித்து, அவர்களை ஏதோமியரிடத்தில் விற்றுப்போட்டார்கள்.

கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக தீரு தீங்கு செய்தது. இதனால் தேவனுடைய கோபமும், நியாயத்தீர்ப்பும் தீருவின்மீது வருகிறது. கர்த்தர் தீருவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவார். அது அதின் அரண்மனைகளைப் பட்சிக்கும்.

ஆமோஸ் தீருவுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லி, பதிமூன்று வருஷங்களுக்கு பின்பு, நேபுகாத்நேச்சார் தீருவுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடுகிறான். அவன் தீருவைப் பிடித்து, அதின் மதிலுக்குள் தீக்கொளுத்துகிறான். அக்கினி தீருவின் அரண்மனைகளைப் பட்சித்துப்போடுகிறது. கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்கிறவர்களை கர்த்தர் தண்டிக்கிறார்.

ஏதோம்
ஆமோ 1:11,12

ஆமோ 1:11. மேலும்: ஏதோமுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவன் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவன் தன் சகோதரனைப் பட்டயத்தோடே தொடர்ந்து, தன் மனதை இரக்கமற்றதாக்கி, தன் கோபத்தினாலே என்றைக்கும் அவனைப் பீறிப்போட்டு, தன் மூர்க்கத்தை நித்தியகாலமாக வைத்திருக்கிறானே.

ஆமோ 1:12. தேமானிலே தீக்கொளுத்துவேன்; அது போஸ்றாவின் அரமனைகளைப் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏதோமியர் ஏசாவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் சகோதரனை பட்டயத்தோடே தொடருகிறார்கள். தங்கள் மனதை இரக்கமற்றதாக்குகிறார்கள். தங்கள் கோபத்தினாலே, தங்கள் சகோதரனை என்றைக்கும் பீறிப்போடுகிறார்கள். அவர்கள் தங்கள் சகோதரனுக்கு விரோதமாக தங்கள் மூர்க்கத்தை நித்திய காலமாக வைத்திருக்கிறார்கள். ஏதோமியர் இஸ்ரவேல் புத்திரருக்கு இரக்கம் காண்பிக்காமல், அவர்களை கொடூரமாகக் கொன்றுபோடுகிறார்கள்.

ஏதோமியரின் பழைய பகை, தொடர்ந்து நீடிக்கிறது.

"அதற்கு ஏதோம்: நீ என் தேசத்தின் வழியாய்க் கடந்துபோகக்கூடாது; போனால் பட்டயத்தோடே உன்னை எதிர்க்கப் புறப்படுவேன் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னான்" *(எண் 20:18).*

யூதாவின் மனுஷரையோ அல்லது இஸ்ரவேல் புத்திரரையோ சத்துருக்கள் துரத்தும்போது, ஏதோமியர் கர்த்தருடைய ஜனத்திற்கு பின்னால் வந்து, அவர்களை சங்காரம்பண்ணுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே தோற்று ஓடிப்போகிறார்கள். குற்றுயிராய் ஓடுகிறார்கள். ஏதோமியர்கள் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்காமல், தங்கள் மனதை இரக்கமற்றதாக்கி, அவர்களைப் பின்தொடர்ந்து, பீறிப்போடுகிறார்கள்.

ஏதோமியரின் பாவங்களினிமித்தமாக கர்த்தர் தேமானிலே தீக்கொளுத்துவார். அது போஸ்றாவின் அரண்மனைகளை பட்சிக்கும்.

அம்மோன் புத்திரர்
ஆமோ 1:13-15

ஆமோ 1:13. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: அம்மோன் புத்திரரின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்கள் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் தங்கள் எல்லைகளை விஸ்தாரமாக்கும்படிக்குக் கீலேயாத் தேசத்தின் கர்ப்பஸ்திரீகளைக் கீறிப்போட்டார்களே.

ஆமோ 1:14. ரப்பாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது யுத்தநாளின் முழக்கமாகவும், பெருங்காற்றின் புசலாகவும் அதின் அரமனைகளைப் பட்சிக்கும்.

ஆமோ 1:15. அவர்களுடைய ராஜாவும், அவனுடைய அதிபதிகளும் சிறைப்பட்டுப்போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரர் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக கோபமாயிருக்கிறார்கள். அவர்கள் கீலேயாத் தேசத்தின் கர்ப்பஸ்திரீகளை கீறிப்போட்டார்கள். இஸ்ரவேல் வம்சத்தையே அழித்துப்போடவேண்டும் என்பது அம்மோன் புத்திரரின் திட்டம். ஏற்கெனவே பிறந்தவர்களை மாத்திரமல்ல, இனிமேல் பிறக்கப்போகிறவர்களையும் அழித்துப்போடவேண்டுமென்று அவர்கள் கொடிய சிந்தனையோடிருக்கிறார்கள்.

தங்களுடைய எல்லையை விஸ்தாரம்பண்ணவேண்டுமென்று அம்மோன் புத்திரர் பேரசைப்படுகிறார்கள். கீலேயாத் தேசத்தை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ள விரும்புகிறார்கள்.

"அம்மோன் புத்திரரைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலுக்குக் குமாரர் இல்லையோ? அவனுக்குச் சுதந்தரவாளி இல்லையோ? அவர்கள் ராஜா காத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அதின் ஜனம் இவன் பட்டணங்களில் குடியிருப்பானேன்?" *(எரே 49:1).*

எரேமியாவின் தீர்க்கதரிசனத்தில் காத் தேசம் என்பது, கீலேயாத்தைக் குறிக்கிறது. இஸ்ரவேலுக்கு வாரிசு இல்லை என்று சொல்லி, அம்மோன் புத்திரர் கீலேயாத்தை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்கிறார்கள்.

அம்மோன் புத்திரர் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக தீங்கு செய்ததினால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் ரப்பாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவார். அது யுத்தநாளின் முழக்கமாகவும், பெருங்காற்றின் புசலாகவும், அதின் அரண்மனைகளைப் பட்சிக்கும்.

அம்மோன் புத்திரரும், அவர்களுடைய ராஜாவும், அவர்களுடைய அதிபதிகளும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப் போவார்கள். "அம்மோன் புத்திரரின் ராஜா" என்பதற்கு "மில்கோம்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பெயர் அம்மோனியரின் தெய்வமாகிய மோளேகைக் குறிக்கும். மோளேகு அம்மோன் புத்திரருக்கு ராஜாவைப்போல இருக்கிறது.

பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், அம்மோன் புத்திரரை சிறைப்பிடித்து, அந்த தேசத்திலுள்ள மோளேகையும் தன்னுடைய தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விடுகிறான். அம்மோன் புத்திரர் தங்களுடைய பாதுகாப்புக்கு மோளேகை நம்பினார்கள். ஆனால் மோளேகோ, அம்மோன் புத்திரரோடுகூட, பாபிலோன் தேசத்திலே, சிறை வைக்கப்பட்டிருக்கிறது.

2 அதிகாரம்

கர்த்தர் மற்ற அந்நிய தேசத்தாருடைய பாவங்களை விசாரிப்பதுபோலவே, மோவாபியரின் பாவங்களையும் விசாரிக்கிறார் (ஆமோ 2:1-3). கர்த்தருக்கு யூதாதேசத்தின் மீதும் வழக்கு இருக்கிறது (ஆமோ 2:4,5).

இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அநியாயம், தரித்திரரை ஒடுக்குதல், ஆவிக்குரிய வேசித்தனம் ஆகியவை இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களாகும் (ஆமோ 2:6-8).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் காண்பித்தார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவில்லை (ஆமோ 2:9-12). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை வெளிப்படுத்துகிறார் (ஆமோ 2:13). இஸ்ரவேல் புத்திரருக்கு, அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அழிவு வரும் (ஆமோ 2:14-16).

மோவாபியர்
ஆமோ 2:1-3

ஆமோ 2:1. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: மோவாபின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவன் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவன் ஏதோமுடைய ராஜாவின் எலும்புகளை நீறாகச் சுட்டுப்போட்டானே.

ஆமோ 2:2. மோவாப்தேசத்தில் தீக்கொளுத்துவேன்; அது கீரியோத்தின் அரமனைகளைப் பட்சிக்கும்; மோவாபியர் அமளியோடும் ஆர்ப்பரிப்போடும் எக்காள சத்தத்தோடும் சாவார்கள்.

ஆமோ 2:3. நியாயாதிபதியை அவர்கள் நடுவில் இராதபடிக்கு நான் சங்காரம்பண்ணி, அவனோடுகூட அவர்களுடைய பிரபுக்களையெல்லாம் கொன்றுபோடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மோவாபியருக்கு விரோதமாக வருகிறது. மோவாபியர்கள் யாருக்கும் இரக்கம் காண்பிக்காமல் எல்லோரையும் கொடுமைப்படுத்துகிறார்கள். கர்த்தர் மோவாபியர்மீது குற்றம் சொல்லுகிறார்.

மோவாபியர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக தீங்கு செய்யவில்லை. அவர்கள் ஏதோமுடைய ராஜாவின் எலும்புகளை நீறாக சுட்டுப்போட்டார்கள். ஏதோமியருக்கும் மோவாபியருக்கும் யுத்தமுண்டாயிற்று. இந்த யுத்தத்தில் மோவாபின் ராஜா, தன்னுடைய சொந்த குமாரனை, தன்னுடைய விக்கிரக தெய்வத்திற்கு தகனபலியாக சுட்டெரித்துப்போட்டான்.

"யுத்தம் மும்முரமாகிறதென்று மோவாபியரின் ராஜா கண்டபோது, அவன் ஏதோமின் ராஜாவின்மேல் வலுமையாய் விழுகிறதற்குப் பட்டயம் உருவுகிற எழுநூறுபேரைக் கூட்டிக் கொண்டுபோனான்; ஆனாலும் அவர்களாலே கூடாமற்போயிற்று. அப்பொழுது அவன் தன் ஸ்தானத்தில் ராஜாவாகப்போகிற தன் சேஷ்டபுத்திரனைப் பிடித்து, அலங்கத்தின்மேல் அவனைச் சர்வாங்க தகனமாக பலியிட்டான்; அப்பொழுது இஸ்ரவேலர்மேல் கடுங்கோபம் மூண்டதினால், அவர்கள் அவனைவிட்டுப் புறப்பட்டு, தங்கள் தேசத்திற்குத் திரும்பிவிட்டார்கள்" (2 இராஜா 3:26,27).

இதன்பின்பு மோவாபின் ராஜாவோ அல்லது அவனுடைய சந்ததியில் வந்த வேறு ராஜாக்களோ, ஏதோமின் ராஜாவை உயிரோடு பிடித்து, அவனை அக்கினியில் சுட்டெரித்துப்போட்டார்கள். அல்லது அவனுடைய சரீரத்தை பட்டயத்தினால் வெட்டி, அவனுடைய சரீரத்தின் அவயங்களை சுட்டெரித்தார்கள். அல்லது மரித்துப்போன ஏதோமின் ராஜாவினுடைய எலும்புகளை கல்லறையிலிருந்து தோண்டி எடுத்து, அதை நீறாக சுட்டுப்போட்டார்கள்.

மோவாபியருடைய பாதகங்களினிமித்தம் அவர்களுக்கு அழிவு வருகிறது. மோவாப் மரித்துப்போவான். மோவாபியர் பட்டயத்தினாலே சங்காரமாவார்கள். மோவாபியரின் ராஜாவும், அவனுடைய நியாயாதிபதிகளும், பிரபுக்களும், பட்டயத்தினால் ஏகமாய் செத்துப்போவார்கள்.

மோவாபியருடைய பாதகங்களினிமித்தமாய் கர்த்தர் மோவாப்தேசத்தில் தீக்கொளுத்துவார்; அது கீரியோத்தின் அரமனைகளைப் பட்சிக்கும்; மோவாபியர் அமளியோடும் ஆர்ப்பரிப்போடும் எக்காள சத்தத்தோடும் சாவார்கள் (ஆமோ 2:2).

"நியாயாதிபதியை அவர்கள் நடுவில் இராதபடிக்கு நான் சங்காரம் பண்ணி, அவனோடுகூட அவர்களுடைய பிரபுக்களையெல்லாம் கொன்றுபோடுவேன்" (ஆமோ 2:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்

யூதாவின் பாதகங்கள்
ஆமோ 2:4,5

ஆமோ 2:4. மேலும்: யூதாவின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்கள் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் மோசம்போனார்களே.

ஆமோ 2:5. யூதாவிலே நான் தீக்கொளுத்துவேன்; அது எருசலேமின் அரமனைகளைப் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தெற்கு யூதாதேசம், வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலுள்ளது. யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். ஆனால் அவர்களோ புறஜாதியாரைப்போல பாவம் செய்கிறார்கள். யூதாவின் மனுஷர் புறஜாதியாரோடு சேர்ந்து விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள்.

கர்த்தர், "யூதாவின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்கள் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்" (ஆமோ 2:4) என்று சொல்லுகிறார்.

அவர்கள் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் மோசம்போனார்கள் (ஆமோ 2:4).

கர்த்தர் யூதாவின்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார். அவர் யூதாவிலே தீக்கொளுத்துவார். அது எருசலேமின் அரண்மனைகளை பட்சிக்கும். எருசலேம் கர்த்தருடைய பரிசுத்தமான நகரம். எருசலேமில் கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, பாவிகள்மீது வரும் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு, யூதாவின் மனுஷர்மேலும் வருகிறது. பாவம் செய்கிறவர்கள் அழிந்துபோவதுபோல, யூதாவின் மனுஷரும் அழிந்துபோகிறார்கள். அவர்களுடைய தேசம் அக்கினிக்கு இரையாவதுபோல, யூதாவும், எருசலேமும் அக்கினிக்கு இரையாகிறது.

அந்நிய தேசத்தார் மனுஷருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். யூதாவின் மனுஷரோ கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வேதத்தை வெறுத்தார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொள்ள மறுத்தார்கள். தங்களுடைய பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் யூதாவின் மனுஷர் மோசம்போனார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய ஜனமாகயிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கு அந்நியராயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஞானத்தையும், நீதியையும், அவர்கள் வெறுத்துவிடுகிறார்கள். கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு கர்த்தரிடத்திலிருந்து நன்மை உண்டாகாமல், அழிவு உண்டாகிறது.

"தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் மோசம்போனார்கள்" என்னும் வாக்கியத்திற்கு, "தங்கள் பிதாக்கள் பின்பற்றின விக்கிரகங்களினால் மோசம் போனார்கள்" என்பது பொருளாகும். விக்கிரகம் ஒரு பொய். அது ஒரு மாயை. விக்கிரகங்கள் யூதர்களை, கர்த்தரைவிட்டு வழிவிலகி போகச்செய்கிறது. அவர்களை தவறான பாதைகளில் வழிநடத்துகிறது. யூதாவின் மனுஷர் கர்த்தரைப் பின்பற்றாமல், விக்கிரகங்களைப் பின்பற்றி மோசம்போகிறார்கள்.

இஸ்ரவேலின் பாதகங்கள் ஆமோ 2:6-8

ஆமோ 2:6. மேலும்: இஸ்ரவேலின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்களுடைய ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் நீதிமானைப் பணத்துக்கும், எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப்போட்டார்களே.

ஆமோ 2:7. அவர்கள் தரித்தருடைய தலையின்மேல் மண்ணை வாரி இறைத்து, சிறுமையானவர்களின் வழியைப் புரட்டுகிறார்கள்; என் பரிசுத்த நாமத்தைக் குலைச்சலாக்கும்படிக்கு மகனும் தகப்பனும் ஒரு பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள்.

ஆமோ 2:8. அவர்கள் சகல பீடங்களருகிலும் அடைமானமாய் வாங்கின வஸ்திரங்களின்மேல் படுத்துக்கொண்டு, தெண்டம் பிடிக்கப்பட்டவர்களுடைய மதுபானத்தைத் தங்கள் தேவர்களின் கோவிலிலே குடிக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோஸ் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருக்கும், மற்ற புறஜாதி மனுஷருக்கும் எந்த வித்தியாசமுமில்லை. புறஜாதியார் பாதகங்களை செய்வதுபோல, இஸ்ரவேல் புத்திரரும் பாதகங்களை செய்கிறார்கள். புறஜாதி ஜனங்களிடம் அதிகமான பாதங்கள் இருப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரரிடமும் அதிகமான பாதங்கள் இருக்கிறது.

ஆகையினால் கர்த்தர், "இஸ்ரவேலின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்களுடைய ஆக்கினையைத் திருப்பமாட்டேன்" (ஆமோ 2:6) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் நீதியைப் புரட்டுகிறார்கள். சத்தியத்தை அவமாக்குகிறார்கள். சொற்ப விலைகளுக்கு சத்தியத்தை விற்றுப்போடுகிறார்கள். அவர்கள் நீதிமானை பணத்திற்கும், எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப்போடுகிறார்கள். பரிதானம் வாங்கி அநீதியான தீர்ப்பு சொல்லுகிறார்கள்.

நியாயாதிபதிகளுடைய மனச்சாட்சி சுத்தமாயில்லை. ஒரு ஜோடு பழைய பாதரட்சை சொற்ப கிரயமானது. அந்தக் கிரயத்திற்குகூட நியாயாதிபதிகள் நீதியை விற்றுவிடுகிறார்கள். இஸ்ரவேல் தேசத்தில் நீதிக்கு முக்கியத்துவம் இல்லை. அங்கே பணத்திற்கு மாத்திரமே முக்கியத்துவம் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரரை ஒடுக்குகிறார்கள். அவர்கள் தரித்திரருடைய தலையின்மேல் மண்ணை வாரி இறைக்கிறார்கள். சிறுமையானவர்களின் வழியை புரட்டுகிறார்கள். தங்கள் பெற்றோர் மரித்துப்போகும்போது, தரித்திரர்கள் தங்கள் தலையின்மீது மண்ணை வாரி இறைத்து துக்கங்கொண்டாடுவார்கள். இஸ்ரவேல் தேசத்தின் நியாயாதிபதிகளே, இவர்களுடைய துக்கத்திற்கு காரணமாயிருக்கிறார்கள். தரித்திரருடைய சம்பத்துக்களையும், நிலங்களையும், ஜீவன்களையும் அநியாயமாக பறித்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அசுத்தமும், அருவருப்பும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள். மகனும் தகப்பனும் ஒரு பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சகல பீடங்களருகிலும் அடைமானமாய் வாங்கின வஸ்திரங்களின்மேல் படுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் தெண்டம் பிடிக்கப்பட்டவர்களுடைய மதுபானத்தைத் தங்கள் தேவர்களின் கோவிலிலே குடிக்கிறார்கள் (ஆமோ 2:8).

அடமானமாய் வாங்கின வஸ்திரங்களை, இரவு வேளைக்குள், வஸ்திரத்தின் உரிமையாளரிடம் திருப்பி கொடுத்துவிடவேண்டும். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ அடமானமாய் வாங்கின வஸ்திரங்களின்மேல் இரவு முழுவதும் படுத்துக்கொண்டு, கர்த்தருக்கு விரோதமாகவும், தரித்திரருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள்.

"அவன் தரித்திரனானால், நீ அவன் அடகை வைத்துக்கொண்டு நித்திரை செய்யாமல், அவன் தன் வஸ்திரத்தைப் போட்டுப் படுத்துக்கொண்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, பொழுதுபோகும்போது, திரும்ப அந்த அடகை அவனுக்குக் கொடுத்து விடவேண்டும்; அது உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உனக்கு நீதியாயிருக்கும்" (உபா 24:12,13).

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே நீதியுமில்லை நியாயமுமில்லை. நியாதிபதிகள் பரிதானம் வாங்குகிறார்கள். பரிதானத்தை பணமாகவும் வாங்குகிறார்கள். மதுபானமாகவும் வாங்குகிறார்கள். அநியாயமாக வாங்கின மதுபானத்தை விக்கிரகக்கோவில்களில் குடிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய தேவர்களின் கோவிலிலே பொன்கன்றுக்குட்டிகளை செய்து வைத்திருக்கிறார்கள். தேவர்களின் கோவிலில் மதுபானம் குடிப்பது, பாவநிவாரண பலிக்கு சமமானது என்பது அவர்களுடைய நம்பிக்கை. மதுபானம் குடித்து வெறித்திருக்கிறவர்கள் புத்திதெளிவில்லாமல் பாவம் செய்கிறார்கள். கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரருடைய பாதகங்களிமித்தம், அவர்கள்மீது தம்முடைய ஆக்கினைத்தீர்ப்பைக் கொடுப்பார்.

இஸ்ரவேலின் ஆசீர்வாதம்
ஆமோ 2:9-12

ஆமோ 2:9. நானோ: கேதுருமரங்களைப்போல் உயரமும், கர்வாலி மரங்களைப்போல் வைரமுமாயிருந்த எமோரியனை அவர்களுக்கு முன்பாக அழித்தேன்; உயர இருந்த அவனுடைய கனியையும், தாழ இருந்த அவனுடைய வேர்களையும் அழித்துப்போட்டு,

ஆமோ 2:10. நீங்கள் எமோரியனுடைய தேசத்தைக் கட்டிக்கொள்ளும்படிக்கு உங்களை நான் எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி, உங்களை நாற்பது வருஷமாக வனாந்தரத்திலே வழிநடத்தி,

ஆமோ 2:11. உங்கள் குமாரரில் சிலரை தீர்க்கதரிசிகளாகவும், உங்கள் வாலிபரில் சிலரை நசரேயராகவும் எழும்பப்பண்ணினேன்; இஸ்ரவேல் புத்திரரே, இப்படி நான் செய்யவில்லையா என்று கர்த்தர் கேட்கிறார்.

ஆமோ 2:12. நீங்களோ நசரேயருக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடுத்து, தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்ல வேண்டாம் என்று கற்பித்தீர்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர்களுக்கு தாம் செய்த நன்மைகளை இப்போது நினைவுபடுத்துகிறார். "இஸ்ரவேல் புத்திரரே, இப்படி நான் செய்யவில்லையா" (ஆமோ 2:11) என்று கர்த்தர் அவர்களிடத்தில் கேட்கிறார்.

கர்த்தர் தங்களுக்கு செய்த எல்லா நன்மைகளையும் இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூரவேண்டும். கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினார். கர்த்தர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்காமல் இருந்திருந்தால், இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே, அடிமைகளாகவே செத்துப்போயிருப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களை நாற்பது வருஷமாக, வனாந்தரத்திலே வழிநடத்தினார். அங்கே அவர்களுக்கு மன்னாவைப் புசிக்கக் கொடுத்தார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாகக் கொடுத்தார். கர்த்தர் அவர்களுக்கு முன்பாக எமோரியரை அழித்தார். அவர்கள் பெரிய உருவம் கொண்ட பலசாலிகள். எமோரியரின் உயரம் கேதுரு மரங்களைப்போல இருந்தது. அவர்கள் கர்வாலி மரங்களைப்போல வைரமாயிருந்தார்கள். அவர்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர் வெட்டுக்கிளிகளைப்போல சாதாரண ஜனங்களாயிருந்தார்கள்.

கர்த்தரோ எமோரியருக்கு உயரே இருந்த கனியையும், தாழ இருந்த அவனுடைய வேர்களையும் அழித்துப்போட்டார். எமோரியர்கள் வேரோடு அழிக்கப்பட்டார்கள். ஆகையினால் அவர்களால் மறுபடியும் ஒரு தேசமாக எழும்ப முடியவில்லை. எமோரியருக்கு பூரண அழிவும், பூரண சங்காரமும் உண்டாயிற்று.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இவ்விதமாக பெரிய நன்மைகளை செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு நன்றியுள்ளர்களாயில்லை. கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை இஸ்ரவேல் புத்திரர் மறந்துவிடுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் தேசம் கர்த்தருக்கு பரிசுத்தமான தேசம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆவிக்குரிய நன்மைகளையும், ஆவிக்குரிய சிலாக்கியங்களையும் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவித்து வருகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய குமாரரில் சிலரை தீர்க்கதரிசிகளாக எழும்பப்பண்ணினார். அவர்களுடைய வாலிபரில் சிலரை நசரேயராகவும் எழுப்பப்பண்ணினார். தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டு, அதை ஜனங்களுக்கு சொன்னார்கள். கர்த்தருடைய சித்தமும், அவருடைய மனதும், விருப்பமும், தீர்க்கதரிசிகள் மூலமாய் இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கப்பட்டது.

தங்கள் மத்தியில் தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளை தங்களுக்கு அறிவிப்பது இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் நசரேயர்களும் இருந்தார்கள். அவர்கள் பரிசுத்தத்திற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் மத்தியிலே ஜீவித்தார்கள். ஜனங்கள் மத்தியில் துன்மார்க்கமும், மாறுபாடுகளும், பாவங்களும் அதிகமாயிருக்கும்போது, நசரேயர்கள் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருப்பதற்கும், பயபக்தியாயிருப்பதற்கும், பரிசுத்தமாயிருப்பதற்கும் சாட்சிகளாக ஜீவித்தார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கிருபைகளையும், இரக்கங்களையும் வெளிப்படுத்தினார். அவர்களுக்கு ஆவிக்குரிய நன்மைகளைக் கொடுத்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய கிருபைகளை அசட்டைபண்ணிவிடுகிறார்கள். அவர்கள் நசரேயருக்கு திராட்சரசம் குடிக்க கொடுக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் தங்களுக்கு தீர்க்கதரிசனம் சொல்லவேண்டாம் என்று கற்பிக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே நல்லவர்கள் யாரும் இராதவாறு இஸ்ரவேல் புத்திரர் பார்த்துக்கொள்கிறார்கள். நசரேயர்களைப்போல யாராவது நல்லவர்கள் இருந்தால், அவர்களை உடனே கெடுத்துப்போடுகிறார்கள். நசரேய விரதம் இருக்கிறவர்கள் திராட்சரசம் பானம்பண்ண மாட்டார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ நசரேயருக்கு திராட்சரசம் குடிக்க கொடுத்து, அவர்களுடைய நசரேய விரதத்தை பாழாக்கிப்போடுகிறார்கள்.

தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லுகிறார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தீர்க்கதரிசிகளுக்கு கட்டளைகொடுக்கிறார்கள். "நீங்கள் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டாம்" என்று அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்கள். அதையும் மீறி அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னால், அவர்களுடைய ஜீவனுக்கு ஆபத்து வரும் என்று அவர்களை எச்சரிக்கிறார்கள்.

"அமத்சியா ஆமோசை நோக்கி: தரிசனம் பார்க்கிறவனே, போ; நீ யூதாதேசத்துக்கு ஓடிப்போ, அங்கே அப்பம் தின்று, அங்கே தீர்க்கதரிசனம்சொல்லு" (ஆமோ 7:12) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேலின் அழிவு ஆமோ 2:13-16

ஆமோ 2:13. இதோ, கோதுமைக்கட்டுகள் நிறைபாரமாக ஏற்றப்பட்ட வண்டியில் இருத்துகிறதுபோல, நான் உங்களை நீங்கள் இருக்கிற ஸ்தலத்தில் இருத்துவேன்.

ஆமோ 2:14. அப்பொழுது வேகமானவன் ஓடியும் புகலிடமில்லை; பலவான் தன் பலத்தினால் பலப்படுவதுமில்லை; பராக்கிரமசாலி தன் பிராணனைத் தப்புவிப்பதுமில்லை.

ஆமோ 2:15. வில்லைப் பிடிக்கிறவன் நிற்பதுமில்லை; வேகமானவன் தன் கால்களால் தப்பிப்போவதுமில்லை; குதிரையின்மேல் ஏறுகிறவன் தன் பிராணனை இரட்சிப்பதுமில்லை.

ஆமோ 2:16. பலசாலிகளுக்குள்ளே தைரியவான் அந்நாளிலே நிர்வாணியாய் ஓடிப்போவான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகிறார்கள். துணிகரமாகப் பாவம் செய்கிறார்கள்.

"இதோ, கோதுமைக்கட்டுகள் நிறைபாரமாக ஏற்றப்பட்ட வண்டியில் இருத்துகிறதுபோல, நான் உங்களை நீங்கள் இருக்கிற ஸ்தலத்தில் இருத்துவேன்" (ஆமோ 2:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பாவங்கள் மிகுதியாயிருக்கிறது. அறுவடைக்காலத்தில், கோதுமைக்கட்டுகளை வண்டியிலே நிறைபாரமாக ஏற்றுவார்கள். ஒரு வண்டியில் எவ்வளவு அதிகமாக கோதுமைக்கட்டுகளை ஏற்ற முடியுமோ, அவ்வளவு அதிகமாக ஏற்றுவார்கள். அவற்றை இருத்திக்கட்டுவார்கள். அதுபோலவே, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை, அவர்கள் இருக்கிற ஸ்தலத்திலே, இருத்திக்கட்டுகிறார்.

"எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப்போலாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப் போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது. என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன்; எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன்; ஏனென்றால் நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன்; நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர்; ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாக வரேன்" (ஓசி 11:8,9).

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள் அதிமாகயிருப்பதினால், அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது. அவர்களுக்கு நிச்சயமாகவே அழிவு வரும். கோதுமைக்கட்டுகளை வண்டியிலே நிறைபாரமாக கட்டுவதுபோல, இஸ்ரவேல் புத்திரர்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கள் நிறைபாரகமாக கட்டப்படும். அவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளை தாங்கமுடியாமல் அழிந்துபோவார்கள்.

கர்த்தர் ஒவ்வொரு நாளும் நம்மீது தம்முடைய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் சுமத்துகிறார். வண்டியில் பாரம் ஏற்றுவதுபோல, கர்த்தருடைய நன்மைகள் நம்மீது ஏற்றப்படுகிறது.

நாம் கர்த்தருடைய நன்மைகளுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் நன்மைகளை மறந்து, நாம் பாவம் செய்யும்போது, நாம் வண்டியில் அநுதினமும் பாவசுமைகளை ஏற்றுக்கிறவர்களாகயிருக்கிறோம்.

கர்த்தர் நமக்கு நன்மை செய்யும்போது, நாம் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்தால், கர்த்தர் நம்மீது தம்முடைய நியாயத்தீர்ப்புகளை சுமத்துவார்.

அசீரியர்கள் இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வருவார்கள். அவர்கள் தேசத்தை பாழும் வனாந்தரமுமாக்கிப் போடுவார்கள். இஸ்ரவேல் புத்திரரை பட்டயத்தினால் வெட்டிக்கொன்று போடுவார்கள். மீதமுள்ளவர்களை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோய்விடுவார்கள். அசீரியருடைய சிறையிருப்புக்கு ஒருவரும் தப்பிக்க முடியாது.

தங்களுக்கு ஆபத்து வரும்போது, இஸ்ரவேல் புத்திரரால், தங்களுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ தப்பித்து ஓடமுடியாது. இஸ்ரவேல் புத்திரரில் சிலர் குதிரைகளில் ஏறி வேகமாய் தப்பித்து ஓடவிடலாம் என்று நினைப்பார்கள். ஆனால் அவர்களால் அசீரியருக்கு தப்பிக்க முடியாது.

வில் வைத்திருக்கிறவர்கள், அசீரியருக்கு விரோதமாக தங்களால் யுத்தம்பண்ண முடியும் என்று நினைப்பார்கள். ஆனால் அவர்களால் அசீரியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியாது.

அசீரியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது "வேகமானவன் ஓடியும் புகலிடமில்லை; பலவான் தன் பலத்தினால் பலப்படுவதுமில்லை; பராக்கிரமசாலி தன் பிராணனைத் தப்புவிப்பதுமில்லை. வில்லைப் பிடிக்கிறவன் நிற்பதுமில்லை; வேகமானவன் தன் கால்களால் தப்பிப்போவதுமில்லை; குதிரையின்மேல் ஏறுகிறவன் தன் பிராணனை இரட்சிப்பதுமில்லை" (ஆமோ 2:14,15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அசீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண இஸ்ரவேல் புத்திரரால் முடியாது. இஸ்ரவேல் புத்திரருக்கு பலமும் இருக்காது, பராக்கிரமமும் இருக்காது. அவர்களுடைய ஆயுதங்களும் அவர்களுக்கு உதவி செய்யாது.

"பலசாலிகளுக்குள்ளே தைரியவான் அந்நாளிலே நிர்வாணியாய் ஓடிப்போவான்" (ஆமோ 2:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

3 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவேண்டும். தேவனுடைய நியாயத்தீர்ப்புகளும், அவருடைய எச்சரிப்புகளும் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் உணர்வடைந்து, தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும் (ஆமோ 3:1-8).

இஸ்ரவேல் புத்திரர் செய்கிற பாவங்கள் அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்கள்மீது கோபப்படுகிறார். அவர்களைத் தண்டிக்கப்போவதாக சொல்லுகிறார். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்படவில்லையென்றால், அவர்களுக்கு தேவனிடத்திலிருந்து நியாயத்தீர்ப்பு வரும் (ஆமோ 3:9-15).

அக்கிரமக்காரருக்கு தண்டனை ஆமோ 3:1-8

ஆமோ 3:1. இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தராகிய நான் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின முழுக்குடும்பமாகிய உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய இந்த வசனத்தைக்கேளுங்கள்.

ஆமோ 3:2. பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களை தண்டிப்பேன்.

ஆமோ 3:3. இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ?

ஆமோ 3:4. தனக்கு இரை அகப்படாமலிருக்கக் காட்டிலே சிங்கம் கெர்ச்சிக்குமோ? இரை பிடியாமல் இருக்கும்போது பாலசிங்கம் தன் கெபியிலிருந்து சத்தமிடுமோ?

ஆமோ 3:5. குருவிக்குத் தரையிலே சுருக்குப்போடப்படாதிருந்தால், அது கண்ணியில் அகப்படுமோ? ஒன்றும் படாதிருக்கையில், கண்ணி தரையிலிருந்து எடுக்கப்படுமோ?

ஆமோ 3:6. ஊரில் எக்காளம் ஊதினால், ஜனங்கள் கலங்காதிருப்பார்களோ? கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ?

ஆமோ 3:7. கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.

ஆமோ 3:8. சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். கர்த்தர் இதுவரையிலும் அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொன்னார். இப்போதோ அவர்களுக்கு தம்முடைய கடிந்துகொள்ளும் வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கர்த்தர் இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரர்மீது கிருபையும், அன்பும், இரக்கமும் உள்ளவராயிருந்தார். அவர்களுக்கு தம்முடைய விசேஷித்த சிலாக்கியங்களைக் காண்பித்தார். இப்போதோ கர்த்தருடைய கிருபைகளும், அவருடைய விசேஷித்த சிலாக்கியங்களும் இஸ்ரவேல் புத்திரரைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்களெல்லோரும், தங்களுடைய பாவங்களுக்கு ஏற்ற தண்டனைகளை அனுபவிப்பார்கள். இதில் பட்சபாதம் எதுவுமில்லை. இஸ்ரவேல் புத்திரரை கர்த்தர் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினார். அவர்கள் கர்த்தருக்கு முழுக்குடும்பமாயிருக்கிறார்கள் (ஆமோ 3:1).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திற்கு போனபோது எப்படியிருந்தார்களோ, அப்படி அங்கிருந்து வெளியேறியபோது இல்லை. எகிப்திற்குப்போனபோது அவர்கள் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாய்ப்போனார்கள். எகிப்து தேசத்திலிருந்து வெளியேறியபோதோ, அவர்கள் திரளான எண்ணிக்கையுள்ளவர்களாக வெளியேறி வருகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமக்கு விசேஷித்த ஜனமாகத் தெரிந்துகொள்கிறார். இஸ்ரவேல் புத்திரர் முழுக்குடும்பமாகயிருக்கிறார்கள். அந்த முழுக்குடும்பத்தையுமே கர்த்தர் தமக்கு சொந்தமாக்கிக்கொள்கிறார்.

பூமியில் ஏராளமான வம்சங்கள் இருக்கிறார்கள். ஏராளமான ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாருக்குள்ளும், கர்த்தர் யூதாவின் புத்திரரை மாத்திரமே அறிந்துகொண்டார். யூதா கர்த்தரால் அறிந்துகொள்ளப்பட்டவர்கள். கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். கர்த்தர் அவர்களிடத்தில் தம்முடைய விருப்பங்களையும், திட்டங்களையும், பிரமாணங்களையும் சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் புத்திரரை அறிந்துகொண்டபடியினால், அவர்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். கர்த்தர் நம்மீது அன்பாகயிருந்தாலும், அவர் நமக்கு விசேஷித்த கிருபைகளையும், சிலாக்கியங்களையும் கொடுத்தாலும், நாம் பாவத்திற்கு விலகி ஜீவிக்கவேண்டும்.

நாம் பாவத்தில் நிலைத்திருந்தால், நமக்கும் கர்த்தருடைய தண்டனை கிடைக்கும். நாம் கர்த்தருக்கு விசேஷமானவர்கள் என்பதினால், நம்முடைய பாவங்களுக்கு வரும் தண்டனையிலிருந்து நம்மால் தப்பிக்க முடியாது. கர்த்தரிடத்தில் பட்சபாதமுமில்லை, பாரபட்சமுமில்லை.

கர்த்தர் மகிமையும் மாட்சிமையுமுள்ளவர். அவர் நம்முடைய துதிகளுக்கு பாத்திரர். அவர் பொதுவாகவே பாவத்தை வெறுக்கிறவர். அதிலும் விசேஷமாய், தமக்கு அருகாமையிலிருக்கிற ஜனத்தாரிடம், பாவமே இருக்கக்கூடாது என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாகயிருக்கிறவர்கள், தங்கள் பாவத்தைவிட்டு விலகி, மிகுந்த பரிசுத்தத்தோடிருக்கவேண்டும். அவர்கள் பரிசுத்தத்திலும் விசேஷித்தவர்களாயிருக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு சமாதானமாயிருக்கவேண்டும். சமாதானமில்லாமல் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்க முடியாது. சமாதானமில்லாத ஐக்கியத்தில் ஆறுதலோ, சந்தோஷமோ இருக்காது. "இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ?" (ஆமோ 3:3) என்று கர்த்தர் கேட்கிறார். ஒருமனப்படாமல் ஒருமித்து நடக்க முடியாது. சிநேகமில்லையென்றால் அங்கு ஐக்கியம் இருக்காது.

இஸ்ரவேல் புத்திரர் தெய்வபக்தியில்லாமலிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும் என்னும் எச்சரிப்பின் வார்த்தைகள் அவர்களுக்கு சொல்லப்படுகிறது.

கர்த்தர் ஆதாரமில்லாமலோ அல்லது காரணமில்லாமலோ இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயத்தீர்ப்பு வரும் என்று எச்சரிக்கவில்லை. கர்த்தர் ஆதாரத்தோடு பேசுகிறார். அவர் காரணத்தோடு அவர்களை எச்சரிக்கிறார்.

"தனக்கு இரை அகப்படாமலிருக்கக் காட்டிலே சிங்கம் கெர்ச்சிக்குமோ? இரை பிடியாமல் இருக்கும்போது பாலசிங்கம் தன் கெபியிலிருந்து சத்தமிடுமோ?" (ஆமோ 3:4) என்று கர்த்தர் கேட்கிறார். இல்லை. சிங்கம் இரையைப் பார்த்தால்தான் கெர்ச்சிக்கும்.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பாவமும், அக்கிரமமும் இருப்பதினால்தான், கர்த்தர் அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு வரும் என்று எச்சரிக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வேடிக்கைக்காக பயமுறுத்தவில்லை. சிறுபிள்ளைகளை பயமுறுத்துவதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பயமுறுத்தவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமம் பெருகியிருக்கிறது. அவர்கள் அழிவுக்கு அருகாமையிலிருக்கிறார்கள். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்புக்கள் அவர்கள்மீது நிச்சயமாகவே வரும். ஆகையினால் கர்த்தர் அவர்களை எச்சரிக்கிறார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், தங்களுக்கு வரப்போகும் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

இஸ்ரவேல் புத்திரர்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கு அவர்களுடைய பாவங்களும், துன்மார்க்கங்களுமே காரணம். இஸ்ரவேல் புத்திரர் அதிகமாகப் பாவம் செய்து, தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் அவர்களுக்கு சுருக்கைப்போலவும், கண்ணியைப்போலவும் இருக்கிறது.

"குருவிக்குத் தரையிலே சுருக்குப்போடப்படாதிருந்தால், அது கண்ணியில் அகப்படுமோ? ஒன்றும் படாதிருக்கையில், கண்ணி தரையிலிருந்து எடுக்கப்படுமோ?" (ஆமோ 3:5) என்று கர்த்தர் கேட்கிறார்.

தரையிலே சுருக்குப்போடப்படாதிருந்தால், குருவி கண்ணியிலே அகப்படாது. அதுபோலவே இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்யாதிருந்தால் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பும் வராது, அவர்களுக்கு அழிவும் வராது.

இஸ்ரவேல் புத்திரர் அழிந்துபோகக் கூடாது என்றால், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். "ஊரில் எக்காளம் ஊதினால், ஜனங்கள் கலங்காதிருப்பார்களோ? கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ?" (ஆமோ 3:6).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களைக் குறித்து அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பை எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு சொன்ன செய்தியை தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு சொல்லுகிறார்கள்.

கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் (ஆமோ 3:7).

கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு அவருடைய இரகசியம் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. தீர்க்கதரிசனத்தின் ஆவி, தீர்க்கதரிசிகளிடத்தில், வெளிப்பாட்டின் ஆவியாயிருக்கிறது. கர்த்தர் தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய செய்தியை சொன்னதினால்தான், அவர்கள் கர்த்தருடைய செய்தியை ஜனங்களுக்கு சொல்லுகிறார்கள். "கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்" (ஆமோ 3:8) என்று கர்த்தர் கேட்கிறார்.

கர்த்தர் பேசும்போது, அவருடைய தீர்க்கதரிசிகளும் பேசுகிறார்கள். "சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்" (ஆமோ 3:8) என்று கர்த்தர் கேட்கிறார். எல்லோரும் பயப்படுவார்கள். அதுபோலவே, கர்த்தர் பேசும்போது, தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்.

தீர்க்கதரிசிகள் கர்த்தரிடத்திலிருந்து செய்தியையும், அவருடைய கட்டளைகளையும் பெற்றுக்கொள்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த கட்டளையை, தீர்க்கதரிசிகள் நிறைவேற்றுவார்கள். கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தியதை தீர்க்கதரிசிகள் சொல்லவில்லையென்றால், அவர்கள் கர்த்தருக்கு நம்பிக்கைக்குரிய ஊழியக்காரர்களல்ல.

கர்த்தருடைய செய்தியை சொல்லாத தீர்க்கதரிசிகள், கர்த்தரை வஞ்சித்துவிடுகிறார்கள். கர்த்தர் அவர்களை நம்பி தம்முடைய வார்த்தையை ஒப்படைத்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லாமல், வாயை மூடிக்கொண்டு அமைதியாகயிருந்து விடுகிறார்கள். இது பாவம். கர்த்தர் சொல்லுவதை சொல்லாமலிருப்பதும் பாவம். கர்த்தர் சொல்லாததை சொல்லுவதும் பாவம்.

ஊரில் எக்காளம் ஊதினால் ஜனங்கள் கலங்குவார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், அவருடைய வார்த்தைகளை, ஜனங்கள் மத்தியிலே எக்காளம் ஊதுவது போல ஊதுகிறார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டும், அதை அசட்டைபண்ணுகிறார்கள். அவர்களிடத்தில் நடுக்கமில்லை. துணிகரமாய்த் தொடர்ந்து பாவம் செய்கிறார்கள்.

சமாரியாவின் பாதகங்கள் ஆமோ 3:9-15

ஆமோ 3:9. நீங்கள் சமாரியாவின் பர்வதங்களில், வந்துகூடி, அதின் நடுவில் நடக்கிற பெரிய கலகங்களையும் அதற்குள் செய்யப்படுகிற இடுக்கண்களையும் பாருங்கள் என்று அஸ்தோத்தின் அரமனைகள்மேலும், எகிப்துதேசத்தின் அரமனைகள்மேலும் கூறுங்கள்.

ஆமோ 3:10. அவர்கள் செம்மையானதைச் செய்ய அறியாமல், தங்கள் அரமனைகளில் கொடுமையையும் கொள்ளையையும் குவித்துக்கொள்ளுகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 3:11. ஆகையால் சத்துரு வந்து, தேசத்தைச் சூழ்ந்துகொண்டு, உன் பெலத்தை உன்னிலிருந்து அற்றுப்போகப்பண்ணுவான்; அப்பொழுது உன் அரமனைகள் கொள்ளையிடப்படும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆமோ 3:12. மேலும்: ஒரு மேய்ப்பன் இரண்டு கால்களையாவது ஒரு காதின் துண்டையாவது சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கித் தப்புவிக்குமாப்போல, சமாரியாவில் குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் ஒரு படுக்கையின் மூலையிலிருந்தும், ஒரு மஞ்சத்தின் மேலிருந்தும் தப்புவிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 3:13. நீங்கள் கேட்டு யாக்கோபு வம்சத்தாருக்குள்ளே சாட்சியாக அறிவிக்கவேண்டியது: சேனைகளின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்,

ஆமோ 3:14. நான் இஸ்ரவேலுடைய பாதகங்களினிமித்தம் அவனை விசாரிக்கும் நாளிலே நான் பெத்தேலின் பலிபீடங்களை விசாரிப்பேன்; பலிபீடத்தின் கொம்புகள் வெட்டுண்டு தரையிலேவிழும்.

ஆமோ 3:15. மாரிகாலத்து வீட்டையும் கோடைகாலத்து வீட்டையும் அழிப்பேன்; அப்பொழுது யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழியும்; பெரிய வீடுகளுக்கும் முடிவு வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை இங்கு மறுபடியுமாய் உணர்த்துகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களை மறுபடியும் கடிந்துகொள்கிறார். இஸ்ரவேல் தேசத்தின் அண்டை தேசத்தாருக்கு, கர்த்தருடைய வார்த்தை சொல்லப்படுகிறது. ஆமோஸ் தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை அஸ்தோத்தின் அரமனைகள்மேல் கூறவேண்டும். அஸ்தோத் பெலிஸ்தியரின் பிரதான பட்டணங்களில் ஒன்று.

கர்த்தருடைய வார்த்தை எகிப்து தேசத்தின் அரமனைகள் மேலும் கூறப்படுகிறது. கர்த்தர் பாவிகளோடு வழக்காடுகிறார். அவர்கள் யாராகயிருந்தாலும், கர்த்தர் பாவிகளின்மீது குற்றச்சாட்டுக்களைச் சொல்லுவார். கர்த்தரித்தில் பட்சபாதமில்லை. கர்த்தருடைய வழிகள் எப்போதுமே நீதியின் வழிகளாகயிருக்கிறது என்பதை பெலிஸ்தியரும், எகிப்தியரும் அறிந்துகொள்ளவேண்டும். ஆனால் அவர்களுடைய வழிகளோ தாறுமாறான, பாவமான வழிகளாயிருக்கிறது.

பெலிஸ்தியரும் எகிப்தியரும் சமாரியா தேசத்தில் குடியிருக்கிறவர்களுடைய சுபாவங்களைக் கவனித்துப் பார்க்கவேண்டும். அவர்களுடைய பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ளவேண்டும். சமாரியாவின் பர்வதங்களிலே பெரிய கலகங்கள் நடக்கிறது. அதற்குள் இடுக்கண்கள் செய்யப்படுகிறது (ஆமோ 3:9).

சமாரியாவிலுள்ளவர்கள் சோதோமிலுள்ளவர்களைப்போல இருக்கிறார்கள். சமாரியாவின் நடுவிலே பெரிய கலகங்கள் நடைபெறுகிறது. தேசத்தில் அமைதியில்லை. நீதி கீழே விழுந்துவிடுகிறது. நீதியான வார்த்தைகளுக்கு ஒருவரும் மதிப்பு கொடுப்பதில்லை. பெரிய கூட்டத்தோடு வந்து, பலத்த சத்தமாகக் கத்தினால், அதற்கு ஜனங்கள் செவிகொடுக்கிறார்கள்.

சமாரியாவின் மத்தியிலே ஒடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஒடுக்குகிறவர்கள் அவர்களுக்கு இடுக்கண்களைச் செய்து அவர்களை கீழே தள்ளிவிடுகிறார்கள். அவர்களுடைய நீதிமன்றங்களிலே நீதியில்லை. நியாயாதிபதிகள் செம்மையானதை செய்ய அறியாமலிருக்கிறார்கள் (ஆமோ 3:10).

சமாரியாவிலுள்ளவர்கள் தங்கள் அரமனைகளில், கொடுமையையும், கொள்ளையையும் குவித்துக்கொள்கிறார்கள். நீதிமன்றங்களிலே நீதி கிடைக்கும் என்னும் நம்பிக்கையே இல்லை. நியாயாதிபதிகள் நீதியைப்பற்றியும், நியாயத்தைப்பற்றியும் பேசுவதுமில்லை நினைப்பதுமில்லை.

சமாரியாவின் பொக்கிஷ சாலையிலே கொடுமையும் கொள்ளையும் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. அநியாயமாய்ச் சம்பாதித்த பொருள்களும், கொள்ளையிட்ட பொருள்களும் அவர்களுடைய கஜானாவில் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. அது அநீதியினால் சம்பாதித்த ஐசுவரியம். அந்த ஐசுவரியம் அங்கே அநியாயமாய் சம்பாதித்து வைக்கப்பட்டிருக்கிறது. சமாரியாவிலுள்ள மனுஷருடைய மனதிலும் நீதியில்லை. அவர்களுடைய பொக்கிஷத்திலும் நீதியில்லை.

சமாரியாவின்மீது அழிவு வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். "ஆகையால் சத்துரு வந்து, தேசத்தைச் சூழ்ந்துகொண்டு, உன் பெலத்தை உன்னிலிருந்து அற்றுப்போகப்பண்ணுவான்; அப்பொழுது உன் அரமனைகள் கொள்ளையிடப்படும்" (ஆமோ 3:11) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். சமாரியா தேசத்தின்மீது சத்துரு யுத்தம்பண்ண வருவான். அவன் சமாரியாவை அழித்துப்போடுவான்.

அசீரியர்கள் சமாரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவார்கள். அவர்கள் சமாரியாவின் எல்லா திசைகளிலுமிருந்து வந்து, தேசத்தை சூழ்ந்துகொள்வார்கள். அவர்களுடைய அரமனைகளைக் கொள்ளையிடுவார்கள். அசீரியர்கள் சமாரியரின் பெலத்தை, அவர்களிடத்திலிருந்து அற்றுப்போகப்பண்ணுவார்கள்.

அசீரியர்கள் அரமனைகளைக் கொள்ளையிட்டு, பட்டணத்திலுள்ளவர்களை பட்டயத்தினால் சங்காரம்பண்ணுவார்கள். அசீரியரின் பட்டயங்களுக்கு கிராமங்களிலுள்ளவர்களும் தப்பிக்கமாட்டார்கள். அவர்கள் சிங்கத்தின் வாயில் ஆட்டுக்குட்டியைப்போல அகப்பட்டுக்கொள்வார்கள். சிங்கம் தன்னுடைய இரையை தப்பவிடாது. அதைப் பட்சித்துப்போடும்.

"மேலும்: ஒரு மேய்ப்பன் இரண்டு கால்களையாவது ஒரு காதின் துண்டையாவது சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கித் தப்புவிக்குமாப்போல, சமாரியாவில் குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் ஒரு படுக்கையின் மூலையிலிருந்தும், ஒரு மஞ்சத்தின் மேலிருந்தும் தப்புவிக்கப்படுவார்கள்" (ஆமோ 3:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அசீரியரிடமிருந்து ஒரு சிலர் மாத்திரமே தப்பித்துக்கொள்வார்கள். தப்பித்தவர்கள் சொற்ப எண்ணிக்கையிலிருப்பார்கள். சிங்கத்தின் வாயில் சிக்கிய ஆட்டை முழுமையாக வெளியே எடுக்க முடியாது. இரண்டு கால்கள் அல்லது ஒரு காதின் துண்டு போன்றதுதான் சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கி தப்புவிக்கப்படும். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரரில் சிலர் படுக்கையின் மூலையிலிருந்தும், மஞ்சத்தின் மேலிருந்தும் குற்றுயிராக தப்புவிக்கப்படுவார்கள்.

இவர்கள் அசீரியருக்கு தப்பித்து ஓடி ஒழிந்துகொண்டவர்கள். அசீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினவர்கள் ஒருவரும் உயிரோடிருக்கமாட்டார்கள். படுக்கையின் மூலையிலும், மஞ்சத்தின் மூலையிலும் கோழைகள்தான் ஒழிந்துகொள்வார்கள். அசீரியரைப்பார்த்து இஸ்ரவேல் புத்திரரின் ஆவி ஒடுங்கிப்போகும். அவர்களுடைய சரீரத்தில் நடுக்கமுண்டாகும். இஸ்ரவேல் ஜனத்தாரிடம் இருக்கிற பெலத்தை, அசீரியர்கள் அற்றுப்போகப்பண்ணுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய செய்தியை சொல்லுகிறார். "நீங்கள் கேட்டு யாக்கோபு வம்சத்தாருக்குள்ளே சாட்சியாக அறிவிக்கவேண்டியது: சேனைகளின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்" (ஆமோ 3:13) என்று சொல்லி, கர்த்தர் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

பெத்தேலின் பலிபீடங்களுக்கு ஐயோ. கர்த்தர் இஸ்ரவேலுடைய பாதகங்களினிமித்தம் அவர்களை விசாரிப்பார். அவர்களுடைய விக்கிரகாராதனைகளையெல்லாம் விசாரிப்பார். அவர்களுடைய பலிபீடத்தின் கொம்புகள் வெட்டுண்டு தரையிலே விழும். விக்கிரகங்களின் பலிபீடங்கள் நொறுங்கிப்போகும்.

"பலிபீடத்தின் கொம்புகள்" என்னும் வார்த்தை, பலிபீடத்தில் அடைக்கலம் பெறவேண்டிய ஸ்தலத்தைக் குறிப்பிடுகிறது. பலிபீடத்தின் கொம்புகள் வெட்டுண்டு தரையிலே விழும். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் பலிபீடத்திற்கு ஓடி வந்து அடைக்கலம் பெற முடியாது. பலிபீடத்தைப் பிடித்துக்கொள்ள, அங்கே அவர்களுக்கு கொம்பு இருக்காது.

இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளுக்கு ஐயோ. கர்த்தர் அவர்களுடைய மாரிகாலத்து வீட்டையும், கோடைகாலத்து வீட்டையும் அழிப்பார். அவர்கள் கொள்ளையிட்டு தங்கள் வீடுகளில் பொக்கிஷத்தை குவித்து வைத்திருக்கிறார்கள். ஆடம்பரமாய் ஜீவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், யானைத்தந்தங்களினால் தங்களுக்கு வசந்த காலத்து வீடுகளை கட்டியிருக்கிறார்கள். யானை தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழியும். அவைகள் அக்கினியினால் சுட்டெரிக்கப்படும். அல்லது இடிக்கப்படும்.

இஸ்ரவேல் தேசத்திலுள்ள பெரிய வீடுகளுக்கு முடிவு வரும். இஸ்ரவேல் புத்திரரின் வீடுகள் பெரிதாயிருப்பதுபோல, அவர்களுடைய பாவங்களும் அக்கிரமங்களும் பெரிதாயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய பாவங்களை விசாரிப்பார். அவர்களுடைய பெரிய வீடுகளெல்லாம் இடிக்கப்படும். சகலமும் நிர்மூலமாகும்.

4 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரரில் சிலர் தங்கள் தேசத்திலுள்ள தரித்திரரை ஒடுக்குகிறார்கள் (ஆமோ 4:1-3). இஸ்ரவேல் புத்திரரில் விக்கிரகாராதனைக்காரராயிருக்கிறவர்கள், தங்கள் மாம்சத்தின் இச்சைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள் (ஆமோ 4:4,5).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். இதன் நிமித்தமாக அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள் (ஆமோ 4:6-11).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்றும், அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவேண்டும் என்றும் அவர்களுக்கு மறுபடியும் அழைப்பு கொடுக்கப்படுகிறது (ஆமோ 4:12,13).

பாசானின் மாடுகளே ஆமோ 4:1-5

ஆமோ 4:1. சமாரியாவின் மலைகளிலுள்ள பாசானின் மாடுகளே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்; தரித்திரரை ஒடுக்கி, எளியவர்களை நொறுக்கி, அவர்களுடைய எஜமான்களை நோக்கி: நாங்கள் குடிக்கும்படிக் கொண்டுவாருங்கள் என்று சொல்லுகிறீர்கள்.

ஆமோ 4:2. இதோ, கர்த்தராகிய ஆண்டவர் உங்களைத் துறடுகளாலும், உங்கள் பின்சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக்கொண்டுபோகும் நாட்கள் வருமென்று அவர் தம்முடைய பரிசுத்தத்தைக்கொண்டு ஆணையிட்டார்.

ஆமோ 4:3. அப்பொழுது நீங்கள் ஒவ்வொருவனும் அரமனைக்குச் சுமந்துகொண்டு போவதை எறிந்துவிட்டு, தனக்கு எதிரான திறப்புகளின் வழியாய்ப் புறப்பட்டுப்போவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:4. பெத்தேலுக்குப் போய்த் துரோகம் பண்ணுங்கள், கில்காலுக்கும் போய்த் துரோகத்தைப் பெருகப்பண்ணி, காலைதோறும் உங்கள் பலிகளையும், மூன்றாம் வருஷத்திலே உங்கள் தசமபாகங்களையும் செலுத்தி,

ஆமோ 4:5. புளித்தமாவுள்ள ஸ்தோத்திர பலியோடே தூபங்காட்டி, உற்சாக பலிகளைக் கூறித் தெரியப்படுத்துங்கள்; இஸ்ரவேல் புத்திரரே, இப்படிச் செய்வதே உங்களுக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

தரித்திரரை ஒடுக்கிறவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவேண்டும். விக்கிரகாராதனைக்காரர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படவேண்டும். நாம் செய்கிற பாவங்களுக்குத்தக்கதாக நமக்கு தண்டனை கொடுக்கப்படும். பாவம் செய்கிறவர்கள், தங்களுக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பையும் நினைத்துப் பார்க்கவேண்டும். பாவத்தின் சம்பளம் மரணம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை விரிவாகச் சொல்லுகிறார். அவர்கள் பாசானின் மாடுகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். இவை உயர்ந்த ஜாதி மாடுகள். இவை உருவத்தில் பெரியதாகவும், அதிக பெலமுள்ளவதாகவும் இருக்கும். இவை சமாரியாவின் மலைகளின்மீது மேய்ந்து கொளுத்திருக்கும்.

ஆமோஸ் ஒரு மேய்ப்பர். ஆகையினால் அவருடைய வார்த்தைகளில், மேய்ப்பர்கள் பயன்படுத்தும் வாக்கியங்கள் அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் தரித்திரரை ஒடுக்குகிற ஐசுவரியவான்களை "பாசானின் மாடுகள்" என்று ஆமோஸ் சொல்லுகிறார்.

ஐசுவரியவான்கள் தரித்திரரை ஒடுக்கி ஆடம்பரமாய் ஜீவிக்கிறார்கள். எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் அலைந்து திரிகிறார்கள். அவர்கள் யாருடைய புத்திமதிகளையும் கேட்கமாட்டார்கள். பாசானின் மாடுகளும், இவர்களைப்போலவே சமாரியாவின் மலைகளில், கட்டுப்பாடில்லாமல் அலைந்து திரியும்.

விளைச்சல் நிலங்களில் பாதுகாப்புக்காக வேலிகள் போட்டு அடைத்திருப்பார்கள். பாசானின் மாடுகளோ அந்த வேலிகளை உடைத்துக்கொண்டு, விளைச்சல் நிலங்களுக்குள்ளே போய் மேயும். தனக்கு அருகாமையில் சிறிய மாடுகள் மேய்ந்துகொண்டிருந்தால், பாசானின் மாடு அதை முட்டி துரத்திவிடும்.

இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஐசுவரியவான்கள், தரித்திரரை ஒடுக்கி, அநியாயமாய்ப் பணம் சம்பாதித்து, சமாரியாவின் மலைகளிலே மாரிகாலத்து வீடுகளையும், கோடைகாலத்து வீடுகளையும் கட்டியிருக்கிறார்கள். இவர்கள் சமாரியாவின் மலைகளிலுள்ள பாசானின் மாடுகளைப்போல பிறருக்கு தீங்கு செய்கிறவர்கள்.

இஸ்ரவேலிலுள்ள ஐசுவரியவான்கள் தரித்திரரை ஒடுக்குகிறார்கள். எளியவர்களை நொறுக்குகிறார்கள். அவர்களிடத்திலுள்ள பணத்தையும், அவர்களுடைய இரத்தத்தையும் உறிஞ்சி குடித்துவிடுகிறார்கள். தரித்திரரை ஒடுக்கும்போதும், எளியவர்களை நொறுக்கும்போதும், ஐசுவரியவான்கள் எல்லோரும் கூட்டாக ஒன்றுசேர்ந்துகொள்கிறார்கள்.

தரித்திரருடைய எஜமான்களை நோக்கி, "நாங்கள் குடிக்கும்படி கொண்டுவாருங்கள்" என்று ஐசுவரியவான்கள் சொல்லுகிறார்கள். தரித்திரரின் எஜமான்கள் ஏற்கெனவே அவர்களை ஒடுக்கி, அவர்களிடத்திலுள்ள சொத்துக்களை அபகரித்து வைத்திருக்கிறார்கள். அவர்களை ஒடுக்குவதினாலும், நொறுக்குவதினாலும், அவர்களுடைய எஜமான்களுக்கு கொள்ளை லாபம் கிடைத்திருக்கிறது.

தரித்திரரை ஒடுக்குகிற ஐசுவரியவான்களோ, தரித்திரருடைய எஜமான்களோடு, அவர்களுடைய பாவங்களில் பங்காளிகளாயிருக்கிறார்கள். எஜமான்களுடைய லாபத்திலே ஐசுவரியவான்கள் பங்குபெற விரும்புகிறார்கள். தங்களுக்கு குடிக்கும்படி கொடுத்தால், தங்களால் தரித்திரரின் எஜமான்களை பாதுகாக்க முடியும் என்று சொல்லுகிறார்கள்.

ஐசுவரியவான்களும், தரித்திரரின் எஜமான்களும், தரித்திரரை ஒடுக்குவதிலும், எளியவர்களை நொறுக்குவதிலும் கூட்டாளிகளாயிருக்கிறார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொண்டு, தரித்திரரை மொத்தமாய் ஒடுக்கிவிடுகிறார்கள். தங்கள் எஜமான்களுக்கு விரோதமாக தரித்திரர்கள் குற்றம் சொன்னாலும், ஐசுவரியவான்கள் அவர்களுடைய குற்றச்சாட்டுக்களுக்கு செவிகொடுப்பதில்லை.

தரித்திரரை ஒடுக்குகிறவர்கள்மீதும், எளியவர்களை நொறுக்குகிறவர்கள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். "இதோ, கர்த்தராகிய ஆண்டவர் உங்களைத் துறடுகளாலும், உங்கள் பின்சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக்கொண்டுபோகும் நாட்கள் வருமென்று அவர் தம்முடைய பரிசுத்தத்தைக்கொண்டு ஆணையிட்டார்" (ஆமோ 4:2).

கர்த்தர் அசீரியருடைய சேனையை இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக அனுப்புவார். அவர்கள் இஸ்ரவேல் புத்திரர்மீது தங்கள் வலைகளை வீசி, அவர்கள் எல்லோரையும் சிறைப்பிடித்துக்கொள்வார்கள். இஸ்ரவேல் புத்திரரை துறடுகளாலும், அவர்களுடைய பின்சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக்கொண்டு போவார்கள்.

மீன்பிடிக்கிறவர்கள், மீனைப்பிடித்து, அதை தண்ணீரிலிருந்து வெளியேற்றுவதுபோல, அசீரியர்கள் இஸ்ரவேல் புத்திரரைப் பிடித்து, அவர்களை இஸ்ரவேல் தேசத்திலிருந்து வெளியேற்றுவார்கள்.

மீனவர்கள் மீனைப்பிடித்தாலும், ஒரு சில மீன்கள் வலையிலிருந்து தப்பிக்க முயற்சி செய்யும். அதுபோலவே, இஸ்ரவேல் புத்திரரில் சிலர், அசீரியருடைய சேனையின் கட்டுப்பாட்டிலிருந்து, தப்பித்து ஓட முயற்சி செய்வார்கள். நகரத்தின் வாசலில், தங்களுக்கு எதிரான திறப்புகளின் வழியாய் புறப்பட்டு ஓடிப்போவார்கள் (ஆமோ 4:3).

இஸ்ரவேலின் ஐசுவரியவான்கள் சமாரியாவின் மலைகளில் பாசானின் மாடுகளைப்போல கொளுத்து அலைந்து திரிந்தார்கள். தங்களுக்கு முன்பாக புல்லை மேய்கிற சிறிய மாடுகளை முட்டி தள்ளி துரத்தினார்கள். இப்போதோ பாசானின் மாடுகளைப்போல கொளுத்திருக்கிற ஐசுவரியவான்கள் ஒடுக்கப்படுகிறார்கள். தரித்திரரை ஒடுக்கினவர்களை அசீரியர்கள் ஒடுக்குகிறார்கள். எளியவர்களை நொறுக்கினவர்களை அசீரியர்கள் நொறுக்கிப்போடுகிறார்கள்.

அசீரியர்கள் இஸ்ரவேல் புத்திரரை சிறைப்பிடிக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவனும் அரமனைக்கு சுமந்துகொண்டு போவதை எறிந்து விட்டு ஓடிப்போவான். இந்த வாக்கியத்திற்கு, "ஒவ்வொருவனும் தங்களை அரமனையில் எறிந்துபோடுவான்" என்றும், "ஒவ்வொருவனும் தாங்கள் சுமந்துகொண்டு போகும் தங்களுடைய பிள்ளைகளை அரமனையில் எறிந்துபோடுவான்" என்றும் வேதபண்டிதர்கள் பொருள் சொல்லுகிறார்கள்.

அசீரியர்கள் இஸ்ரவேல் ராஜாவினுடைய அரமனைக்குள் பிரவேசித்து, அரமனையைக் கொள்ளையிடுவார்கள். அரமனையிலுள்ளவர்களை பட்டயத்தினால் சங்காரம்பண்ணுவார்கள். பட்டயத்திற்கு தப்பினவர்களை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டுபோவார்கள்.

தரித்திரரை ஒடுக்குகிறவர்கள்மீதும், எளியவர்களை நொறுக்கிறவர்கள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். கர்த்தர் இந்த நியாயத்தீர்ப்பைப்பற்றிச் சொல்லும்போது, அவர் தம்முடைய பரிசுத்தத்தைக் கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறார் (ஆமோ 4:2). கர்த்தருடைய மகிமைக்காகவே துன்மார்க்கர் தண்டிக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் அந்நிய தெய்வங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. கர்த்தர் அவர்களிடம் "பெத்தேலுக்குப் போய்த் துரோகம் பண்ணுங்கள், கில்காலுக்கும் போய்த் துரோகத்தைப் பெருகப்பண்ணுங்கள்" (ஆமோ 4:4) என்று சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிற இந்த வாக்கியம், "வஞ்சக புகழ்ச்சி அணியில்" சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர், தாங்கள் போகிற பாவமான பாதையில் தொடர்ந்து போகட்டும் என்றும், அவர்கள் தங்களுடைய துரோகத்தை பெருக்கப்பண்ணட்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"காலைதோறும் உங்கள் பலிகளையும், மூன்றாம் வருஷத்திலே உங்கள் தசமபாகங்களையும் செலுத்தி, புளித்தமாவுள்ள ஸ்தோத்திர பலியோடே தூபங்காட்டி, உற்சாக பலிகளைக் கூறித் தெரியப்படுத்துங்கள்" (ஆமோ 4:4,5) என்றும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு பிரியமானதைச் செய்கிறார்கள். விக்கிரகங்களை ஆராதனை செய்து, தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த நியமங்களை, விக்கிரகாராதனையில் பயன்படுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் காலைதோறும் பெத்தேலிலே பலிகளைச் செலுத்துகிறார்கள். எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தில் கர்த்தருக்கு பலிபீடம் இருக்கிறது. அங்கே இஸ்ரவேல் புத்திரர் காலைதோறும் தங்கள் பலிகளை செலுத்தவேண்டும். ஆனால் அவர்களோ, எருசலேமில் பலிசெலுத்தாமல், பெத்தேலுக்குப்போய் பலிசெலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பெத்தேலிலே ஒரு பொன்கன்றுக்குட்டியை நிறுவியிருக்கிறார்கள். அதற்கு ஒரு பலிபீடத்தையும் கட்டியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பெத்தேலுக்குப்போய், விக்கிரகாராதனை செய்கிறார்கள். விக்கிரகத்தின் பலிபீடத்திலே பலிகளைச் செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் புளித்தமாவுள்ள ஸ்தோத்திரபலியோடே விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு தூபங்காட்டுவதற்குப் பதிலாக, அந்நிய தெய்வங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்பதற்கு பதிலாக, விக்கிரகங்களுக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கிறார்கள்.

"இப்படிச் செய்வதே உங்களுக்குப் பிரியம்" (ஆமோ 4:5) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரின் இருதயம் இருளடைந்திருக்கிறது. அவர்கள் மதியீனமான காரியங்களை செய்கிறார்கள். அவர்கள் பொய்யை நம்பி, மாயையான காரியங்களை செய்கிறார்கள். தங்களுடைய அக்கிரமங்களையும், துரோகங்களையும் பெருகப்பண்ணுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்து யூதர்களைப் பார்த்து "நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள்" (மத் 23:32) என்று சொல்லுகிறார்.

என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் ஆமோ 4:6-11

ஆமோ 4:6. ஆகையால் நான் உங்கள் பட்டணங்களில் எல்லாம் உங்கள் பல்லுகளுக்கு ஓய்வையும், உங்கள் ஸ்தலங்களில் எல்லாம் அப்பக்குறைவையும் கட்டளையிட்டேன்; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:7. இதுவுமல்லாமல், அறுப்புக்காலம்வர இன்னும் மூன்றுமாதம் இருக்கும்போதே மழையை நான் தடுத்தேன், ஒரு பட்டணத்தின்மேல் மழைபெய்யவும் ஒரு பட்டணத்தின்மேல் மழை பெய்யாமலிருக்கவும் பண்ணினேன்; ஒரு வயலின்மேல் மழைபெய்தது, மழைபெய்யாத மற்ற வயல் காய்ந்துபோயிற்று.

ஆமோ 4:8. இரண்டு மூன்று பட்டணங்களின் மனுஷர் தண்ணீர் குடிக்க ஒரே பட்டணத்துக்குப்போய் அலைந்தும் தாகந்தீர்த்துக் கொள்ளவில்லை; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:9. கருக்காயினாலும் விஷப்பனியினாலும் உங்களை தண்டித்தேன்; உங்கள் சோலைகளிலும் திராட்சத்தோட்டங்களிலும் அத்திமரங்களிலும் ஒலிவமரங்களிலும் மிகுதியானதைப் பச்சைப்புழு அரித்துப்போட்டது; ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:10. எகிப்திலே உண்டானதற்கு ஒத்த கொள்ளைநோயை உங்களுக்குள் அனுப்பினேன்; உங்கள் வாலிபரைப் பட்டயத்தாலே கொன்றேன்; உங்கள் குதிரைகளை அழித்துப்போட்டேன்; உங்கள் பாளயங்களின் நாற்றத்தை உங்கள் நாசிகளிலும் ஏறப்பண்ணினேன்; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:11. சோதோமையும் கொமோராவையும் தேவன் கவிழ்த்துப்போட்டதுபோல, உங்களைக் கவிழ்த்துப்போட்டேன்; நீங்கள் அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளியைப்போல இருந்தீர்கள்; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்துகொண்டே இருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். தம்முடைய கோபத்தை கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது பல வழிகளில் வெளிப்படுத்துகிறார். ஆனால் அவர்கள் உணர்வடையவில்லை. அவர்கள் இன்னும் கர்த்தரிடத்தில் திரும்பவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அநேக வாதைகளைக் கொடுக்கிறார். கஷ்டங்களையும் தண்டனைகளையும் கொடுக்கிறார். "ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள்" என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து, ஐந்துமுறை திரும்பத் திரும்ப சொல்லுகிறார். அவர்களுடைய மனம் மாறுவதற்கான அடையாளம் எதுவும் அவர்களிடத்தில் காணப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை பின்பற்றிப்போவதை விட்டுவிட்டு, தம்மிடத்தில் திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்களைத் தண்டித்தால், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, பரிசுத்தமாய் ஜீவிப்பார்கள் என்றும் கர்த்தர் எதிர்பார்க்கிறார். இதற்காகவே கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, உண்மையான இருதயத்தோடு, கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால், கர்த்தர் அவர்களை ஏற்றுக்கொள்வார்.

பாவிகளை தண்டிக்கவேண்டும் என்பது சர்வவல்லமையுள்ள தேவனுக்குப் பிரியமல்ல. பாவிகள் மனந்திரும்ப வேண்டும் என்பதே கர்த்தருக்கு பிரியம். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதற்காக, கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த ஒவ்வொரு தண்டனையும், இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய பராமரிப்புக்களை இஸ்ரவேல் புத்திரருக்கு குறைத்துக் கொடுக்கிறார். அவர்களுக்கு குறைவு உண்டாயிற்று. "நான் உங்கள் பட்டணங்களில் எல்லாம் உங்கள் பல்லுகளுக்கு ஓய்வையும், உங்கள் ஸ்தலங்களில் எல்லாம் அப்பக்குறைவையும் கட்டளையிட்டேன்" (ஆமோ 4:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் அவர்களுக்கு சுத்தமான பற்களைக் கொடுக்கிறார். ஆனால் அவர்களுக்கு புசிக்க அப்பத்தைக் கொடுக்க மறுகிறார். அவர்களுக்கு பற்கள் இருக்கிறது. புசிக்க அப்பம் இல்லை.

எலிசாவின் காலத்தில் ஏழுவருஷங்களுக்கு பஞ்சமுண்டாயிற்று. கர்த்தர் இங்கு சொல்லுகிற சம்பவம், இந்தப் பஞ்சகாலத்தைக் குறிக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"எலிசா தான் உயிர்ப்பித்த பிள்ளையின் தாயாகிய ஸ்திரீயை நோக்கி: நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப் போய் எங்கேயாகிலும் சஞ்சரி; கர்த்தர் பஞ்சத்தை வருவிப்பார்; அது ஏழுவருஷம் தேசத்தில் இருக்கும் என்று சொல்லியிருந்தான்" (2இராஜா 8:1).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பல்லுகளுக்கு ஓய்வைக்கொடுத்தாலும், அவர்களுடைய ஸ்தலங்களில் அப்பக்குறைவை கட்டளையிட்டாலும், அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின்மீது மழை பெய்யாமல் தடுத்துவிடுகிறார். "அறுப்புக்காலம்வர இன்னும் மூன்றுமாதம் இருக்கும்போதே மழையை நான் தடுத்தேன்" (ஆமோ 4:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். விதைக்கப்பட்ட விதைகள் பயிராக முளைத்திருக்கிறது. பயிர்கள் இன்னும் மூன்றுமாதம் முளைக்கவேண்டும். அப்போதுதான் அறுவடை கிடைக்கும். அதற்கு வானத்திலிருந்து மழை பெய்யவேண்டும். ஆனால் கர்த்தரோ அறுப்புக்காலம் வர இன்னும் மூன்றுமாதம் இருக்கும்போதே, மழையைத் தடுத்துவிடுகிறார். விதைத்தது பாழாய்ப்போயிற்று.

கர்த்தர் ஒரு பட்டணத்தின்மேல் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். மற்றொரு பட்டணத்தின்மேல் மழை பெய்யாமலிருக்கப்பண்ணுகிறார். ஒரு வயலின்மேல் மழை பெய்கிறது. மற்றொரு வயலின்மேல் மழை பெய்யாமலிருக்கிறது. மழை பெய்யாத வயல் காய்ந்துபோயிற்று. எந்தப் பட்டணத்தில் மழை பெய்யும் என்றும், எந்த வயலின்மேல் மழை பெய்யும் என்றும் இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியவில்லை. தேசத்து ஜனங்கள் மத்தியில் மழையைக் குறித்து குழப்பமுண்டாயிற்று.

மழை பெய்த பட்டணங்களிலும், மழை பெய்த வயலிலும் விருட்சங்கள் வளருகிறது. அதில் கனிகள் உண்டாகிறது. கர்த்தரோ கருக்காயினாலும், விஷப்பனியினாலும் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுடைய சோலைகளிலும், திராட்சத்தோட்டங்களிலும், அத்திமரங்களிலும், ஒலிவமரங்களிலும், மிகுதியானதை பச்சைப்புழு அரித்துப்போடுகிறது (ஆமோ 4:9).

இஸ்ரவேல் தேசத்தில் மழையுமில்லை. விளைச்சலுமில்லை. எல்லாம் காய்ந்துபோயிற்று. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரவில்லை.

இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் அப்பக்குறைவை கட்டளையிடும்போது, தண்ணீர் குறைவையும் கட்டளையிடுகிறார். தண்ணீரில்லாமல் அவர்களால் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. பட்டணங்களில் மழை பெய்யவில்லை. ஏதாவது ஒரு பட்டணத்தில் மழை பெய்கிறது. மழை பெய்யாத இரண்டு மூன்று பட்டணங்களின் மனுஷர், மழை பெய்கிற ஒரே பட்டணத்திற்கு, தண்ணீர் குடிப்பதற்காக போய் அலைகிறார்கள். ஆனாலும் அவர்களுடைய தாகம் தீரவில்லை.

கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு இஸ்ரவேல் புத்திரர்மீது வந்திருக்கிறது. அவர்கள் வேதனைகளையும், கஷ்டங்களையும் அனுபவிக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வர மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் சில சமயங்களில், தம்முடைய ஜனத்தைத் திருத்துவதற்கு, அவர்கள் மத்தியில் கொள்ளைநோயை அனுப்புகிறார். இஸ்ரவேல் புத்திரரை திருத்துவதற்கு, கர்த்தர் அவர்களுக்குள் எகிப்திலே உண்டானதற்கு ஒத்த கொள்ளைநோயை அனுப்பினார் (ஆமோ 4:10).

இஸ்ரவேல் புத்திரருக்கு சாதாரண தண்டனைகள் கொடுக்கப்படும்போது, அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். இதனால் கர்த்தர் அவர்களுக்கு பெரிய தண்டனைகளைக் கொடுக்கிறார். அவர்களுடைய வாலிபரை பட்டயத்தினால் கொன்றுபோடுகிறார் (ஆமோ 4:10).

இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம் வருகிறது. சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரில் ஏராளமான ஜனங்களை சங்காரம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஜனம் பட்டயத்திற்கு தப்பி எகிப்து தேசத்திற்கு ஓடுகிறார்கள். கர்த்தரோ, அவர்கள் எகிப்திற்கு போகும் வழியில், அவர்களுக்குள் கொள்ளைநோயை அனுப்புகிறார். எகிப்தின் உதவியை நாடிப்போனவர்கள், போகும் வழியிலேயே கொள்ளைநோயால் செத்துப்போகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய குதிரைகளையும் அழித்துப்போடுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே ஏராளமான ஜனங்கள் பட்டயத்தினாலும், கொள்ளை நோயினாலும் செத்துப்போகிறார்கள். அவர்களுடைய பிரேதங்கள் இஸ்ரவேல் தேசத்தின் வீதிகளில் சிதறிக்கிடக்கிறது. அவர்களுடைய பாளயங்களில் நாற்றம் துர்நாற்றம் உண்டாயிற்று. கர்த்தர் பிரேதங்களின் துர்நாற்றத்தை இஸ்ரவேல் புத்திரருடைய நாசிகளில் ஏறப்பண்ணுகிறார். ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. கர்த்தரிடத்தில் திரும்பி வரவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை, பல்வேறு வழிகளில் தண்டித்தாலும், அவர்கள் மனந்திரும்ப மறுக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களில் ஆவிக்குரிய மனமாற்றம் உண்டாகவில்லை. கர்த்தர் அவர்களை பட்டயத்தினால் கொன்றுபோடுகிறார். அவர்கள் மத்தியில் பஞ்சத்தை வரவழைக்கிறார். அவர்களுக்கு கிருபையாக இரங்குகிறார். கர்த்தர் என்ன செய்தாலும், இஸ்ரவேல் புத்திரர் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

"சோதோமையும் கொமோராவையும் தேவன் கவிழ்த்துப்போட்டதுபோல, உங்களைக் கவிழ்த்துப்போட்டேன்; நீங்கள் அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளியைப்போல இருந்தீர்கள்" (ஆமோ 4:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கோபத்திற்கு இஸ்ரவேல் புத்திரரில் ஒரு சிலர் மாத்திரமே தப்பிக்கிறார்கள். அதிலும் அவர்கள் அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளியைப்போல தப்பித்திருக்கிறார்கள். சோதோமிலிருந்து லோத் தப்பித்ததுபோல இவர்கள் தப்பித்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் பாவத்தை வெறுக்கவில்லை. கர்த்தரை நேசிக்கவில்லை. கர்த்தர் அவர்களை அழிவிலிருந்து தப்பிக்கச் செய்தபோதிலும், அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வரவில்லை.

உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு ஆமோ 4:12,13

ஆமோ 4:12. ஆகையால் இஸ்ரவேலே, இந்தப்பிரகாரமாக உனக்குச் செய்வேன்; இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.

ஆமோ 4:13. அவர் பர்வதங்களை உருவாக்கினவரும், காற்றைச் சிருஷ்டித்தவரும், மனுஷனுடைய நினைவுகள் இன்னதென்று அவனுக்கு வெளிப்படுத்துகிறவரும், விடியற்காலத்தை அந்தகாரமாக்குகிறவரும், பூமியினுடைய உயர்ந்த ஸ்தானங்களின்மேல் உலாவுகிறவருமாயிருக்கிறார்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு அழைப்பு கொடுக்கிறார். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப, இதுவே அவர்களுக்கு ஏற்ற காலமாயிருக்கிறது. தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள, அவர்கள் இப்பொழுதே கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும்.

கர்த்தர் தம்முடைய கிருபைகளையும், இரக்கங்களையும் இஸ்ரவேல் புத்திரருக்கு காண்பிக்கிறார். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப கர்த்தர் அவர்களுக்கு நல்ல வாய்ப்புக்களையும், நல்ல சூழ்நிலைகளையும் கொடுத்திருக்கிறார். இவையெல்லாம் அவர்களுடைய கண்களை விட்டு மறைந்துபோவதற்கு முன்பாக, அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர், தங்கள் பாவங்களுக்கு இப்போது மனந்திரும்பவில்லையென்றால், அவர்கள் இதுவரையிலும் அனுபவித்த தண்டனைகளைவிட, இனிமேல் அவர்களுக்கு மிகப்பெரிய தண்டனைகள் கொடுக்கப்படும். பாவியான ஜனங்கள், தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற அழிவிலிருந்து தப்பிக்க வேண்டுமென்றால், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவதைத் தவிர வேறு வழி எதுவுமில்லை.

"நான் செய்யும் தண்டனையினால் நீங்கள் குணப்படாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாக வாதித்து, என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழிவாங்கும் பட்டயத்தை உங்கள் மேல் வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்தபின், கொள்ளைநோயை உங்கள் நடுவிலே அனுப்புவேன்; சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள்" *(லேவி 26:23-25)*.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார். ஆகையினால் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படவேண்டும். கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவேண்டும். கர்த்தரை தங்களுடைய தேவனாக அங்கீகரித்து, அவரை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவர். இஸ்ரவேல் புத்திரரும் இந்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் இனிமேலும் கர்த்தரைவிட்டுத் தூரமாய் விலகிப்போய்விடக்கூடாது. அந்நிய தெய்வங்களை ஆராதிக்கக்கூடாது. விக்கிரகங்களுக்கு தூபங்காட்டக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை, தங்களுடைய தேவனாக அங்கீகரித்து, அவரைச் சந்திக்கும்படி ஆயத்தப்படவேண்டும்.

நம்மால் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பித்து, ஓடி ஒளிந்துகொள்ள முடியாது. ஆகையினால் நம்முடைய தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படுவதே நமக்கு நல்லது. கர்த்தர் நம்முடைய நிலமையை அறிந்திருக்கிறார். ஆகையினால், "உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு" என்று நமக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்.

நாம் ஏன் கர்த்தரை சந்திக்கும்படி ஆயத்தப்படவேண்டும் என்பதற்கான காரணங்களையும் கர்த்தர் இங்கு தெளிவுபடுத்துகிறார். கர்த்தர் மகிமையும், மகத்துவமும், மாட்சிமையுமுள்ளவர். அவர் பெரியவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தர் பர்வதங்களை உருவாக்கினவர். அவரே காற்றை சிருஷ்டித்தவர்.

கர்த்தர் மனுஷனுடைய நினைவுகள் இன்னதென்று அவனுக்கு வெளிப்படுத்துகிறார். அவரே விடியற்காலத்தை அந்தகாரமாக்குகிறார். கர்த்தர் பூமியினுடைய உயர்ந்த ஸ்தலங்களின்மேல் உலாவுகிறார். தம்முடைய ஜனத்தின் இரட்சிப்புக்கு பர்வதங்கள் தடையாகயிருக்கும்போது, கர்த்தர் உயர்ந்த பர்வதங்களையும் சமபூமியாக்கிப்போடுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகள் மூலமாய், தம்முடைய ஜனத்திடம் பேசுகிறார். அவர்கள் தேவனுடைய நீதியையும், நியாயத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாத பாவிகள்மீது தேவனுடைய கோபம் வரும் என்று எச்சரித்து சொல்லுகிறார்கள். பாவிகள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமாகவே வரும். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறவர்கள்மீது தேவனுடைய நன்மையான ஆசீர்வாதங்கள் வந்து தங்கும்.

கர்த்தர் மனுஷருடைய இருதயத்தின் நினைவுகளையெல்லாம் அறிந்திருக்கிறார். மனுஷருடைய இருதயங்களில், யோசனைகள் தோன்றுவதற்கு முன்பாகவே, கர்த்தர் அதைப்பற்றி அறிந்து வைத்திருக்கிறார். மனுஷருடைய நினைவுகள் இன்னதென்று கர்த்தரே அவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் பூமியினுடைய உயர்ந்த ஸ்தானங்களின்மேல் உலாவுகிறார். பெருமையான மனுஷர்களை கீழே தள்ளிவிடுகிறார். விக்கிரகாராதனைக்காரர்கள் உயர்ந்த மேடைகளில், தங்களுக்கு விக்கிரகங்களை நிறுவி, அதை ஆராதிக்கிறார்கள். கர்த்தரோ விக்கிரகங்களை அதம்பண்ணிப்போடுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார். கர்த்தர் இருக்கிறவராகவே இருக்கிறார். சர்வசிருஷ்டிக்கும் அவரே சிருஷ்டிகர். எல்லாவற்றிற்கும் அவரே ஜீவாதாரமாகயிருக்கிறார். வானத்தின் சர்வசேனைகளும், பூமியிலுள்ள சர்வசிருஷ்டிகளும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து செயல்படும். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவருடைய நாமம். சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக, நாம் நம்மை தாழ்த்தவேண்டும்.

5 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனை சந்திக்கும்படி எப்படி ஆயத்தப்படவேண்டுமென்று, ஆமோஸ் தீர்க்கதரிசி இந்த அதிகாரத்தில் தெளிவாகச் சொல்லுகிறார். அவர்கள் விக்கிரகங்களை சந்திக்கும்படி ஆயத்தப்படாமல், தங்கள் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படவேண்டும் (ஆமோ 5:4-8). அவர்கள் நன்மையைத் தேடி அதை விரும்பவேண்டும் (ஆமோ 5:14,15).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனை சந்திக்கும்படி ஏன் ஆயத்தப்படவேண்டும் என்றும் ஆமோஸ் தீர்க்கதரிசி சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் இப்போது மிகவும் கஷ்டமான சூழ்நிலையிலிருக்கிறார்கள் (ஆமோ 5:1-3). இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களே, அவர்களை இந்தக் கஷ்டமான சூழ்நிலைக்கு அழைத்து வந்திருக்கிறது (ஆமோ 5:7,10-12).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடும்போது அவர்களுக்கு சந்தோஷமுண்டாகும். கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டுபிடிப்பார்கள் (ஆமோ 5:8,9,14).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடவில்லையென்றால் அவர்களுக்கு அழிவு உண்டாகும் (ஆமோ 5:5,6,13,16,17). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு சிநேகமாயிருக்கவேண்டும். இல்லையென்றால் அவர்களுடைய எல்லா நம்பிக்கைகளும் வீணாய்ப்போகும். அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது (ஆமோ 5:18-20).

இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தரிடத்தில் உண்மையான பக்தியில்லை. அவர்களுடைய பண்டிகைகள் மாய்மாலமாயும் வெளிவேஷமாயும் இருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய பண்டிகைகளை பகைத்து வெறுக்கிறார் (ஆமோ 5:21-24).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சிலாக்கியங்களை நீண்டகாலமாக அனுபவித்து வந்தாலும், அவர்களுடைய பழைய அனுபவங்கள் அவர்களைப் பாதுகாக்காது (ஆமோ 5:25-27). அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படவேண்டும். அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு இதுவே வழி. வேறு வழி எதுவுமில்லை.

இஸ்ரவேல் என்னும் கன்னிகை விழுந்தாள்
ஆமோ 5:1-3

ஆமோ 5:1. இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்களைக்குறித்து நான் புலம்பிச் சொல்லும் இந்த வசனத்தைக் கேளுங்கள்.

ஆமோ 5:2. இஸ்ரவேல் என்னும் கன்னிகை விழுந்தாள்; அவள் இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டாள்; தன் தேசத்தில் விழுந்துகிடக்கிறாள், அவளை எடுப்பாரில்லை.

ஆமோ 5:3. நகரத்திலிருந்து புறப்பட்ட ஆயிரம்பேரில் நூறுபேரும், நூறுபேரில் பத்துப்பேரும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு மீந்திருப்பார்கள் என்று கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்.

இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் "இந்த வசனத்தைக் கேளுங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தை ஆமோஸ் தீர்க்கதரிசியும் சொல்லுகிறார். ஆமோசை இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் அனுப்பியிருக்கிற கர்த்தரும் சொல்லுகிறார்.

"இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தராகிய நான் எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின முழுக்குடும்பமாகிய உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய இந்த வசனத்தைக் கேளுங்கள்" (ஆமோ 3:1).

இஸ்ரவேல் தேசம் இப்போது பரிதாபமான நிலமையிலிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின் அழிவை முன்னறிவிக்கிறார். கர்த்தருடைய வார்த்தையை ஆமோஸ் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். "இஸ்ரவேல் என்னும் கன்னிகை விழுந்தாள்" (ஆமோ 5:2). அவள் தன்னுடைய பாவத்தில் விழுந்தாள். அவள் இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டாள். அவளுடைய பழைய மேன்மை அவளுக்கு திரும்பவும் கிடைக்காது.

இஸ்ரவேல் என்னும் கன்னிகை தன் தேசத்தில் விழுந்து கிடக்கிறாள். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய தேசத்தின் பாதுகாப்புக்காக, அந்நிய தேசத்தாரின் உதவிகளை நாடிப்போனார்கள். அவர்களோடு இராணுவ ஒப்பந்தமும், சமாதான ஒப்பந்தமும் செய்துகொண்டார்கள். ஆனால் அந்நிய தேசத்தார் இஸ்ரவேல் புத்திரரை வஞ்சித்து ஏமாற்றிவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில் இருக்கிறவர்களும், இஸ்ரவேல் என்னும் கன்னிகையைவிட்டு வெளியேறிப்போய் விடுவார்கள். அந்நிய தேசத்தார் அவர்களை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோவார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேசத்தை மறந்தார்கள், தங்கள் தேசத்தின் நன்மைக்காகவும், பாதுகாப்புக்காகவும், அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவில்லை. ஆகையினால் அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குட்படுத்தப்பட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், தங்கள் தேசத்திற்காக, கர்த்தருடைய சமுகத்தில், பணிவோடு விண்ணப்பம் செய்திருந்தால், கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்திருப்பார். அவர்களுடைய தேசத்தையும் பாதுகாத்திருப்பார். ஆனால் இஸ்ரவேல் தேசத்திலுள்ளவர்களோ கர்த்தரை நம்பாமல், அந்நிய தேசத்தாரை நம்பினார்கள். இதனால் கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்யவில்லை.

இஸ்ரவேல் தேசத்திற்கு ஆபத்து வரும்போது, அந்த தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் சொற்ப எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களால் தேசத்திற்கு உதவிசெய்ய முடியவில்லை.

"நகரத்திலிருந்து புறப்பட்ட ஆயிரம்பேரில் நூறுபேரும், நூறுபேரில் பத்துப்பேரும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு மீந்திருப்பார்கள்" (ஆமோ 5:3) என்று கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே ஆயிரம் பலசாலிகளைக்கொண்ட பெரிய சேனை இருந்தது. அவர்கள் அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணிய பின்பு, அவர்களுடைய சேனையில் நூறு பேர் மாத்திரமே மீந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் நூறு பேரை யுத்தத்திற்கு அனுப்பினார்கள். ஆனால் பத்துபேர் மாத்திரமே யுத்தக்களத்திலிருந்து திரும்பி வருகிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் யுத்தத்திலே அழிந்துபோனார்கள்.

கர்த்தரைத் தேடுங்கள்
ஆமோ 5:4-15

ஆமோ 5:4. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்குச் சொல்லுகிறது என்னவென்றால்: என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்.

ஆமோ 5:5. பெத்தேலைத் தேடாதேயுங்கள், கில்காலிலும் சேராதேயுங்கள், பெயெர் செபாவுக்கும் போகாதேயுங்கள்; ஏனென்றால் கில்கால் சிறையிருப்பாகவும், பெத்தேல் பாழான ஸ்தலமாகவும் போகும்.

ஆமோ 5:6. கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; இல்லாவிட்டால் பெத்தேலில் இருக்கிற ஒருவராலும் அவிக்கப்படாத அக்கினி யோசேப்பின் வீட்டில் பற்றி, அதைப் பட்சிக்கும்.

ஆமோ 5:7. நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப்பண்ணுகிறவர்களே, அவரைத் தேடுங்கள்.

ஆமோ 5:8. அவர் அறுமீனையும் மிருகசீரிஷத்தையும் உண்டாக்கினவர்; அவர் மரண இருளை விடியற்காலமாக மாற்றி, பகலை இராத்திரியாக அந்தகாரப்படுத்துகிறவர்; அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியின் விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

ஆமோ 5:9. அரணான ஸ்தலத்தின்மேல் பாழ்க்கடிப்பு வரத்தக்கதாக, அவர் கொள்ளை கொடுத்தவனைப் பலத்தவனுக்கு விரோதமாய் லகுவடையப்பண்ணுகிறவர்.

ஆமோ 5:10. ஒலிமுகவாசலிலே கடிந்துகொள்ளுகிறவனை அவர்கள் பகைத்து, யதார்த்தமாய்ப் பேசுகிறவனை வெறுக்கிறார்கள்.

ஆமோ 5:11. நீங்கள் தரித்திரனை மிதித்து, அவன் கையிலே, தானியத்தைச் சுமைசுமையாய் வாங்குகிறபடியினால், நீங்கள் பொளிந்த கற்களால் வீடுகளைக் கட்டினீர்கள், ஆனாலும் அவைகளில் நீங்கள் குடியிருப்பதில்லை; இன்பமான திராட்சத்தோட்டங்களை நாட்டினீர்கள், ஆனாலும் அவைகளின் இரசத்தை நீங்கள் குடிப்பதில்லை.

ஆமோ 5:12. உங்கள் மீறுதல்கள் மிகுதியென்றும், உங்கள் பாவங்கள் பலத்தவென்றும் அறிவேன்; நீதிமானை ஒடுக்கி, பரிதானம் வாங்கி, ஒலிமுகவாசலில் ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுகிறீர்கள்.

ஆமோ 5:13. ஆகையால் புத்திமான் அந்தக்காலத்திலே மௌனமாயிருக்கவேண்டும்; அந்தக் காலம் தீமையான காலம்.

ஆமோ 5:14. நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.

ஆமோ 5:15. நீங்கள் தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, ஒலிமுகவாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங்கள்; ஒருவேளை சேனைகளின் தேவனாகிய கர்த்தர் யோசேப்பிலே மீதியானவர்களுக்கு இரங்குவார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "உங்கள் மீறுதல்கள் மிகுதி என்றும், உங்கள் பாவங்கள் பலத்தது என்றும் அறிவேன்" (ஆமோ 5:12) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம் பொதுவாகச் சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய மீறுதல்களையும் பாவங்களையும் அறிந்திருப்பதுபோல, அவர்களும் தங்களுடைய பாவங்களையும் மீறுதல்களையும் அறிந்திருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரோ, தங்கள் பாவங்களைப்பற்றியும், மீறுதல்களைப்பற்றியும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். தங்களிடத்தில் பாவங்களும் மீறுதல்களும் இல்லையென்று நினைக்கிறார்கள். அவர்கள் தங்களைப்பற்றி எண்ணவேண்டிய பிரகாரமாக எண்ணாமல், உயர்வாக எண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரைப்போலவே, நாமும் நம்மைப்பற்றி அறியாதவர்களாயிருக்கிறோம். நமக்குள்ளே வீணான சிந்தனைகளும் மாயையான காரியங்களும் நிரம்பியிருக்கிறது. துன்மார்க்கமான வார்த்தைகளைப் பேசுகிறோம். நம்முடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி பண்ணுகிறோம். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், நம்முடைய சுயவிருப்பத்தின் பிரகாரமாக ஜீவிக்கிறோம். ஆனாலும் நம்முடைய பாவங்களைக் குறித்தும், மீறுதல்களைக் குறித்தும் நாம் அறியாதவர்களாயிருக்கிறோம்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியப்பொறுப்புக்களை உண்மையாய் நிறைவேற்றவேண்டும். ஆனால், நம்மில் அநேகர், செய்யவேண்டிய வேலைகளை ஒழுங்காய் செய்வதில்லை. செய்யக்கூடாத வேலைகளை செய்கிறோம். இவ்விரண்டுமே பாவம்.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் திரளான பாவங்கள் காணப்படுகிறது. அவர்களுடைய பாவங்கள் பலத்ததாயிருக்கிறது. அவர்களுடைய மீறுதல்கள் மிகுதியாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிட்டுச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைத் தேட வேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரைத் தேடாமல் பெத்தேலைத் தேடுகிறார்கள். பெத்தேலில் நிறுவப்பட்டிருக்கிற பொன்கன்றுக்குட்டியைத் தேடுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம், "கில்காலிலும் சேராதேயுங்கள், பெயெர்செபாவுக்கும் போகாதேயுங்கள்" (ஆமோ 5:5) என்று சொல்லுகிறார். ஏனென்றால் கில்கால் சிறையிருப்பாகவும், பெத்தேல் பாழான ஸ்தலமாகவும் போகும் (ஆமோ 5:5).

கில்காலிலே இன்னும் ஏராளமான விக்கிரகங்களை நிறுவவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புகிறார்கள். முற்பிதாக்களின் காலத்தில், பெயர்செபா, கர்த்தருடைய பக்திமார்க்கத்திற்கு அடையாளமாயிருந்தது. இப்போதோ இந்த ஸ்தலம் விக்கிரகாராதனைக்கு அடையாளமாய் விளங்குகிறது.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அநியாயமும், அக்கிரமமும் அதிகரித்திருக்கிறது. அவர்கள் தரித்திரரை ஒடுக்குகிறார்கள். நியாயத்தை எட்டியாக மாற்றுகிறார்கள். நீதியை தரையிலே விழப்பண்ணுகிறார்கள் (ஆமோ 5:7). இஸ்ரவேல் புத்திரரிடத்தில் நீதியுமில்லை, நியாயமுமில்லை. நியாயாதிபதிகள் வழக்குகளை நியாயமாய் விசாரிப்பதில்லை. ஆகையினால் அவர்களுடைய நியாயவிசாரணை கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கிறது. அது எட்டியைப்போல கசப்பாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் அநியாயம் செய்கிறார்கள். அவர்களில் ஐசுவரியவான்களாயும், பலவான்களாயும் இருக்கிறவர்கள். தரித்திரனை மிதித்துப் போடுகிறார்கள். தரித்திரனுடைய கையிலே தானியத்தை சுமை சுமையாய் வாங்குகிறார்கள்.

நியாயாதிபதிகள் ஐசுவரியத்தை சம்பாதிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் நீதிக்கும், நியாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டுகிறார்கள். தரித்திரர்களுடைய வழக்குகளை விசாரிக்கும்போது, அவர்களிடத்திலிருந்து தானியத்தை பரிதானமாக வாங்கிக்கொள்கிறார்கள்.

நியாயாதிபதிகள் கேட்கும் பரிதானத்தைக் கொடுப்பதைத் தவிர, தரித்திரருக்கு வேறு வழியில்லை. அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டுமென்றால், நியாயாதிபதிகளுக்கு பரிதானம் கொடுக்கவேண்டும். தரித்திரர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பாடுபட்டு தங்கள் களஞ்சியத்தில் தானியத்தை சேமித்து வைத்திருக்கிறார்கள். ஒரு வருஷம் முழுவதற்கும் இந்த தானியமே அவர்களுடைய முழுக்குடும்பத்திற்கும் போஜனம். ஆனாலும் நியாயாதிபதிகளுக்கு பரிதானம் கொடுப்பதற்காக, தங்களுடைய போஜனத்திற்கென்று வைத்திருக்கும் தானியத்தை அவர்களுக்கு சுமை சுமையாகக் கொடுத்துவிடுகிறார்கள்.

தரித்திரர்கள் பல சமயங்களில் பணத்தை கடனாக வாங்குவதற்குப் பதிலாக தானியத்தை கடனாக வாங்கியிருப்பார்கள். அவர்களுக்கு கடன் கொடுத்தவர்கள் அவர்களை நெருக்குகிறபடியினால், தரித்திரர்கள் வேறு வழியில்லாமல், தங்களிடத்திலுள்ள தானியத்தை சுமை சுமையாக அவர்களுக்கு கொடுத்து, தங்களுடைய கடனை அடைத்து தீர்ப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களைப்பற்றி கர்த்தர் சொல்லும்போது, "நீதிமானை ஒடுக்கி, பரிதானம் வாங்கி, ஒலிமுகவாசலில் ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுகிறீர்கள்" (ஆமோ 5:12) என்று சொல்லுகிறார். தேசத்தில் பலவீனமாகயிருக்கிறவர்களுக்கு விரோதமாக துன்மார்க்கர் சட்டத்தை திருப்பிவிடுகிறார்கள். நீதிமான்கள் ஒரு பாவமும் செய்யாவிட்டாலும், ஐசுவரியவான்கள் நியாயத்தைப் புரட்டி, நீதிமானை ஒடுக்குகிறார்கள்.

ஐசுவரியவான்கள் ஏழைகளை ஒடுக்குகிறார்கள். நியாயாதிபதிகளோ, ஐசுவரியவான்களைப் பாதுகாப்பாக வாக்குப்பண்ணி, அவர்களிடத்திலிருந்து பரிதானம் வாங்கிக்கொள்கிறார்கள். ஒலிமுகவாசலிலே கடிந்துகொள்ளுகிறவனை அவர்கள் பகைத்து, யதார்த்தமாய்ப் பேசுகிறவனை வெறுக்கிறார்கள் (ஆமோ 5:10).

நியாயாதிபதிகள் ஜனங்களை ஒடுக்குவதுபோல, கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களையும் ஒடுக்குகிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், கர்த்தருடைய நாமத்தினால் சொல்லும் வார்த்தைகளை, துன்மார்க்கமான நியாயாதிபதிகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

தீர்க்கதரிசிகள் ஒலிமுக வாசலிலே நியாயாதிபதிகளையும், பிரபுக்களையும் கடிந்துகொள்கிறார்கள். நியாயாதிபதிகள் தங்களைக் கடிந்துகொள்கிற தீர்க்கதரிசிகளை வெறுக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் யதார்த்தமாய்ப் பேசுகிறார்கள். அவர்கள் சத்தியத்தைப் பேசுகிறார்கள். பரிதானம் வாங்கி நீதியைப் புரட்டுகிற நியாயாதிபதிகள் சத்தியத்தைப் பேசுவதுமில்லை. அதை நேசிப்பதுமில்லை. அவர்கள் யதார்த்தமாய்ப் பேசுகிற கர்த்தருடைய ஊழியக்காரரையும் பகைக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மீறுதல்கள் மிகுதியாயிருக்கிறது. பாவங்கள் பலத்திருக்கிறது. ஆனாலும் அவர்களில் சிலர் புத்திமான்களாயிருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தைப் பேசுகிறார்கள். இவர்கள் துன்மார்க்கரைக் கடிந்துகொள்கிறார்கள். துன்மார்க்கர் சத்தியத்திற்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். துன்மார்க்கரிடத்தில் நேர்மையும், கண்ணியமும் இருக்காது. ஆகையினால் துன்மார்க்கர் சத்தியவானுடைய பேச்சுக்களை கேட்க விரும்புவதில்லை.

கர்த்தர் தம்முடைய செய்திகளை, தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தருடைய செய்திகளைப் பெற்றுக்கொண்ட தீர்க்கதரிசிகள், அதை ஜனங்களுக்கு சொல்லாமல் அமைதியாயிருக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய செய்தியை தங்கள் மனதிற்குள் முனங்காமல், தெளிவாகவும், சத்தமாகவும் பேசவேண்டும்.

ஆனால் காலமோ தீமையான காலமாயிருக்கிறது. நியாயாதிபதிகள் ஒலிமுகவாசலில் அமர்ந்து, ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுகிறார்கள். "ஆகையால் புத்திமான் அந்தக்காலத்திலே மௌனமாயிருக்கவேண்டும் (ஆமோ 5:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். புத்திமான்கள் சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

தாங்கள் பேசுகிற ஒவ்வொரு வார்த்தைகளையும், புத்திமான்கள் மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும் பேசவேண்டும். துன்மார்க்கர் இவர்கள் பேசுகிற புத்தியுள்ள வார்த்தைகளையும், தப்பிதமாக வியாக்கியானம்பண்ணி விடுவார்கள். அவர்கள் நீதிமான்களுக்கு தண்டனை கொடுத்து விடுவார்கள். புத்திமான்கள் கவனமாயும் பேசவேண்டும். தைரியமாயும் பேசவேண்டும். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள், மனுஷருக்கு பயப்படமாட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் மீறுதல்களும் பாவங்களும் அதிகமாயிருக்கிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. பெத்தேலும், கில்காலும் விக்கிரகாராதனை நடைபெறுகிற ஸ்தலங்கள். கர்த்தர் இந்த ஸ்தலங்களை பாழான ஸ்தலமாக ஆக்குவார் (ஆமோ 5:5).

கில்கால் விக்கிரகாராதனைக்கு தலைநகரமாயிருக்கிறது. இந்த நகரம் சிறையிருப்பாகப்போகும். பெத்தேல் பாழான ஸ்தலமாகப் போகும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடவேண்டும். அப்பொழுது அவர்கள் பிழைப்பார்கள். அவர்கள் கர்த்தரைத் தேடவில்லையென்றால் இஸ்ரவேல் தேசம் அழிந்துபோகும். பெத்தேலில் அக்கினி பற்றியெரியும். அந்த அக்கினியை பெத்தேலிலிருக்கிற ஒருவராலும் அவித்துப்போட முடியாது. அந்த அக்கினி யோசேப்பின் வீட்டில் பற்றியெரியும்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் தேசத்தின்மீது வரும். அவருடைய கோபம் அக்கினியைப்போல பற்றியெரியும். கர்த்தருடைய கோபத்தின் அக்கினியில், பெத்தேலிலிருக்கிற எல்லா விக்கிரகங்களும் பட்சிக்கப்படும். அந்த அக்கினியை யாராலும் அவிக்க முடியாது. அதை ஒருவராலும் அணைத்துப்போட முடியாது.

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரனை மிதித்து, அவனுடைய கையிலே தானியத்தைப் பரிதானமாக வாங்குகிறார்கள். அநியாயமாய் சம்பாதித்த ஐசுவரியத்தினால் தங்களுக்கு பொளிந்த கற்களால் வீடுகளை கட்டுகிறார்கள். ஆனாலும் அவர்கள் அந்த வீடுகளில் குடியிருக்கமாட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரனை மிதித்து, ஏழைகளை ஒடுக்கி, அநியாயமாய் சம்பாதித்த பணத்தினால், தங்களுக்கு இன்பமான திராட்சத்தோட்டங்களை நாட்டுகிறார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் திராட்சத்தோட்டங்களின் ரசத்தைக் குடிக்கமாட்டார்கள். இயற்கையான ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கு, அவர்களுடைய பாவங்களும் அக்கிரமங்களும் அவர்களுக்குத் தடையாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை விட்டு விலகி கர்த்தரிடத்திற்கு திரும்பி வரவேண்டும்.

தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப, இஸ்ரவேல் புத்திரர் என்னென்ன காரியங்களை செய்யவேண்டும் என்று, கர்த்தர் அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லுகிறார். அவர்களிடத்தில் உண்மையும், நேர்மையும், கண்ணியமும், தெய்வபக்தியும் இருக்கவேண்டும். அவர்கள் சத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தெய்வங்களுக்கு தூபங்காட்டாமல், தங்கள் தேவனாகிய கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். அவர்களுடைய கிரியைகளில் நீதியும் நியாயமும் காணப்படவேண்டும். அவர்கள் பிறருக்கு அநியாயம் செய்யக்கூடாது. தரித்திரரை ஒடுக்கக்கூடாது. யாரையும் வஞ்சிக்கக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடவேண்டும். அப்பொழுது அவர்கள் பிழைப்பார்கள் (ஆமோ 5:4). கர்த்தரை உண்மையான மனதோடும், முழுஇருதயத்தோடும் தேடவேண்டும். முழுஇருதயத்தோடு தேடாதவர்கள், கர்த்தரை உண்மையோடு தேடமாட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடவேண்டுமேயல்லாமல், பெத்தேலைத் தேடக்கூடாது (ஆமோ 5:5). அவர்கள் விக்கிரகங்களைத் தேடிப்போனால், கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் இழந்துவிடுவார்கள். கர்த்தரைத் தேடினால் அவர்கள் பிழைப்பார்கள்.

நாம் கர்த்தரைத் தேடும்போது, அவருடைய சிந்தைகளையும், அவருடைய பிரமாணங்களையும் அறிந்துகொள்ளும் வண்ணமாக, அவரைத் தேடவேண்டும். கர்த்தரைத் தேடுவதே நம்முடைய ஜீவன். கர்த்தரைத் தேடுகிறவர்கள் பிழைப்பார்கள்.

ஆமோஸ் தீர்க்கதரிசி, இஸ்ரவேல் புத்திரரிடம், "கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோ 5:6) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர், கர்த்தரைத் தேடும்போது, தங்கள்மீது ஆக்கினைத்தீர்ப்பாக வந்திருக்கும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்களிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். அவர்களுடைய தேசம் சத்துருக்களிடமிருந்து தப்பிக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடும்போது, அவர்கள் இப்போது அனுபவிக்கும் தீங்குகளுக்கு விலக்கப்படுவார்கள். அவர்களுக்கு நன்மை உண்டாகும். ஆறுதலும் சமாதானமும் உண்டாகும். அவர்களுடைய ஆத்துமாக்கள் செழிக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் பரிசுத்தமாயிருக்கும்.

நாம் தேடுகிற கர்த்தர் எப்படிப்பட்டவர் என்பதை, ஆமோஸ் இங்கு விரிவாகச் சொல்லுகிறார்.

"அவர் அறுமீனையும் மிருகசீரிஷத்தையும் உண்டாக்கினவர்; அவர் மரண இருளை விடியற்காலமாக மாற்றி, பகலை இராத்திரியாக அந்தகாரப்படுத்துகிறவர்; அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியின் விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம். அரணான ஸ்தலத்தின்மேல் பாழ்க்கடிப்பு வரத்தக்கதாக, அவர் கொள்ளை கொடுத்தவனைப் பலத்தவனுக்கு விரோதமாய் லகுவடையப்பண்ணுகிறவர்" (ஆமோ 5:8,9).

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவர் சர்வசிருஷ்டிகர். தேவனுடைய சிருஷ்டிக்கும் வல்லமையைப்பற்றி, ஆமோஸ் அதிகமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"அவர் பர்வதங்களை உருவாக்கினவரும், காற்றைச் சிருஷ்டித்தவரும், மனுஷனுடைய நினைவுகள் இன்னதென்று அவனுக்கு வெளிப்படுத்துகிறவரும், விடியற்காலத்தை அந்தகாரமாக்குகிறவரும், பூமியினுடைய உயர்ந்த ஸ்தானங்களின்மேல் உலாவுகிறவருமாயிருக்கிறார்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவருடைய நாமம்" (ஆமோ 4:13).

கர்த்தரே நட்சத்திர ராசிகளை சிருஷ்டித்தவர். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, அந்த நட்சத்திரங்களை தங்களுடைய தேவர்களின் நட்சத்திர ராசி என்று சொல்லுகிறார்கள் (ஆமோ 5:26). ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அவரே வானத்திலுள்ள எல்லா நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தார்.

"அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ? இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச் சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ? வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியையாளும் ஆளுகையை நீ திட்டம்பண்ணுவாயோ?" (யோபு 38:31-33).

"அவர் ஒருவரே வானங்களை விரித்து, சமுத்திர அலைகளின்மேல் நடக்கிறவர். அவர் துருவச்சக்கர நட்சத்திரங்களையும், மிருகசீரிஷத்தையும், அறுமீனையும், தட்சண மண்டலங்களையும் உண்டாக்கினவர்" (யோபு 9:8,9).

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் பகலும் இரவும் மாறி மாறி வருகிறது. அதில் எந்தவித மாற்றமுமில்லாமல், இன்று வரையிலும் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது. காலையில் சூரியன் உதிக்கும்போது, பூமியின்மீது வெளிச்சமுண்டாகிறது. மாலையில் சூரியன் மறையும்போது பூமியில் இருள் சூழ்கிறது. கர்த்தருடைய வல்லமையினாலேயே, இரவும் பகலும் மாறி மாறி வருகிறது. கர்த்தர் மரணஇருளை விடியற்காலமாக மாற்றுகிறார். அவர் பகலை இராத்திரியாக அந்தகாரப்படுத்துகிறார்.

கர்த்தருடைய வல்லமை ஒருபோதும் குறைந்துபோவதில்லை. நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பி, கர்த்தருடைய சமுகத்தில் பணிவோடு விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் நம்முடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார். நம்முடைய பாடுகளையும், வேதனைகளையும் நம்மைவிட்டு நீக்கிப்போடுவார். நமக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் கொடுப்பார்.

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், வானம் மழையைப் பெய்கிறது. மழை பூமியை நனைக்கிறது. பூமியில் தாவரங்களும் விருட்சங்களும் முளைக்கிறது. விருட்சங்கள் சுவையான கனிகளைக் கொடுக்கிறது. கர்த்தர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியின் விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர். கர்த்தர் என்பது அவருடைய நாமம் (ஆமோ 5:8).

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். அவர் தம்மைத் தேடுகிற தம்முடைய ஜனத்திற்கு பெலத்தையும் வல்லமையையும் கொடுக்கிறார். கர்த்தருடைய ஜனம், தாங்கள் இழந்துபோன பலத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்கள். கர்த்தர் கொள்ளைக்கொடுத்தவனை, பலத்தவனுக்கு விரோதமாய் லகுவடையப்பண்ணுகிறார் (ஆமோ 5:9).

கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு மகத்தான ஆசீர்வாதங்கள் கிடைக்கும். நாம் கர்த்தரைத் தேடும்போது, நாம் இழந்துபோன சரீர ஆரோக்கியத்தையும், நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பேச்சிலும், செய்கையிலும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர்களிடத்தில் நீதியும், நேர்மையும், உண்மையும், கண்ணியமும் காணப்படவேண்டும். அவர்கள் தீமையைத் தேடக்கூடாது. நன்மையைத் தேடவேண்டும். அவர்கள் தீமையை வெறுக்கவேண்டும். நன்மையை விரும்பவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் ஒலிமுகவாசலிலே நியாயத்தை நிலைப்படுத்தவேண்டும் (ஆமோ 5:14,15).

இஸ்ரவேல் புத்திரர் நியாயத்தை எட்டியாக மாற்றினார்கள். நீதியை தரையிலே விழப்பண்ணினார்கள் (ஆமோ 5:7). ஒலிமுகவாசலிலே அநியாயம் செய்தார்கள். இப்போதோ அவர்கள் மறுபடியும், ஒலிமுகவாசலிலே நியாயத்தை நிலைப்படுத்தவேண்டும். எங்கு நியாயம் அழிந்துபோனதோ, அங்கு நியாயம் மறுபடியும் நிலைப்படுத்தப்படவேண்டும்.

அநீதி ஆளுகை செய்த இடங்களில் நீதி ஆளுகை செய்யவேண்டும். ஜனங்களுடைய மனக்குறைவுகள் அகற்றப்பட்டு, அவர்களுக்கு மனஆறுதலும், சந்தோஷமும் கொடுக்கப்படவேண்டும். தரித்திரனை மிதித்து, ஏழைகளை ஒடுக்கினவர்கள், இனிமேல் அவர்களுக்கு ஆதரவாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் தேசத்தில் இவை நடைபெறவேண்டுமென்றால், இஸ்ரவேல் புத்திரர் தீமையை வெறுக்கவேண்டும். நன்மையை விரும்பவேண்டும். அவர்கள் தீமையை தேடாமல் நன்மையைத் தேடவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் பெத்தேலைத் தேடாமல், கர்த்தரைத் தேடவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுக்குள் நற்குணத்தை விரும்பவேண்டும். பிறருக்கு நன்மை செய்ய நாடவேண்டும். நல்லவர்களை நேசிக்கவேண்டும். நாம் எந்த நன்மையை செய்தாலும், அதை அன்பினால் செய்யவேண்டும். நாம் செய்யும் நன்மைகளை சந்தோஷமாய்ச் செய்யவேண்டும். நாம் நன்மையான காரியங்களில் பிரியப்படவேண்டும்.

நாம் தீமையைத் தேடாமல், நன்மையைத் தேடும்போது, சேனைகளின் தேவனாகிய கர்த்தர் நம்மோடே கூடயிருப்பார். நம்முடைய வார்த்தைகளின் மூலமாயும், செய்கைகளின் மூலமாயும் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும். நாம் கர்த்தரைத் தேடும்போது ஜெபம்பண்ணுகிறோம். நம்முடைய ஜெபத்தில் நாம் பயன்படுத்துகிற வார்த்தைகள் சத்தியமான வார்த்தைகளாயிருக்கவேண்டும். நம்முடைய ஜீவியம், நம்முடைய ஜெபவார்த்தைகளோடு ஒத்துப்போகவேண்டும். நாம் ஜெபம்பண்ணுவதற்கு ஏற்ற பிரகாரம் ஜீவிக்கவேண்டும். அப்போது நாம் எதற்காக ஜெபித்தோமோ, அதை கர்த்தர் நமக்கு கொடுப்பார். நாம் நன்மையை விரும்பி, நன்மையை நாடும்போது, நம்முடைய தேசம் அழிவிலிருந்து இரட்சிக்கப்படும்.

புலம்பல் உண்டாகும்
ஆமோ 5:16,17

ஆமோ 5:16. ஆதலால் ஆண்டவரும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: எல்லாத் தெருக்களிலும் புலம்பல் உண்டாகும்; எல்லா வீதிகளிலும் ஐயோ! ஐயோ! என்று ஓலமிடுவார்கள்; பயிரிடுகிறவர்களைத் துக்கங் கொண்டாடுகிறதற்கும், ஒப்பாரிபாட அறிந்தவர்களைப் புலம்புகிறதற்கும் வரவழைப்பார்கள்.

ஆமோ 5:17. எல்லாத் திராட்சத்தோட்டங்களிலும் புலம்பல் உண்டாயிருக்கும், நான் உன் நடுவே கடந்துபோவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திற்கு பயங்கரமான அழிவு வரப்போகிறது. கர்த்தர் இந்த அழிவைப்பற்றி சாதாரண வார்த்தைகளில் சொல்லுவதற்கு பதிலாக, பயங்கரமான வார்த்தைகளினால், சோகமான வார்த்தைகளினாலும் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கும்போதே, இஸ்ரவேல் புத்திரருக்கு பயமும் நடுக்கமும் உண்டாகும்.

இங்கு சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகள் ஆமோஸ் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் மாத்திரமல்ல. இது கர்த்தருடைய வார்த்தைகளாயும் இருக்கிறது. ஆண்டவரும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார். "சேனைகளின் தேவனாகிய கர்த்தர்" என்னும் பெயருக்கு "அதோனாய்" என்னும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் சர்வஅதிகாரமும், சர்வஆளுகையுமுள்ளவர் என்பது இந்தப் பெயரின் பொருளாகும்.

கர்த்தரால் மாத்திரமே தம்முடைய வார்த்தைகளை நன்மையாக ஆக்க முடியும். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை புலம்பலுக்கும், துக்கம் கொண்டாலுக்கும் ஒப்புக்கொடுக்கிறார். நகரத்திலும் துக்கமுண்டாயிருக்கும். கிராமங்களிலும் துக்கமுண்டாயிருக்கும்.

எல்லா தெருக்களிலும் புலம்பல் உண்டாகும். இது நகரத்தில் உண்டாயிருக்கிற புலம்பல். கிராமங்களிலோ, எல்லா வீதிகளிலும் ஐயோ! ஐயோ! என்று ஓலமிடுவார்கள். "பயிரிடுகிறவர்களைத் துக்கங்கொண்டாடுகிறதற்கும், ஒப்பாரிபாட அறிந்தவர்களைப் புலம்புகிறதற்கும் வரவழைப்பார்கள்" (ஆமோ 5:16).

திராட்சத்தோட்டங்களில் வேலை செய்கிறவர்கள் சந்தோஷமாக ஆடிப்பாடி வேலைசெய்வார்கள். அவர்களுடைய சந்தோஷத்திற்கு ஒரு குறைவும் இருக்காது. திராட்சத்தோட்டங்களில் சந்தோஷத்தைத் தவிர, வேறு எந்தவிதமான துக்கமோ, கவலையோ, கலக்கமோ இருக்காது.

ஆனால் இஸ்ரவேல் தேசத்திற்கு அழிவு நெருங்கும்போது, "எல்லா திராட்சத்தோட்டங்களிலும் புலம்பல் உண்டாயிருக்கும்" (ஆமோ 5:17) என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நிய தேசத்தார் இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வருவார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நடுவே கடந்துபோவார். இஸ்ரவேல் புத்திரரை பாதுகாக்கிறவராக அல்ல, அவர்களை அழிக்கிறவராக கர்த்தர் அவர்கள் நடுவே கடந்துபோவார். எகிப்து தேசத்தில் சங்கார தூதன் கடந்துபோனதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தார் மத்தியிலே கடந்துபோவார்.

கர்த்தருடைய நாள் ஆமோ 5:18-20

ஆமோ 5:18. கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! அதினால் உங்களுக்கு என்ன உண்டு? கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும்.

ஆமோ 5:19. சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக்கரடி எதிர்ப்பட்டது போலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும்.

ஆமோ 5:20. கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல், இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாயிருக்குமல்லவோ?

கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லப்படுகிறது. ஆனால் அவர்களோ, கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை அசட்டைபண்ணுகிறார்கள். கர்த்தருடைய நாள் வரட்டும் என்று ஆர்வத்தோடு சொல்லுகிறார்கள். கர்த்தருடைய நாளில் தங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

கர்த்தருடைய நாள், இஸ்ரவேல் புத்திரர் எதிர்பார்க்கிற பிரகாரம், அவர்களை ஆசீர்வதிக்கிற நாளாயிராது. கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும். "கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ" (ஆமோ 5:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்கள், தங்கள் மத்தியில் குழப்பத்தையும், யுத்தத்தையும் விரும்புகிறார்கள். கர்த்தருடைய நாளின்போது, இஸ்ரவேல் புத்திரருடைய ஆவியிலே அமைதியும் ஆறுதலும் இருக்காது. கர்த்தருடைய நாள் எப்போது முடியும் என்று அவர்கள் ஏங்கி தவித்துக்கொண்டிருப்பார்கள். கர்த்தருடைய நாளிலே, தங்களுக்கு வந்த தீங்குகள், தங்களை விட்டு எப்போது நீங்கிப்போகும் என்று தவித்துக்கொண்டிருப்பார்கள். அந்தகாரம் எப்போது வெளிச்சமாய் மாறும் என்று ஏக்கத்தோடு காத்துக்கொண்டிருப்பார்கள்.

கர்த்தருடைய நாளில் இஸ்ரவேல் புத்திரருக்கு தீங்குகள் வரும். அவர்களுக்கு துன்பங்களும் கஷ்டங்களும் வரும். தங்களுடைய கஷ்டங்களை தாங்கமுடியாமல் இஸ்ரவேல் புத்திரர் அழுது புலம்புவார்கள். இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவிப்பதற்கு பதிலாக, தங்களுக்கு மரணம் வந்தால் நன்றாயிருக்கும் என்று சொல்லுவார்கள்.

கர்த்தருடைய நாளை அசட்டைபண்ணினவர்களும், அந்த நாளை ஏளனம்பண்ணினவர்களும், கர்த்தருடைய நாளின்போது மிகுந்த வேதனைகளை அனுபவிப்பார்கள்.

"நாம் பார்க்கும்படி அவர் தீவிரித்துத் தமது கிரியையைச் சீக்கிரமாய் நடப்பிக்கட்டுமென்றும், இஸ்ரவேலின் பரிசுத்தருடைய ஆலோசனையை நாம் அறியும்படி அது சமீபித்து வரட்டுமென்றும் சொல்லுகிறவர்களுக்கு ஐயோ" (ஏசா 5:19).

கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்கள், அவருடைய நியாயத்தீர்ப்புகளை விரும்புகிறார்கள். கர்த்தருடைய நாளின்போது, "உங்களுக்கு என்ன உண்டு" (ஆமோ 5:18) என்று கர்த்தர் கேட்கிறார். கர்த்தருடைய நாளில் இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மையான முடிவுகள் எதுவும் உண்டாகாது.

கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும். கர்த்தர் பகலை இருளாக்கும்போது, இந்த உலகத்தினால் இருளை வெளிச்சமாக்க முடியாது. கர்த்தருடைய கிரியைகளுக்கு விரோதமாக யாரும் கிரியை செய்ய முடியாது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்கள், புத்திதெளிவில்லாதவர்கள். அவர்கள் தங்கள் மதியீனத்தினால் கர்த்தருடைய நாளை விரும்புகிறார்கள். கர்த்தருடைய நாள் தங்களுக்கு நன்மையான நாளாகயிருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய நாள் அவர்களுக்கு மோசமான நாளாகயிருக்கும் என்பதை, அந்த நாள் வரும்போது அறிந்துகொள்வார்கள்.

தம்முடைய நாள் எப்படியிருக்கும் என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு விளக்கமாக சொல்லுகிறார். "சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக்கரடி எதிர்ப்பட்டதுபோலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும்" (ஆமோ 5:19).

கர்த்தருடைய நாளின்போது, மனுஷன் தனக்கு வரும் தீங்குகளுக்கு தப்பித்து ஓட முயற்சி பண்ணுவான். ஆனாலும் அவன் எங்கு ஓடினாலும் தீங்கு அவனைத் தொடரும். ஆபத்து அவனை பின்தொடர்ந்து வரும். அவனுக்கு பாதுகாப்பு இருக்காது. கர்த்தருடைய நாளில், மனுஷன், ஒரு தீங்குக்கு தப்பித்து ஓடினாலும், மற்றொரு தீங்கு அவனைப் பின்பற்றி தொடரும்.

"கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல், இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாயிருக்குமல்லவோ?" (ஆமோ 5:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மாய்மாலம்
ஆமோ 5:21-27

ஆமோ 5:21. உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன்; உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை.

ஆமோ 5:22. உங்கள் தகனபலிகளையும் போஜனபலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன்; கொழுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திரபலிகளையும் நான் நோக்கிப் பார்க்கமாட்டேன்.

ஆமோ 5:23. உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்.

ஆமோ 5:24. நியாயம் தண்ணீரைப்போலவும், நீதிவற்றாத நதியைப்போலவும் புரண்டுவரக்கடவது.

ஆமோ 5:25. இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலே இருந்த நாற்பது வருஷம்வரையில் பலிகளையும் காணிக்கைகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ?

ஆமோ 5:26. நீங்கள் உங்களுக்கு உண்டாக்கின மோளோகுடைய கூடாரத்தையும், உங்கள் தேவர்களின் நட்சத்திரராசியாகிய உங்கள் சொரூபங்களின் சப்பரத்தையும் சுமந்துகொண்டு வந்தீர்களே.

ஆமோ 5:27. ஆகையால் உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன் என்று சேனைகளுடைய தேவன் என்னும் நாமமுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். ஆனாலும் தாங்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய வேஷத்தை அறிந்திருக்கிறார். ஆகையினால் அவர்களுடைய பண்டிகைகளையும், ஆசரிப்புக்களையும் கர்த்தர் வெறுக்கிறார்.

மாய்மாலமான ஆராதனைகள் கர்த்தருக்கு அருவருப்பானது. அவர்கள் பெத்தேலிலே பண்டிகைகளை ஆசரிக்கிறார்கள். எருசலேமில் கர்த்தருக்கு பண்டிகைகளை ஆசரித்ததுபோல, பெத்தேலிலே பொன்கன்றுக்குட்டிக்கு பண்டிகைகளை ஆசரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய ஆசரிப்பு நாட்களில் கர்த்தருக்கு பிரியமில்லை. அவர்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்தில் கூடிவந்து, பண்டிகைகளை ஆசரிப்பதுபோல, இப்போது பெத்தேலிலே கூடிவந்து, விக்கிரக தெய்வங்களுக்கு பண்டிகைகளை ஆசரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தகனபலிகளையும், போஜனபலிகளையும் கர்த்தருக்கு படைக்கிறார்கள். கொழுமையான மிருகங்களின் ஸ்தோத்திர பலிகளையும் கர்த்தருக்கு செலுத்துகிறார்கள். கர்த்தரிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, இஸ்ரவேல் புத்திரர் ஸ்தோத்திர பலிகளை செலுத்தவேண்டும். ஆனாலும், அவர்களுடைய இருதயத்தில் கர்த்தர்மீது பக்தியில்லை. அவர்களிடத்தில் மாய்மாலம் காணப்படுகிறது.

"உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன்; உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை. உங்கள் தகனபலிகளையும் போஜனபலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன்; கொழுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திரபலிகளையும் நான் நோக்கிப் பார்க்கமாட்டேன்" (ஆமோ 5:21,22) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தேவாலயத்தின் கீதங்களை கற்றுக்கொண்டு, பாட்டுக்களைப் பாடுகிறார்கள். இசைக்கருவிகளையும் வாசிக்க கற்றுக்கொள்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களிடத்தில், "உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்" (ஆமோ 5:23) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே தீயயோசனைகள் இருக்கிறது. தாங்கள் கர்த்தருக்கு பலிகளை செலுத்தினால், கர்த்தருக்கு ஸ்தோத்திர கீதங்களை பாடினால், கர்த்தர் தங்கள்மீது அன்பாகயிருப்பார் என்றும், தாங்கள் பாவம் செய்தாலும், கர்த்தர் தங்களுடைய பாவங்களை கண்டுகொள்ளமாட்டார் என்றும், தாங்கள் பாவத்திலே தொடர்ந்து ஜீவிக்கலாம் என்றும் இஸ்ரவேல் புத்திரர் எதிர்பார்க்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் யோசனைகளை அறிந்திருக்கிறார். ஆகையினால் அவர்களுடைய பண்டிகைகளை பகைத்து வெறுக்கிறார். கர்த்தர் சத்தியத்தை சிநேகிக்கிறவர். மாய்மாலத்தை வெறுக்கிறவர். இஸ்ரவேல் புத்திரருடைய ஆசரிப்பு நாட்களில் கர்த்தருக்கு பிரியமில்லை. அவர்களுடைய இருதயத்தில் நன்றி இல்லை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்காமல், கர்த்தருக்கு விரோதமாகத் தீங்கு செய்கிறார்கள். அவருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். ஆகையினால் அவர்களுடைய தகனபலிகளையும், போஜனபலிகளையும், ஸ்தோத்திரபலிகளையும் கர்த்தர் அங்கீகரிக்க மறுக்கிறார். அவற்றை நோக்கிப் பார்ப்பதற்கும் மறுக்கிறார்.

நாம் கர்த்தருக்கு எவ்வாறு பலிகளை செலுத்தவேண்டும் என்னும் நியமங்களை கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தரை துதிக்கிறவர்கள் ஆவியோடும் துதிக்கவேண்டும். உண்மையோடும் துதிக்கவேண்டும். கர்த்தருக்கு பலிசெலுத்துகிறவர்கள் சுத்தமான இருதயத்தோடு பலிசெலுத்தவேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற ஆவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் முழுஇருதயத்தோடும், முழுமனதோடும், முழு ஆத்துமாவோடும் அன்புகூரவேண்டும். நாம் நம்மிடத்தில் அன்புகூருவதுபோல பிறரிடத்திலும் அன்புகூரவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும். பலிசெலுத்துதலைவிட கீழ்ப்படிதே உத்தமம்.

துன்மார்க்கர் செலுத்தும் பலிகள் கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கிறது. "துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" *(நீதி 15:8)*.

பலிசெலுத்துகிறவர்களின் இருதயத்தில் நீதியும் நியாயமும் நிரம்பியிருக்கவேண்டும். "நியாயம் தண்ணீரைப்போலவும், நீதிவற்றாத நதியைப்போலவும் புரண்டுவரக்கடவது" (ஆமோ 5:24) என்று கர்த்தர் சொல்லுகிறார். நீதியும் நியாயமுமில்லாமல் செலுத்துகிற பலிகளை, கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பொதுவான மனந்திரும்புதல் காணப்படவேண்டும். அவர்கள் தங்களுடைய பாவங்களைவிட்டு விலகி, நீதியைப் பின்பற்ற வேண்டும். அவர்களுடைய இருதயங்கள் பரிசுத்தமாக்கப்பட்டு புதுப்பிக்கப்படவேண்டும். கர்த்தருடைய நீதியும், அவருடைய நியாயமும் இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்யவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதுபோல, தங்களுடைய ஜீவியத்திலே கர்த்தருடைய நியாயத்தை, தண்ணீரைப்போல பாய்ச்சவேண்டும். அவர்களுடைய ஜீவியங்களில் நீதி வற்றாத நதியைப்போல புரண்டு வரவேண்டும். நதி பிரவாகித்து ஓடும். ஓடுகிற நதி இருகரைகளையும் தொட்டுக்கொண்டு ஓடும். நதியின் அகலம் விஸ்தாரமாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரருடைய ஜீவியங்களில், அவர்களுடைய நீதி, புரண்டு ஓடுகிற வற்றாத நதியைப்போல, பெலமுள்ளதாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் வழக்குகளை விசாரிக்கும்போது, அதை நீதியாகவும், நியாயமாகவும் விசாரிக்கவேண்டும். நீதியான தீர்ப்புக்களைச் சொல்லவேண்டும். பரிதானம் வாங்கி நீதியைப் புரட்டி விடக்கூடாது.

வற்றாத நதியின் தண்ணீர் சுத்தமாயிருக்கும். அது தெளிவாயிருக்கும். அதுபோலவே, இஸ்ரவேல் புத்திரரின் மனச்சாட்சி சுத்தமனச்சாட்சியாயிருக்க வேண்டும். அவர்களுடைய மனச்சாட்சியில் பொய், பித்தலாட்டம், மாய்மாலம், அநீதி, அநியாயம் ஆகிய அசுத்தங்கள் கலந்திருக்கக்கூடாது. அவர்களுடைய நீதி வற்றாத நதியைப்போல புரண்டு வரவேண்டும்.

கர்த்தர் நீதியின் பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல, பலிகளின் பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரிடம், "நீங்கள் வனாந்தரத்திலே இருந்த நாற்பது வருஷம்வரையில் பலிகளையும் காணிக்கைகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ?" (ஆமோ 5:25) என்று கேட்கிறார். அவர்கள் பலிசெலுத்தவில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷகாலங்களில், அவர்கள் பல சந்தர்ப்பங்களில், கர்த்தருக்கு பலிசெலுத்தவில்லை. பலிசெலுத்துவதை புறக்கணித்துவிட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறியபோதும், அதன் பின்பு வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணின முதலாவது வருஷத்திலும் பஸ்காவை ஆசரித்தார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய வனாந்தர பிரயாணத்தின் இரண்டாம் வருஷத்திற்கு பின்பிலிருந்து, அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் காலம் வரையிலும், அவர்கள் பஸ்காவை ஆசரிக்கவே இல்லை.

இஸ்ரவேல் புத்திரர் தமக்கு பலிகளை செலுத்தவில்லை என்பதற்காகவோ, அவர்கள் பஸ்காவை ஆசரிக்கவில்லை என்பதற்காகவோ, கர்த்தர் அவர்கள்மீது குற்றம் சொல்லவுமில்லை. அவர்கள்மீது கோபப்படவுமில்லை. கர்த்தர் தம்முடைய அன்பையும், ஆதரவையும், பாதுகாப்பையும், பராமரிப்பையும் இஸ்ரவேல் புத்திரருக்கு தொடர்ந்து கொடுத்துக்கொண்டே வந்தார்.

ஆனாலும் கர்த்தருடைய ஜனம், வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணிய காலத்தில், அவர்கள் அவிசுவாசத்தோடு கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அப்போது கர்த்தர் அவர்கள்மீது கோபப்பட்டார். அவர்கள் பலிசெலுத்தாத காலத்தில் கர்த்தர் அவர்கள்மீது கோபப்படவில்லை. ஆனால் அவர்கள் அவிசுவாசத்தோடு, முறுமுறுத்தபோது, கர்த்தர் அவர்கள்மீது கோபப்பட்டார்.

கர்த்தருடைய ஜனத்தாரிடம், பலிசெலுத்துவதில் குறைவு இருக்கலாம். ஆனால் அவர்களுடைய நீதிநெறியான காரியங்களில் குறைவு இருக்கக்கூடாது. அவர்கள் பண்டிகைகளின் பலிகளை செலுத்தாமலிருக்கலாம். ஆனால் ஆவிக்குரிய பலிகளை செலுத்தாமலிருக்கக்கூடாது.

விசுவாசிகளாகிய நம்மிடத்தில் ஜெபவார்த்தைகளும், துதியின் வார்த்தைகளும் குறைவுபட்டாலும், நம்மிடத்தில் நீதியும், நேர்மையும், கண்ணியமும் குறைவில்லாமலிருக்கவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். நம்முடைய இருதயம் நொறுங்குண்டாதாகயிருக்கவேண்டும். நாம் கர்த்தரிடத்தில் அன்புகூரவேண்டும். கர்த்தருடைய பார்வையில் இதுவே பிரதானம். கர்த்தர் நம்முடைய பலிகளைவிட, நம்முடைய நொறுங்குண்ட இருதயத்தின்மீது பிரியமாயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப் போகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி, அவற்றிற்கு பலிகளை செலுத்துகிறார்கள். அதே சமயத்தில் அவர்கள் கர்த்தருக்கும் பலிகளை செலுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய முற்பிதாக்கள், வனாந்தரத்தில் பிரயாணம் செய்த காலத்தில், விக்கிரகங்களையும் ஆராதித்தார்கள். கர்த்தருக்கும் பலிசெலுத்தினார்கள். கர்த்தரும் அவர்களுடைய பலிகளை அங்கீகரித்தார். அவர்கள்மீது பிரியமாயிருந்தார்.

அதுபோலவே, கர்த்தர், இப்போதும் தாங்கள் செலுத்தும் பலிகளையும் அங்கீகரிக்கவேண்டும் என்றும், தங்கள்மீதும் கர்த்தர் பிரியமாயிருக்கவேண்டும் என்றும் இஸ்ரவேல் புத்திரர் எதிர்பார்க்கிறார்கள். வனாந்தரத்திலே தங்கள் பிதாக்களை அங்கீரித்த தேவன், இப்போது இஸ்ரவேல் தேசத்திலே, தங்களையும் அங்கீகரிக்கவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம், "பலிகளையும் காணிக்கைகளையும் எனக்கு செலுத்தினீர்களோ" (ஆமோ 5:25) என்று கேட்கும்போது, "பலிகளையும் காணிக்கைகளையும் எனக்கு மாத்திரமா செலுத்தினீர்கள்" என்று கர்த்தர் கேட்பதாக வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு மாத்திரம் என்று பிரத்தியேகமாக பலிகளை செலுத்தவில்லை. அவர்கள் கர்த்தருக்கும் பலிகளை செலுத்தினார்கள். விக்கிரகங்களுக்கும் பலிகளை செலுத்தினார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களுடைய தகனபலிகளையும், போஜனபலிகளையும், ஸ்தோத்திரபலிகளையும் அங்கீகரிக்க மறுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம், "நீங்கள் உங்களுக்கு உண்டாக்கின மோளோகுடைய கூடாரத்தையும், உங்கள் தேவர்களின் நட்சத்திரராசியாகிய உங்கள் சொரூபங்களின் சப்பரத்தையும் சுமந்துகொண்டுவந்தீர்களே" (ஆமோ 5:26) என்றும் சொல்லுகிறார்.

மோளேகு புறஜாதியாரின் தெய்வம். இஸ்ரவேல் புத்திரர் மோளேகை ஒரு சப்பரத்தில் வைத்து, தெரு தெருவாக சுற்றிக்கொண்டு வருவார்கள். மோளேகு ஒருவேளை சூரியனைக் குறிக்கலாம். மோளேகே தங்களுடைய ராஜா என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். மோளேகைப்பற்றி ஸ்தேவானும் சொல்லியிருக்கிறார்.

"பணிந்துகொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களாகிய மோளோகினுடைய கூடாரத்தையும், உங்கள் தேவனாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே; ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கு அப்புறத்திலே குடிபோகப்பண்ணுவேன் என்றும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே" (அப் 7:43).

இஸ்ரவேல் புத்திரர் வானத்திலுள்ள எல்லா நட்சத்திரங்களையும், தங்களுக்கு தேவர்களாக்கிக்கொண்டார்கள். அவற்றிற்கு சொரூபங்களை செய்து, அவற்றை சப்பரங்களில் ஏற்றி, சுமந்துகொண்டு வந்தார்கள். ஒவ்வொரு சொரூபத்திற்கும் ஒரு பெயரையும் கொடுத்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் இதுபோல விக்கிரகங்களையும் ஆராதிக்கிறார்கள். கர்த்தருக்கும் பலிசெலுத்துகிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களுடைய பலிகளை அங்கீகரிக்க மறுக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விசேஷித்த ஜனங்கள். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி, அவற்றிற்கு பலிகளை செலுத்தி, அவற்றை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய விக்கிரகாராதனையினிமித்தமாய், கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வருகிறது. "சேனைகளுடைய தேவன்" என்னும் நாமமுள்ள கர்த்தர், தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். "உங்களை தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன்" (ஆமோ 5:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுப்பார். சீரியர்கள் இஸ்ரவேல் புத்திரரை சிறைப்பிடித்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அசீரியருடைய கைகளில் ஒப்புக்கொடுப்பார். அசீரியருடைய தேசம் சீரிய தேசத்திற்கு அப்பால் இருக்கிறது.

BELLWETHER INTERNATIONAL

ஆமோஸ் - விரிவுரை
AMOS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை திகிலாத்பிலேசருடைய கைகளில் ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் இப்போது இஸ்ரவேல் புத்திரரை சல்மநேசாருடைய கைகளில் ஒப்புக்கொடுக்கிறார். இவர்களுடைய தேசம் தமஸ்குவைவிட தூரத்திலுள்ளது. திகிலாத்பிலேசர் இஸ்ரவேல் புத்திரருக்கு தீங்கு செய்ததைவிட, சல்மநேசர் இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமான தீங்குகளை செய்தான்.

"நான் தமஸ்குவின் தாழ்ப்பாளை உடைத்து, குடிகளை ஆவேன் என்னும் பள்ளத்தாக்கிலும், செங்கோல் செலுத்துகிறவனைப் பெத்ஏதேனிலும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்; அப்பொழுது சீரியாவின் ஜனங்கள் கீருக்குச் சிறைப்பட்டுப்போவார்கள்" (ஆமோ 1:5) என்று கர்த்தர் சொன்ன தீர்க்கதரிசனம், இங்கு நிறைவேறுகிறது.

6 அதிகாரம்

கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை பாவிகள் அசட்டை பண்ணுகிறார்கள். தங்களுக்கு தீங்கு வராது என்று நினைத்து நிர்விசாரமாயிருக்கிறார்கள் (ஆமோ 6:2,3). பாவிகளுடைய பெலனும் (ஆமோ 6:13), அவர்களுடைய ஆடம்பரமான சந்தோஷங்களும் (ஆமோ 6:4-6).

கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை, ஆமோஸ் தீர்க்கதரிசி இஸ்ரவேல் புத்திரருக்கு எடுத்துச் சொல்லுகிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் பயங்கரங்களை அவர்களுக்கு உணர்த்துகிறார் (ஆமோ 6:7).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கைவிட்டுவிடுகிறார். அவர்களை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார் (ஆமோ 6:8-11). அவர்கள்மீது அழிவை வரப்பண்ணுகிறார் (ஆமோ 6:12-14).

நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ!
ஆமோ 6:1-7

ஆமோ 6:1. சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களும் சமாரியாவின் பர்வதத்தை நம்பிக்கொண்டிருக்கிறவர்களும், ஜாதிகளின் தலைமையென்னப்பட்டு, இஸ்ரவேல் வம்சத்தார் தேடிவருகிறர்களுமாகிய உங்களுக்கு ஐயோ!

ஆமோ 6:2. நீங்கள் கல்னேமட்டும் சென்று, அவ்விடத்திலிருந்து ஆமாத் என்னும் பெரிய பட்டணத்துக்குப் போய், பெலிஸ்தருடைய காத்பட்டணத்துக்கு இறங்கி, அவைகள் இந்த ராஜ்யங்களைப் பார்க்கிலும் நல்லவைகளோ என்றும், அவைகளின் எல்லைகள் உங்கள் எல்லைகளைப்பார்க்கிலும் விஸ்தாரமானவைகளோ என்றும் பாருங்கள்.

ஆமோ 6:3. தீங்குநாள் தூரமென்றெண்ணிக் கொடுமையின் ஆசனம் கிட்டிவரும்படிசெய்து,

ஆமோ 6:4. தந்தக் கட்டில்களில் படுத்துக்கொண்டு, தங்கள் மஞ்சங்களின்மேல் சவுக்கியமாய்ச் சயனித்து, மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகளையும், மாட்டுத்தொழுவத்திலுள்ள கன்றுக்குட்டிகளையும் தின்று,

ஆமோ 6:5. தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி,

ஆமோ 6:6. பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடித்து, சிறந்த பரிமளதைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள்; ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற்போகிறார்கள்.

ஆமோ 6:7. ஆகையால் அவர்கள் சிறையிருப்புக்குப் போகிறவர்களின் முன்னணியிலே போவார்கள்; இப்படியே செல்வமாய்ச் சயனித்தவர்களின் விருந்து கொண்டாடல் நின்றுபோகும்.

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற செய்தியின் சுருக்கம், முதலாவது வசனத்திலேயே எழுதப்பட்டிருக்கிறது. "சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சுயபலத்தையும், சுயபாதுகாப்பையும் நம்புகிறார்கள். அவர்களுடைய இருதயங்களில் பெருமையும் ஆணவமும் நிரம்பியிருக்கிறது. அவர்கள் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுவதற்கு பிரியப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை கர்த்தர் கடிந்துகொள்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் வரும் என்று, அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லப்படுகிறது. ஆனால் அவர்களோ கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளை அசட்டைபண்ணுகிறார்கள். தங்களுக்கு சொல்லப்படும் எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய ஐசுவரியத்தையும், ஆடம்பரத்தையும் விரும்புகிறார்கள். அதை நினைத்து பெருமைப்படுகிறார்கள். அவர்கள் மாயையான காரியங்களைப் பின்பற்றி கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

சீயோனிலே குடியிருக்கிறவர்கள் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். சீயோன் தங்களைப் பாதுகாக்கும் என்றும், சீயோனில் குடியிருப்பது தங்களுக்கு கிடைத்திருக்கிற மேன்மை என்றும் அவர்கள் நினைத்திருக்கிறார்கள். சீயோனிலே நீதிமான்களும் குடியிருக்கிறார்கள். பாவிகளும் குடியிருக்கிறார்கள்.

நீதிமான்கள் கர்த்தருக்கு பயந்து, பரிசுத்தமாய் ஜீவிக்கிறார்கள். பாவிகளோ தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி பாவத்தில் ஜீவிக்கிறார்கள். கர்த்தருடைய கோபமும், அவருடைய நியாயத்தீர்ப்புக்களும் தங்கள்மீது வராது என்று நினைத்து இறுமாப்பாய் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள்.

சீயோனிலே கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் இருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம், அவருடைய பரிசுத்தவான்களுக்கு பாதுகாப்பான ஸ்தலமாயிருக்கும். சீயோனில் வாசம்பண்ணுகிறவர்கள் பாவத்திற்கு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் பாவம் செய்தால், அவர்கள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கள் வரும். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது.

சமாரியாவின் பர்வதத்தில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரர், சமாரியாவின் பர்வதத்தை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். சமாரியா இஸ்ரவேல் தேசத்திலே முக்கியமான நகரம். இங்கு விக்கிரகாராதனை அதிகமாய் நடைபெறுகிறது. இஸ்ரவேல் தேசத்தின் பெரிய இராணுவ பிரிவு இங்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினால் சமாரியா தங்களுக்கு பாதுகாப்பாயிருக்கும் என்று நினைத்து, இஸ்ரவேல் புத்திரர் சமாரியாவின் பர்வதத்தை நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்திருக்கிறது. இவ்விரண்டு தேசங்களிலுமிருக்கிற ஜனங்கள், தங்களுடைய முன்னோர்களின் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார், கர்த்தருடைய ஜனமாயிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் தங்களை பாதுகாப்பார் என்பதும், தங்களை தண்டிக்கமாட்டார் என்பதும் இவர்களுடைய நம்பிக்கை.

இஸ்ரவேல் ஜாதியார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். இவர்கள் கர்த்தருக்குரியவர்கள். ஆகையினால் இவர்கள் ஜாதிகளின் தலைமை என்று எண்ணப்படுகிறார்கள். எல்லா ஜாதிகளிலும், இஸ்ரவேல் ஜாதியே தலைமையான ஜாதி என்பது, இஸ்ரவேல் வம்சத்தாரின் நம்பிக்கை.

சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்திருக்கிறது. வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு சமாரியா பிரதான ஸ்தலம். தெற்கு யூதாதேசத்திற்கு சீயோன் பிரதான ஸ்தலம். இவ்விரண்டு பட்டணங்களும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தாய் பட்டணங்களாகும்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய பிரபுக்களும், அதிகாரிகளும் நிர்விசாரமாயிருக்கிறார்கள். பெரிய தேசத்தாரும், தேசத்து தலைவர்களும், தங்களைப்பற்றி எண்ணவேண்டியதற்கு அதிகமாக எண்ணிக்கொள்வார்கள். இவர்களிடத்தில் பெருமையிருக்கும். தங்களிடத்தில் இல்லாததைகூட, தங்களிடத்தில் இருப்பதாக கற்பனை பண்ணுவார்கள்.

நாம் எவ்வளவு பெரியவர்களாகயிருந்தாலும், நம்மிடத்தில் பெருமையும் ஆணவமும் இருக்கக்கூடாது. நம்முடைய இருதயத்தில் தாழ்மையிருக்கவேண்டும். நம்மிடத்தில் தாழ்வு மனப்பான்மை இருக்கக்கூடாது.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்களைப்பற்றி பெருமையாக நினைக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களில் பெருமையும் ஆணவமும் நிரம்பியிருக்கிறது. அவர்கள் தங்கள் தாய் பட்டணங்களாகிய சீயோனைக் குறித்தும், சமாரியாவைக் குறித்தும் பெருமைப்படுகிறார்கள். சீயோனும் சமாரியாவும் தங்களைப் பாதுகாக்கும் என்று நம்புகிறார்கள்.

சீயோனும் சமாரியாவும் ஜாதிகளின் தலைமை என்று எண்ணப்படுகிறது. இந்தப் பட்டணங்கள் தங்களைப் பாதுகாக்கும் என்று நினைத்து, இஸ்ரவேல் வம்சத்தார், சீயோனையும், சமாரியாவையும் தேடி வருகிறார்கள். இவர்களுடைய இருதயத்தில் பெருமையிருப்பதினால், சீயோனிலிருக்கிறவர்கள் நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். சமாரியாவிலிருக்கிறவர்கள், சமாரியாவின் பர்வதத்தை நம்புகிறார்கள். சீயோனும், சமாரியாவின் பர்வதமும் அழிந்துபோகும் என்று, ஆமோஸ் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, கர்த்தருடைய செய்தியை எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்.

நிம்ரோத் கல்னே பட்டணத்தைக் கட்டினார். இது பழங்காலத்து பட்டணம். "சிநெயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள்" (ஆதி 10:10). இந்தப் பட்டணம் உறுதியாயிருக்கும் என்றும், அழிந்துபோகாது என்றும் ஜனங்கள் நினைத்தார்கள். ஆனால் கல்னே பட்டணம் அழிந்துபோயிற்று.

ஆமாத் சீரியா தேசத்திலுள்ள பெரிய பட்டணம். காத் பெலிஸ்தருடைய பட்டணம். இவை அழிந்துபோகாது என்று அக்காலத்து ஜனங்கள் நினைத்தார்கள். ஆசகேல் காத் பட்டணத்தை அழித்துப்போட்டான்.

"அதற்குப்பின்பு சீரியாவின் ராஜாவாகிய ஆசகேல் வந்து, காத்தூரின்மேல் யுத்தம்பண்ணி அதைப் பிடித்தான்; அதின்பின்பு எருசலேமுக்கு விரோதமாய்ப் போக ஆசகேல் தன் முகத்தைத் திருப்பினான்" (2இராஜா 12:17).

கல்னே, ஆமாத், காத் ஆகிய பட்டணங்களின் ராஜ்யங்கள் இஸ்ரவேல் ராஜ்யத்தைவிட, நல்லவைகளாகவே இருந்தது. இந்தப் பட்டணத்தின் ஜனங்கள் இஸ்ரவேல் வம்சத்தாரைவிட நல்லவர்கள். அவைகளின் எல்லைகள், இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகளைப் பார்க்கிலும் விஸ்தாரமானவை. ஆனாலும் அந்தப் பட்டணங்களெல்லாம் அழிந்துபோயிற்று.

இஸ்ரவேல் புத்திரரோ சீயோனையும், சமாரியாவின் பர்வதத்தையும் நம்புகிறார்கள். அவை அழிந்துபோகாது என்றும், அவை தங்களுக்கு பாதுகாப்பாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீது தங்களுடைய நம்பிக்கையை வைக்காமல், சீயோன்மீதும், சமாரியாவின் பர்வதம்மீதும் வைக்கிறார்கள்.

கல்னேயும் ஆமாத்தும், காத்தும் அழிந்துபோனதுபோல, சீயோனும், சமாரியாவின் பர்வதமும் அழிந்துபோகும். இஸ்ரவேல் புத்திரரின் நம்பிக்கை அவமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் பாவத்தில் ஜீவிக்கிறார்கள். கர்த்தர் தங்களுடைய பாவங்களை நியாயந்தீர்க்கமாட்டார் என்று நினைத்து, துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. தங்களுடைய பாவங்களைக் குறித்து, கர்த்தர் தங்களிடத்தில் கணக்கு கேட்கமாட்டார், என்று நினைத்து, இஸ்ரவேல் புத்திரர் இறுமாப்பாயிருக்கிறார்கள்.

தீங்குநாள் தூரமென்று இஸ்ரவேல் புத்திரர் எண்ணுகிறார்கள். கொடுமையின் ஆசனம் கிட்டிவரும்படிசெய்கிறார்கள் (ஆமோ 6:3).

இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆடம்பரமாய் ஜீவிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தந்தக் கட்டில்களில் படுத்துக்கொண்டு, தங்கள் மஞ்சங்களின்மேல் சவுக்கியமாய்ச் சயனிக்கிறார்கள். அவர்கள் தங்கள் மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகளையும், மாட்டுத் தொழுவத்திலுள்ள கன்றுக்குட்டிகளையும் தின்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தம்புரை வாசித்துப்பாடி, தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடிக்கிறார்கள். அவர்கள் சிறந்த பரிமளதைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள் (ஆமோ 6:4-6).

நம்முடைய வாழ்க்கையில் கர்த்தர் கொடுக்கும் ஒரு சில வசதிகளை அனுபவிப்பதில் எந்தவித தப்பிதமும் இல்லை. அது பாவமுமல்ல. ஆனால் நாம் வசதிகள்மீது ஆசைப்படக்கூடாது. போதுமென்கிற பக்தியே மிகுந்த ஆதாயம். கர்த்தர் நமக்கு கொடுக்கும் வசதிகளில், சந்தோஷமாய் ஜீவிக்க கற்றுக்கொள்ள வேண்டும். ஆடம்பர பிரியராயிருக்கக்கூடாது. அதிகமாய் ஆசைப்படக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குள் சந்தோஷமாயிராமல், தங்களுடைய மாம்சங்களின் இச்சைகள் நிறைவேறும்போது சந்தோஷமாயிருக்கிறார்கள். ஆடம்பரமாய் ஜீவிக்கிறார்கள். ஊதாறித்தனமாய் செலவு பண்ணுகிறார்கள். ஒருவேலையும் செய்யாமல் சோம்பேறிகளாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் ஐசுவரியவான்களாயிருக்கிறவர்கள், தரித்திரரைப்பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை. தரித்திரர்கள் பசியாலும் பட்டினியாலும் வாடினாலும், ஐசுவரியவான்கள் தங்களுடைய பாடுகளைத்தான் பார்க்கிறார்களேயல்லாமல், ஏழைகளின் பசியையோ, பட்டினியையோ பார்ப்பதில்லை. தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்னும் மனம் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் காணப்படவில்லை.

தங்களுக்கு எல்லாம் நல்லதாயிருக்கவேண்டும் என்றும், அவை தங்களுக்கு தாராளமாய்க் கிடைக்கவேண்டும் என்றும் இஸ்ரவேல் வம்சத்தார் பேராசைப்படுகிறார்கள். தங்களுடைய மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகளைத் தின்கிறார்கள். மாட்டுத் தொழுவத்திலுள்ள கன்றுக்குட்டிகளைத் தின்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் மாய்மாலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய ஆடம்பரத்தை எல்லோருக்கும் வெளிப்படுத்த விரும்புகிறார்கள். தங்களுடைய உண்மை நிலையை மறைத்துவிடுகிறார்கள். அவர்களிடத்தில் துக்கமும், வேதனையும், வியாதியும் இருந்தாலும், அவற்றையெல்லாம் மறைத்துவிட்டு, தாவீதைப்போல் தங்களுக்கு கீதவாத்தியங்களை உண்டுபண்ணுகிறார்கள். தாவீது பயன்படுத்திய இசைக்கருவிகளை தங்களுக்கும் இசைக்கத் தெரியும் என்று காண்பிப்பதில், இஸ்ரவேல் புத்திரருக்கு பெருமையாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் சிறந்த பரிமள தைலங்களைப் பூசிக்கொண்டு, தங்கள் சரீரத்தின்மீது அதிக கவனம் செலுத்துகிறார்கள். நம்முடைய சரீரத்தை நாம் கவனிக்கவேண்டும். அதைவிட அதிகமாய், நம்முடைய ஆத்துமாவை நன்றாய்க் கவனிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஆடம்பரமாய் ஜீவித்தாலும், "யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்திற்கு கவலைப்படாமற்போகிறார்கள்" (ஆமோ 6:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"யோசேப்பு" என்னும் பெயர் கர்த்தருடைய ஜனத்தை பொதுவாய்க் குறிக்கிறது. "இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல் நடத்துகிறவரே, செவிகொடும்; கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும்" (சங் 80:1).

இவர்கள் இஸ்ரவேல் ராஜ்யத்திலும், யூதாவின் ராஜ்யத்திலும் இருக்கிறார்கள். இவர்களுக்கு கர்த்தருடைய ஜனத்தைப்பற்றி அக்கரையில்லை. கர்த்தருடைய ஜனம் துக்கத்திலும் நெருக்கத்திலும் இருக்கிறார்கள். அந்நிய தேசத்தார் அவர்கள்மீது யுத்தம்பண்ண வருகிறார்கள். ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுக்கு நேரிட்ட ஆபத்திற்கு கவலைப்படாமலிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே சமாதானமில்லை. செழிப்பு இல்லை. ஜனங்களிடத்தில் சந்தோஷமில்லை. தேசத்தில் நன்மையில்லை. சத்துருக்கள் இஸ்ரவேல் தேசத்தை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். தேசத்தில் திறப்பு கண்டிருக்கிறது. தங்களுக்கு வந்திருக்கிற ஆபத்துக்களை இஸ்ரவேல் புத்திரர் அறியாதவர்களாயிருக்கிறார்கள். அறிந்தவர்கள் அதைப்பற்றி அக்கரையில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசம் வாழ்ந்தாலும், அழிந்தாலும், அது பற்றி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கவலையில்லை. தாங்கள் ஆடம்பரமாய் ஜீவிக்கவேண்டும், பெரிய பாத்திரங்களில் மதுபானம் குடிக்கவேண்டும். ஆட்டுக்குட்டிகளையும், கன்றுக்குட்டிகளையும் தின்னவேண்டும். மஞ்சங்களின்மேல் சவுக்கியமாய் சயனிக்கவேண்டும். இதுவே இஸ்ரவேல் வம்சத்தாருக்கு பிரியம். தாங்கள் சிறைப்பட்டுப்போனால், இவற்றை தங்களால் அனுபவிக்க முடியாது என்பதுகூட அவர்களுக்கு தெரியவில்லை.

"யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்திற்கு கவலைப்படாமல் போகிறார்கள்" என்னும் வாக்கியத்திற்கு, வேதபண்டிதர்கள் யோசேப்பு சிறையிலிருந்த காலத்தில் நடந்த சம்பவத்தை சொல்லி, விளக்கம் சொல்லுகிறார்கள்.

"பானபாத்திரக்காரரின் தலைவனைப் பானங்கொடுக்கிற தன் உத்தியாகத்திலே மறுபடியும் வைத்தான்; அந்தப்படியே அவன் பார்வோனுடைய கையிலே பாத்திரத்தைக் கொடுத்தான். சுயம்பாகிகளின் தலைவனையோ தூக்கிப்போட்டான். யோசேப்பு அவர்களுக்குச் சொன்ன அர்த்தத்தின்படியே சம்பவித்தது. ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான்" *(ஆதி 40:21-23)*.

பானபாத்திரக்காரனுக்கு சுகவாழ்வு கிடைத்தபோது, அவன் யோசேப்பை நினையாமல், அவனை மறந்துவிட்டான். அதுபோலவே, இஸ்ரவேல் வம்சத்தாரும், தங்களுக்கு சுகவாழ்வு வந்தபோது, கர்த்தரை மறந்துவிட்டார்கள். தங்களையும் மறந்துவிட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர்மீது அழிவு வரும். "சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கும், சமாரியாவின் பர்வதத்தை நம்பிக்கொண்டிருக்கிறவர்களுக்கும் அழிவு வரும்.

"அவர்கள் சிறையிருப்புக்குப் போகிறவர்களின் முன்னணியிலே போவார்கள்; இப்படியே செல்வமாய்ச் சயனித்தவர்களின் விருந்துகொண்டாடல் நின்றுபோகும்" *(ஆமோ 6:7)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நான் யாக்கோபுடைய மேன்மையை வெறுக்கிறேன் ஆமோ 6:8-14

ஆமோ 6:8. நான் யாக்கோபுடைய மேன்மையை வெறுத்து, அவனுடைய அரமனைகளைப் பகைக்கிறேன்; நான் நகரத்தையும் அதின் நிறைவையும் ஒப்புக்கொடுத்துவிடுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் தம்முடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டார் என்பதைச் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 6:9. ஒரு வீட்டிலே பத்துப்பேர் மீதியாயிருந்தாலும் அவர்கள் செத்துப்போவார்கள்.

ஆமோ 6:10. அவர்களுடைய இனத்தானாவது, பிரேதத்தைத் தகிக்கிறவனாவது எலும்புகளை வீட்டிலிருந்து வெளியேகொண்டு போகும்படிக்கு, அவைகளை எடுத்து, வீட்டின் உட்புறத்திலே இருக்கிறவனை நோக்கி: உன்னிடத்தில் இன்னும் யாராயினும் உண்டோ என்று கேட்பான், அவன் இல்லையென்பான்; அப்பொழுது இவன்: நீ மௌனமாயிரு; கர்த்தருடைய நாமத்தைச் சொல்லலாகாது என்பான்.

ஆமோ 6:11. இதோ, கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார்; பெரிய வீட்டைத் திறப்புகள் உண்டாகவும், சிறிய வீட்டை வெடிப்புகள் உண்டாகவும் அடிப்பார்.

ஆமோ 6:12. கன்மலையின்மேல் குதிரைகள் ஓடுமோ? அங்கே ஒருவன் மாடுகளால் உழுவானோ? நியாயத்தை நஞ்சாகவும் நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றினீர்கள்.

ஆமோ 6:13. நாங்கள் எங்கள் பலத்தினாலே எங்களுக்குக் கொம்புகளை உண்டாக்கிக் கொள்ளவில்லையோ என்று சொல்லி, வீண்காரியத்தில் மகிழுகிறார்கள்.

ஆமோ 6:14. இஸ்ரவேல் வம்சத்தாரே, இதோ, நான் ஒரு ஜாதியை உங்களுக்கு விரோதமாக எழுப்புவேன்; அவர்கள் ஆமாத்துக்குள் பிரவேசிக்கிற வழி தொடங்கிச் சமனான நாட்டின் ஆறுமட்டாக உங்களை ஒடுக்குவார்கள் என்று சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

சேனைகளின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறார். தாம் யாக்கோபுடைய மேன்மையை வெறுப்பதாகவும், அவனுடைய அரமனைகளை பகைப்பதாகவும் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை வெறுத்து ஒதுக்கிவிடுவார். அவர்களைப் பகைத்து கைவிட்டுவிடுவார். கர்த்தருடைய பாதுகாப்பு இல்லையென்றால், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு வேறு பாதுகாப்பு எதுவுமில்லை. அவர்களுக்கு சர்வநாசமும், சர்வமோசமும், சர்வஅழிவும் உண்டாகும்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய தேவாலயமும், கர்த்தருடைய பலிபீடமும், அவர்களுடைய ஆசாரியத்துவமும் யாக்கோபுடைய மேன்மையாயிருக்கிறது. கர்த்தரோ அவர்களுடைய மேன்மையை வெறுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருடைய பண்டிகைகளை பகைத்து வெறுக்கிறார். அவர்களுடைய ஆசரிப்பு நாட்களில் கர்த்தருக்குப் பிரியமில்லை (ஆமோ 5:21).

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. அங்கே கர்த்தருக்கு பலிபீடம் இருக்கிறது. கர்த்தர் யாக்கோபுடைய மேன்மையை வெறுத்து, இவையெல்லாம் இருக்கிற நகரத்தையும், அதின் நிறைவையும், சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்துவிடுவார்.

சத்துருக்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வந்து, தேசத்திலுள்ள பொக்கிஷங்களைக் கொள்ளையிடுவார்கள். ஜனங்களை பட்டயத்தினால் சங்காரம்பண்ணுவார்கள். இஸ்ரவேல் தேசத்தைப் பாழாக்கிப்போடுவார்கள். இஸ்ரவேல் தேசம் பாழும் வனாந்தரமுமாகும்.

இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே உயிர்ச்சேதம் அதிகமாயிருக்கும். "ஒரு வீட்டிலே பத்துப்பேர் மீதியாயிருந்தாலும் அவர்கள் செத்துப்போவார்கள்" (ஆமோ 6:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புகளை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொன்னபோது, அவர்கள் தங்கள் இருதயத்தை கடினப்படுத்தினார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளை அசட்டைபண்ணினார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது மும்முரமாக வருகிறது.

இஸ்ரவேல் தேசத்திலே ஏராளமான ஜனங்கள் செத்துப்போகிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் அவர்களுக்கு அழிவு வருகிறது. இஸ்ரவேல் புத்திரர் தொடர்ந்து செத்துக்கொண்டிருப்பதினால், பிரேதங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. பிரேதங்களை தகிக்கிறவர்களுக்கு தொடர்ந்து வேலையிருந்துகொண்டேயிருக்கிறது.

ஆமோஸ் தீர்க்கதரிசி, இஸ்ரவேல் வம்சத்தாருடைய ஜீவனுக்கு வரும் அழிவை, விளக்கமாகச் சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தாருடைய, "இனத்தானாவது, பிரேதத்தைத் தகிக்கிறவனாவது எலும்புகளை வீட்டிலிருந்து வெளியேகொண்டு போகும்படிக்கு, அவைகளை எடுத்து, வீட்டின் உட்புறத்திலே இருக்கிறவனை நோக்கி: உன்னிடத்தில் இன்னும் யாராயினும் உண்டோ என்று கேட்பான், அவன் இல்லையென்பான்; அப்பொழுது இவன்: நீ மௌனமாயிரு; கர்த்தருடைய நாமத்தைச் சொல்லலாகாது என்பான்" (ஆமோ 6:10).

இஸ்ரவேல் புத்திரருக்கு ஜீவமோசம் வந்ததுபோல, அவர்களுடைய வீடுகளும் அழிந்துபோகும். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை அடிக்கிறார். அவர்களுடைய வீடுகளையும் அடிக்கிறார். சிறிய வீடுகளையும் பெரிய வீடுகளையும் அடிக்கிறார். "இதோ, கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார்; பெரிய வீட்டைத் திறப்புகள் உண்டாகவும், சிறிய வீட்டை வெடிப்புகள் உண்டாகவும் அடிப்பார்" (ஆமோ 6:11) என்று ஆமோஸ் சொல்லுகிறார்.

கன்மலையின்மேல் குதிரைகள் ஓடாது. அங்கே மாடுகளால் உழமுடியாது. இஸ்ரவேல் வம்சத்தாரோ நியாயத்தை நஞ்சாகவும், நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றுகிறார்கள். அவர்கள் வீண் காரியத்தில் மகிழ்கிறார்கள். தங்கள் சுயபலத்தை நம்புகிறார்கள் (ஆமோ 6:12,13).

"நாங்கள் எங்கள் பலத்தினாலே எங்களுக்கு கொம்புகளை உண்டாக்கிக் கொள்ளவில்லையோ" (ஆமோ 6:13) என்று ஆணவமாய்ப் பேசுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமாகவும், அவர்களுடைய ஆணவத்தினிமித்தமாகவும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. தேவன் தம்முடைய நீதியினால் அவர்களைத் தண்டிக்கிறார். கர்த்தர் நம்மைத் தண்டிக்கும்போது, "கர்த்தர் நீதியுள்ளவர்" என்று நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து சொல்லவேண்டும். நம்முடைய பாவங்களை நாம் உணர்ந்திருந்தால், கர்த்தருடைய தண்டனை நீதியானது என்பதை நாம் அங்கீகரிப்போம்.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே அனுப்பினார். அவர்கள் தரிசு நிலத்தை உழுது பண்படுத்துவதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாரை, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப ஆயத்தம்பண்ண வேண்டும். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரின் இருதயமோ, கன்மலையைப்போல கடினமாயிருக்கிறது.

கன்மலையின்மேல் குதிரைகள் ஓடாது. கன்மலையில் மாடுகளால் உழமுடியாது. கல்லைப்போல கடின இருதயத்தோடிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளால் ஊழியம் செய்ய முடியவில்லை. இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை அவர்களுக்கு உணர்த்த முடியவில்லை. தீர்க்கதரிசிகளால் இஸ்ரவேல் வம்சத்தாரை, மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்த முடியவில்லை.

கர்த்தருடைய ஜனம் இஸ்ரவேல் வம்சத்தாராயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் ஒரு ஜாதியை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக எழுப்புகிறார். தாங்கள் இஸ்ரவேல் வம்சத்தாராயிருப்பதினால், கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்புக்கள் தங்களுக்கு கிடைக்கும் என்று, அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் கர்த்தரோ, இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமாகவும், தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பாத அவர்களுடைய கடின இருதயங்களினிமித்தமாகவும் கர்த்தர் அவர்களுக்கு விரோதமாக அசீரியரை எழுப்புகிறார்.

அசீரியர்கள் ஆமாத்துக்குள் பிரவேசிக்கிற வழி தொடங்கிச் சமனான நாட்டின் ஆறுமட்டாக இஸ்ரவேல் வம்சத்தாரை ஒடுக்குவார்கள் (ஆமோ 6:14). இஸ்ரவேல் வம்சத்தார், பல சந்தர்ப்பங்களில், தங்களுடைய தேசத்தின் பாதுகாப்புக்கு அசீரியர்களை நம்பினார்கள். ஆனால் கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக அசீரியரை எழுப்புகிறார். அசீரியர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை ஒடுக்குகிறார்கள்.

அசீரியர்கள் வடக்கு திசையிலிருந்து ஆமாத்திற்குள் பிரவேசிக்கிற வழியாக இஸ்ரவேல் தேசத்திற்குள் வருவார்கள். அவர்கள் தெற்கு திசையிலிருந்து, சமனான நாட்டின் ஆறாகிய நைல் நதி வழியாகவோ அல்லது எகிப்தின் ஆறு வழியாகவோ அல்லது சீகோர் வழியாகவோ இஸ்ரவேல் தேசத்திற்குள் வருவார்கள்.

7 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது குற்றம் சொல்லுகிறார். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். ஆமோஸ் தீர்க்கதரிசி இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபிக்கிறார். இதனால் நியாயத்தீர்ப்பின் அளவு குறைக்கப்படுகிறது (ஆமோ 7:1-6).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ மனந்திரும்பவில்லை. இதனால் தேவன் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்புகளை அவர்களுக்குச் சொல்லுகிறார் (ஆமோ 7:7-9).

கர்த்தர் ஆமோஸ் தீர்க்கதரிசியை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அனுப்பியிருக்கிறார். ஆனால் அவர்களோ ஆமோசை ஏற்றுக்கொள்ளவில்லை. அமத்சியா ஆமோசுக்கு விரோதமாகப் பேசுகிறான் (ஆமோ 7:10,11). ஆமோசை இஸ்ரவேல் தேசத்தை விட்டு துரத்துவதற்கு அமத்சியா முயற்சி செய்கிறான் (ஆமோ 7:12,13).

கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற தீர்க்கதரிசன ஊழியத்தை, தான் உண்மையாய்ச் செய்யவேண்டுமென்று ஆமோஸ் சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை ஆமோஸ் நியாயப்படுத்துகிறார் (ஆமோ 7:14,15). அமத்சியாவுக்கு விரோதமாகவும், ஆமோசை எதிர்த்தவர்களுக்கு விரோதமாகவும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் வருகிறது (ஆமோ 7:16,17).

தூக்குநூல் பிரமாணம் ஆமோ 7:1-9

ஆமோ 7:1. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, ராஜாவினுடைய புல்லறுப்புக்குப்பின்பு இரண்டாம் கந்தாயத்துப் புல் முளைக்கத் தொடங்குகையில் அவர் வெட்டுக்கிளிகளை உண்டாக்கினார்.

ஆமோ 7:2. அவைகள் தேசத்தின் புல்லைத்தின்று தீர்ந்தபோது, நான்: கர்த்தராகிய ஆண்டவரே, மன்னித்தருளும்; யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான்? அவன் சிறுத்துப்போனான் என்றேன்.

ஆமோ 7:3. கர்த்தர் அதற்கு மனஸ்தாபப்பட்டு, அப்படி ஆவதில்லை என்றார்.

ஆமோ 7:4. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, அக்கினியாலே நியாயம் விசாரிப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் ஏற்பட்டார்; அது மகா ஆழியைப் பட்சித்தது, அதில் ஒரு பங்கைப் பட்சித்துத் தீர்ந்தது.

ஆமோ 7:5. அப்பொழுது நான்: கர்த்தராகிய ஆண்டவரே, நிறுத்துமே; யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான்? அவன் சிறுத்துப்போனான் என்றேன்.

ஆமோ 7:6. கர்த்தர் அதற்கு மனஸ்தாபப்பட்டு, அப்படி ஆவதில்லை என்றார்.

ஆமோ 7:7. பின்பு அவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, தூக்குநூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட ஒரு மதிலின்மேல் நின்றார்; அவர் கையில் தூக்குநூல் இருந்தது.

ஆமோ 7:8. கர்த்தர் என்னை நோக்கி: ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார்; தூக்குநூலைக் காண்கிறேன் என்றேன்; அப்பொழுது ஆண்டவர்: இதோ, இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன்; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்.

ஆமோ 7:9. ஈசாக்கின் மேடைகள் பாழும், இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமுமாக்கப்படும்; நான் எரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாய்ப் பட்டயத்தோடே எழும்பிவருவேன் என்றார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ மனந்திரும்பாமல், துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலுமே பொறுமையோடு காத்திருப்பார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய பொறுமைக்கும் மதிப்பு கொடுக்கவில்லை. கர்த்தருக்கும் மதிப்பு கொடுக்கவில்லை. கர்த்தருடைய பொறுமையை அவர்கள் அசட்டைபண்ணுகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை அவர்கள்மேல் வரப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் தேசம் கர்த்தருக்கு பரிசுத்தமான தேசமாயிருக்கவேண்டும். ஆனால் அந்த தேசமோ இப்போது பாவமான தேசமாயிருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் பரிசுத்தமில்லை. அவர்களிடத்தில் துன்மார்க்கமும், அக்கிரமமும், மீறுதல்களும் நிரம்பியிருக்கிறது. கர்த்தர் அவர்கள்மீது ஒவ்வொரு நியாயத்தீர்ப்பாக அனுப்புகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால், இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சமுண்டாகிறது. ஆமோஸ் தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்கு வரப்போகிற பஞ்சத்தை ஒரு தரிசனத்தில் பார்க்கிறார். அந்த தரிசனத்தில், ராஜாவினுடைய புல்லறுப்புக்குப்பின்பு, இரண்டாம் கந்தாயத்துப் புல் முளைக்கத்தொடங்குகையில், கர்த்தர் வெட்டுக்கிளிகளை உண்டாக்குவதை ஆமோஸ் பார்க்கிறார்.

கர்த்தரே இந்த வெட்டுக்கிளிகளை உண்டாக்குகிறார். கர்த்தர் தம்முடைய ஞானத்தினாலும், வல்லமையினாலும், சர்வசிருஷ்டிகளையும் சிருஷ்டிக்கிறார். கர்த்தர், தம்முடைய சிருஷ்டிக்கும் வல்லமையினால், உருவத்தில் சிறிதாயிருக்கும் எறும்பையும், உருவசத்தில் பெரியதாயிருக்கும் யானையையும் சிருஷ்டிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கோபத்தினால், இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக, இந்த வெட்டுக்கிளிகளை உண்டாக்குகிறார். இவை தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை நிறைவேற்றும் ஆயுதங்களாகவும், கருவிகளாகவும் இருக்கிறது. கர்த்தர் வெட்டுக்கிளிகளை உண்டாக்கி, அவற்றை இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக அனுப்புகிறார்.

கர்த்தர் வெட்டுக்கிளிகளை, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக, அனுப்பும் காலமும் இங்கு தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ராஜாவினுடைய புல்லறுப்புக்கு பின்பு, இரண்டாம் கந்தாயத்துப்புல் முளைக்க தொடங்குகையில், கர்த்தர் இந்த வெட்டுக்கிளிகளை உண்டாக்கி, அவற்றை இஸ்ரவேல் தேசத்திற்கு அனுப்புகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுவதற்கு முன்பாக, அவருடைய கிருபையும் இரக்கமும் வெளிப்படுகிறது. கர்த்தர், தாம் உண்டாக்கின வெட்டுக்கிளிகளை, ராஜாவினுடைய முதலாம் புல்லறுப்பு காலத்தில் அனுப்பவில்லை. இஸ்ரவேல் தேசத்தின் வசந்தகாலத்தில் முதலாம் கந்தாயத்துப்புல் முளைக்கும். இக்காலத்தில் புல் அதிகமாய்த் தேவைப்படும்.

கர்த்தர் தாம் உண்டாக்கின வெட்டுக்கிளிகளை, முதலாம் கந்தாயத்துப்புல் முளைக்கும் காலத்தில் அனுப்பியிருந்தால், ராஜாவால் புல்லறுக்க முடியாது. தேசத்தில் தானியபஞ்சம் வருவதுபோல, புல்லுக்கும் பஞ்சம் வந்துவிடும். கால்நடைகளுக்கு தீவனம் இருக்காது. பசுமாடுகள் பாலைக்கறக்காது. பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தில், பாலுக்கு பஞ்சம் வந்துவிடும்.

கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாரை அதிகமாய்த் தண்டிக்காமல், அவர்களை மட்டாய்த் தண்டிக்கிறார். இஸ்ரவேல் தேசத்தில் முதல் கந்தாயத்தில் முளைத்த புல்லை அறுப்புவதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கிறார். கால்நடைகளுக்கு தேவையான தீவனம் கிடைக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தில், இரண்டாம் கந்தாயத்துப்புல் முளைக்க துவங்கும்போது, கர்த்தர் வெட்டுக்கிளிகளை அனுப்புகிறார். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு முதல் கந்தாயத்துப் புல்லைப்போல, இரண்டாம் கந்தாயத்துப்புல் அதிக முக்கியமானதல்ல.

முதலாம் கந்தாயத்துப்புல் நன்றாய் முளைத்திருந்த காலத்தில், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் துதித்திருக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய தங்களை ஒப்புக்கொடுத்திருக்கவேண்டும். ஆனால் அவர்களோ, முதலாம் கந்தாயத்துப்புல்லை அறுவடை செய்து, அதன் நன்மைகளையெல்லாம் அனுபவித்து, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள்.

இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் வம்சத்தார்மீது வருகிறது. தங்களுக்கு முதலாம் கந்தாயத்துப்புல் அறுவடை ஆசீர்வாதமாயிருந்ததுபோல, இரண்டாம் கந்தாயத்துப்புல்லின் அறுவடையும் ஆசீர்வாதமாயிருக்கும் என்று இஸ்ரவேல் வம்சத்தார் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார்.

கர்த்தர் வெட்டுக்கிளிகளை உண்டாக்கி, இஸ்ரவேல் தேசத்தின்மீது அனுப்புகிறார். தேசத்தில் இரண்டாம் கந்தாயத்துப்புல் முளைக்கத் துவங்கும் காலத்தில், கர்த்தர் வெட்டுக்கிளிகளை அங்கே அனுப்புகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் புல் வளரும் என்று எதிர்பார்க்கிறார்கள். புல் வளருகிறது. ஆனால் வளர்ந்த புல்லை வெட்டுக்கிளிகள் கூட்டமாய் வந்து தின்றுபோடுகிறது. இஸ்ரவேல் தேசத்தில், இரண்டாம் கந்தாயத்தில் முளைக்கும் எல்லா புல்லையும், வெட்டுக்கிளிகள் தின்று தீர்த்துவிடுகிறது.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு குறைவு உண்டாயிற்று. கர்த்தர் தங்களுக்கு கொடுத்த முந்தின ஆசீர்வாதங்களுக்கு, இஸ்ரவேல் புத்திரர் நன்றியுள்ளவர்களாயில்லை. ஆகையினால் அவர்களுக்கு பிந்தின ஆசீர்வாதம் கொடுக்கப்படவில்லை. கர்த்தர் அவர்களுக்கு அழிவை அனுப்புகிறார்.

தங்கள் தேசத்தின் புல்லை, வெட்டுக்கிளிகள் தின்று தீர்த்தபோதும், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. கர்த்தர் அவர்கள்மீது மேலும் ஒரு நியாயத்தீர்ப்பு அனுப்புகிறார். "அக்கினியாலே நியாயம் விசாரிப்பேன்" (ஆமோ 7:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அக்கினி பற்றியெரிகிறது. அக்கினி என்பது வறட்சியைக் குறிக்கலாம். தேசத்தில் மழையில்லை. சூரிய உஷ்ணம் அதிகமாயிருக்கிறது. பூமி காய்ந்துபோயிருக்கிறது. அக்கினி மகாநாளிலே பட்சிக்கிறது. அதில் ஒரு பங்கை பட்சித்து தீர்த்துவிடுகிறது. தேசத்தில் பஞ்சமும், வறட்சியும் மிகுதியாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின்மீது வெட்டுக்கிளிகளை அனுப்பினார். அவை பூமியின்மீது முளைத்திருந்த, தேசத்தின் புல்லை தின்று தீர்த்துவிடுகிறது. கர்த்தர் அதன்பின்பு, தேசத்தின்மீது அக்கினியை அனுப்புகிறார். அந்த அக்கினி, பூமிக்கடியில் முளைத்திருக்கும் புல்லின் வேர்களையும் பூண்டுகளையும் பட்சித்துப்போடுகிறது.

கர்த்தர் அக்கினியினாலே, இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்கும்போது, அவர்களுக்கு விஷக்காய்ச்சல் வந்துவிடுகிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இந்த ஜுரத்தினால் அவர்களுடைய எலும்புகள்கூட சூடாயிருக்கிறது.

கர்த்தர் அக்கினியினால் இஸ்ரவேல் வம்சத்தாரை நியாயம் விசாரிக்கும்போது, வானத்திலிருந்து மின்னல்களும், இடிகளும், அவர்களுடைய தேசத்தின்மீது விழுந்திருக்கலாம். சோதோமையும் கோமோராவையும் அக்கினி பட்சித்ததுபோல, வானத்திலிருந்து விழுந்த மின்னலும் இடியும், இஸ்ரவேல் தேசத்திலுள்ள வீடுகளை பட்சித்திருக்கலாம்.

"சோதோமையும் கொமோராவையும் தேவன் கவிழ்த்துப்போட்டதுபோல, உங்களைக் கவிழ்த்துப்போட்டேன்; நீங்கள் அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளியைப்போல இருந்தீர்கள்; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆமோ 4:11).

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை அக்கினியாலே நியாயம் விசாரிக்கும்போது, அந்நிய தேசத்தார் இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வந்திருக்கலாம். அவர்கள் இஸ்ரவேல் தேசத்திலுள்ள பட்டணங்களை அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டிருக்கலாம். வெட்டுக்கிளிகள் கிராமங்களிலுள்ள வயல்நிலங்களை அழித்துப்போட்டது. அக்கினி பட்டணங்களையும், அங்கேயுள்ள வீடுகளையும் அழித்துப்போட்டது.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை, அக்கினியாலே நியாயம் விசாரிக்கும்போது, அது பூமியின் மேல்பரப்பிலுள்ளதையும் அழித்துப்போடுகிறது. அது பூமியின் கீழே மகாஆழத்திலுள்ளதையும் பட்சித்துப்போடுகிறது. எலியாவின் காலத்தில், வானத்திலிருந்து இறங்கி வந்த அக்கினி, தண்ணீரை பட்சித்து நக்கிப்போட்டதுபோல, கர்த்தர் அனுப்பும் அக்கினி, மகாஆழியை பட்சித்துப்போடுகிறது.

கர்த்தர் தம்முடைய கோபத்தினால் உண்டாக்கும் விளைவுகளை ஆமோஸ் தீர்க்கதரிசிக்கு காண்பிக்கிறார். அப்போது ஆமோஸ் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய கோபம் நீங்கவேண்டுமென்று கெஞ்சி மன்றாடுகிறார். ஆமோஸ் யாரிடத்தில் தீர்க்கதரிசனம் சொன்னாரோ, அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாள் வரப்போகிறது. அந்த நாள் அவர்களுக்கு பயங்கரமும், இருளும், அந்தகாரமுமான நாளாயிருக்கும். இஸ்ரவேல் தேசத்திற்கும், இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் அழிவு வரும். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று, கர்த்தர் பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ மனந்திரும்பாமல், தொடர்ந்து துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பும் இஸ்ரவேல் வம்சத்தார்மீது வருகிறது.

இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சமுண்டாகிறது. வெட்டுக்கிளிகள் தேசத்தின் புல்லை தின்று தீர்த்துவிடுகிறது. இஸ்ரவேல் தேசத்திற்கு வந்திருக்கிற அழிவை ஆமோஸ் பார்க்கிறார். அவர் கர்த்தராகிய ஆண்டவரிடத்தில், இஸ்ரவேல் வம்சத்தாருக்காக, பயபக்தியோடு, பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். "கர்த்தராகிய ஆண்டவரே, மன்னித்தருளும்" (ஆமோ 7:2) என்று ஆமோஸ் ஜெபம்பண்ணுகிறார். "இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களை அவர்களைவிட்டு நீக்கிப்போடும்" என்று பொருள்படுமாறு ஆமோஸ் ஜெபம்பண்ணுகிறார்.

பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது ஏராளமான பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களுக்கு, அவர்களுடைய பாவங்களே அடிப்படை காரணம். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டால், அவர்களுடைய கஷ்டங்களும் அவர்களைவிட்டு நீங்கும். பாவமன்னிப்பே இரட்சிப்புக்கு ஆதாரம்.

ஆமோஸ் கர்த்தரிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறார். "இஸ்ரவேல் புத்திரரை மன்னித்தருளும்" என்று கர்த்தராகிய ஆண்டவரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர்மீது கர்த்தருடைய கோபம் வந்திருக்கிறது. கர்த்தர் தம்முடைய கோபத்தை இஸ்ரவேல் வம்சத்தார்மீது காண்பிக்காமல், தம்முடைய கோபத்தை விலகிக்கொள்ளவேண்டும் என்று ஆமோஸ் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர், காரணத்தை நீக்கும்போது, அதன் விளைவு நீங்கும். கர்த்தர் நம்மிடத்திலிருந்து, நம்முடைய பாவத்தை நீக்கும்போது, பாவத்தின் விளைவாகிய சாபம், நம்மை விட்டு நீங்கும். காரணமில்லாமல் விளைவு உண்டாகாது.

கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்கு பதில்கொடுக்கவேண்டுமென்று ஆமோஸ் மன்றாடுகிறார். "யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான்? அவன் சிறுத்துப்போனான்" (ஆமோ 7:2) என்று ஆமோஸ் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். ஆமோஸ் இந்த வார்த்தையை, மறுபடியுமாய்ச் சொல்லுகிறார் (ஆமோ 7:5).

யாக்கோபு கர்த்தருக்கு பக்தியுள்ள ஜனம். ஆமோஸ் யாக்கோபுக்காக பரிந்து பேசுகிறார். யாக்கோபின் பெயரை இங்கு குறிப்பிட்டுச் சொல்லுகிறார். யாக்கோபு இப்போது சிறுத்துப்போயிருக்கிறான். அவன் பலவீனமடைந்திருக்கிறான். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள், யாக்கோபின்மீது, ஏற்கெனவே பலமுறை வந்திருக்கிறது. ஆகையினால் யாக்கோபு இப்போது ஒன்றுமில்லாமல் வெறுமையாயிருக்கிறான். தாழ்ச்சியடைந்திருக்கிறான். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யாக்கோபின்மீது தொடர்ந்து வந்துகொண்டிருந்தால், அவன் ஒன்றுமில்லாமல் அழிந்துபோவான்.

இஸ்ரவேல் ஜனத்தாரால் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியவில்லை. அவர்களால் பிறருக்கும் உதவி செய்ய முடியவில்லை. அவர்களுடைய எண்ணிக்கை குறைவாயிருக்கிறது. திரளான எண்ணிக்கையிலிருந்தவர்கள், இப்போது சொற்ப எண்ணிக்கையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய பலமும் குறைந்து போயிற்று. பலசாலிகளாயிருந்தவர்கள் பலவீனராயிருக்கிறார்கள்.

"யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான்" என்று ஆமோஸ் கர்த்தரிடத்தில் கேட்கிறார். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சிநேகிதர் இல்லை. அவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர்கள் ஒருவருமில்லை. கீழே விழுந்து கிடக்கிற இஸ்ரவேல் வம்சத்தாரை எந்த ஜாதியாராலும், எந்த தேசத்தாராலும் எழுப்ப முடியாது. கர்த்தருடைய கரத்தினால் மாத்திரமே அவர்களை எழுப்ப முடியும். கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

கர்த்தர் ஆமோசின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்பியதற்காக மனஸ்தாபப்படுகிறார். "இஸ்ரவேல் வம்சத்தார் அப்படி ஆவதில்லை" (ஆமோ 7:3) என்று கர்த்தர் ஆமோசுக்கு பிரதியுத்தரம் கொடுக்கிறார்.

கர்த்தர் மனஸ்தாபப்படுவார். ஆனால் அவர் மனம் மாறமாட்டார். கர்த்தர் தம்முடைய இரக்கத்தை காண்பிப்பதற்கு, வேறொரு வழியைத் தேர்ந்தெடுக்கிறார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், ஏதாவது ஒரு வழியில் நமக்கு கொடுக்கப்படும். அது நிறுத்தப்படாது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி இங்கு சொல்லும்போது, மறுபடியுமாய், "அப்படி ஆவதில்லை" (ஆமோ 7:6) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில், இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிற ஜெபம், ஏற்கெனவே பல சமயங்களில் ஏறெடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரும் பரிசுத்தவான்களுடைய ஜெபத்திற்கு செவிகொடுத்து, இஸ்ரவேல் வம்சத்தாரை அழித்துப்போடாமல் இரட்சித்திருக்கிறார். நாம் தேசத்திற்காக ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் தேசத்தை ஆசீர்வதிக்கிறார். ஜெபிக்கிற ஜனங்களும், ஜெபிக்கிற ஊழியக்காரர்களும் தேசத்திற்கு ஆசீர்வாதமானவர்கள்.

கர்த்தர் மனஸ்தாபப்படவேண்டுமென்று ஆமோஸ் எதிர்பார்த்தார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை அழித்துப்போடாமல், அவர்களுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கவேண்டுமென்று, ஆமோஸ் ஜெபம்பண்ணினார். கர்த்தரோ கிருபை மிகுந்தவர். அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். கர்த்தர் ஆமோசின் பரிந்து பேசும் ஜெபத்தை அங்கீகரிக்கிறார். இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை மன்னிக்கிறார். தம்முடைய நியாயத்தீர்ப்பை அவர்கள்மீது உடனே அனுப்பாமல், அதை நிறுத்திப்போடுகிறார்.

நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் பணிவோடும், பயபக்தியோடும் வரும்போது, கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். கர்த்தர் நம்முடைய பாவங்களை எத்தனை தரம் வேண்டுமானாலும் மன்னிப்பார். ஏழுதரம் மாத்திரமல்ல, ஏழெழுபது தரமாகயிருந்தாலும், நம்முடைய பாவங்களுக்கு நாம் மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் போகும்போது, கர்த்தர் தம்முடைய இரக்கத்தினால், நம்முடைய பாவங்களை மன்னித்து, நம்மை தம்மோடு சேர்த்துக்கொள்கிறார்.

தமக்கு விரோதமாகப் பாவம் செய்யும் இஸ்ரவேல் புத்திரரை கர்த்தர் கடிந்துகொள்கிறார். அவர்களுக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று கர்த்தர் எச்சரித்து சொல்லுகிறார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவமான ஜீவியமும், கர்த்தர் அவர்கள்மீது அனுப்பும் நியாயத்தீர்ப்பும் ஆமோஸ் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தர் தம்முடைய செய்தியை ஆமோசுக்கு ஒரு தரிசனத்தின் மூலமாய்க் காண்பிக்கிறார்.

கர்த்தர் தூக்குநூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட ஒரு மதிலின்மேல் நிற்கிறார். கர்த்தருடைய கையில் ஒரு தூக்குநூல் இருக்கிறது. ஆமோஸ் கர்த்தரையும், மதில் சுவரையும், கர்த்தருடைய கையிலுள்ள தூக்குநூலையும் தரிசனமாகப் பார்க்கிறார்.

கட்டிடம் கட்டுகிறவர்கள், மதில் சுவர்களைக் கட்டும்போது தூக்குநூலைப் பயன்படுத்துவார்கள். செங்கலை வரிசையாக வைத்து அடிக்கி கட்டும்போது, செங்கல் கட்டு சீராகயிருக்கவேண்டும். சுவர் நேராகயிருக்கவேண்டும். அதற்காக, கட்டிட வேலை பார்க்கிறவர், தூக்குநூலைப் பயன்படுத்தி, சுவரை நேர்த்தியாக்குவார். சுவற்றில் கோணலாக இருக்கும் செங்கல் பகுதியை நீக்கிப்போடுவார். அப்போதுதான் மதில் சுவர் நேராகவும், நேர்த்தியாகவும் இருக்கும்.

கர்த்தர் இஸ்ரவேலை தம்முடைய மதில் சுவராகக் கட்டுகிறார். தம்முடைய பரிசுத்த ஆலயத்திலே, இஸ்ரவேல் வம்சத்தார் மதில் சுவரைப்போல கட்டப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை உறுதியாகவும், நேர்த்தியாகவும், தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும் கட்டியெழுப்ப வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார். இதற்காக கர்த்தர் தூக்குநூலைப் பயன்படுத்தி அவர்களைக் கட்டியெழுப்புகிறார்.

கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்தின் மதில்சுவர் வெண்கலம்போல உறுதியாயிருந்தது. ஆனால் இப்போதோ அது உறுதியில்லாமல், பலமிழந்து இருக்கிறது. கர்த்தர் தூக்குநூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட மதில் சுவரின்மேல் நிற்கிறார். அந்த சுவரை அளப்பதற்காக, கர்த்தருடைய கையில் தூக்குநூல் இருக்கிறது. இந்தத் தூக்குநூலைப் பயன்படுத்தி, சுவற்றின் எந்தப் பகுதியில் தவறு இருக்கிறது என்பதை, கர்த்தர் கண்டுபிடிப்பார். சுவற்றை சோதித்துப் பார்ப்பார்.

கர்த்தர் இஸ்ரவேல் என்னும், அவருடைய ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுகிறார். கர்த்தருடைய ஜனத்தின் நடுவே பாவிகளாகவும், துன்மார்க்கராகவும், மீறுகிறவர்களாகவும் இருக்கிற ஜனங்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்படுவார்கள். அவர்கள் வேறுபிரிக்கப்படுவார்கள். கர்த்தர் அவர்களை மன்னிக்கமாட்டார். அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுப்பார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை சோதித்துப் பார்க்கிறார். அவர்களை பல சோதனைகள் வழியாக வழிநடத்துகிறார். அவர்கள் நடுவே தம்முடைய தூக்குநூலை விடுகிறார். சுவற்றில் எவ்வளவு பகுதி இடிக்கப்படவேண்டும் என்பதை கணக்குப் பார்க்கிறார். இஸ்ரவேல் வம்சத்தாரில், யாரெல்லாம் பாவம் செய்தவர்கள் என்பதையும், யாரையெல்லாம் தண்டிக்கவேண்டும் என்பதையும் கர்த்தர் கணக்குப் பார்க்கிறார்.

இஸ்ரவேல் தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். தேசம் அழிந்துபோகும். இஸ்ரவேல் வம்சத்தாரும் அழிந்துபோவார்கள். இஸ்ரவேல் தேசத்தையும், இஸ்ரவேல் வம்சத்தாரையும் குறிப்பதற்கு "ஈசாக்கின் வம்சத்தார்" (ஆமோ 7:16) என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஈசாக்கு என்னும் பெயருக்கு "நகைப்பு", "சிரிப்பு" என்பது பொருள். இஸ்ரவேல் வம்சத்தார், அவர்களுடைய அண்டை தேசத்தார் மத்தியிலே, நகைப்புக்கு உரியவர்களாகயிருக்கிறார்கள். அந்நிய தேசத்தார் இஸ்ரவேல் புத்திரரை ஏளனம்பண்ணுகிறார்கள்.

தங்களுடைய மதில் சுவர்களும், கோட்டைச்சுவர்களும், கர்த்தருடைய ஆலயமும் தங்களுக்கு பாதுகாப்பாகயிருக்கும் என்று இஸ்ரவேல் வம்சத்தார் நம்புகிறார்கள். ஆனால், "ஈசாக்கின் மேடைகள் பாழும், இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமுமாக்கப்படும்" (ஆமோ 7:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப் போகிறார்கள். அந்நிய தெய்வங்களுக்கு தூபங்காட்டி, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் தங்கள் விக்கிரகங்களையும், தங்கள் மாம்சபலத்தையும், தங்கள் ஐசுவரியங்களையும் நம்புகிறார்கள். இவை தங்களை பாதுகாக்கும் என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமாக அவர்களைத் தண்டிக்கிறார். இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்களை அவமாக்கிப்போடுகிறார். ஈசாக்கின் மேடைகளை பாழாக்கிப்போடுகிறார். எரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாக, கர்த்தர் பட்டயத்தோடே எழும்பி வருகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரைத் தண்டிக்கும்போது, முதலாவதாக இஸ்ரவேலின் அரசகுடும்பத்திலுள்ளவர்களை அழித்துப்போடுகிறார். இரண்டாம் எரொபெயாம் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருக்கு ராஜாவாயிருக்கிறார். எரொபெயாமின் குமாரனாகிய சகரியாவின் காலத்தில், இவனுடைய குடும்பம் முற்றிலுமாய் அழிந்துபோயிற்று.

"யாபேசின் குமாரனாகிய சல்லூம் அவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணி, ஜனத்தின் முன்பாக அவனை வெட்டிக் கொன்றுபோட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்" (2இராஜா 15:10).

ஆமோசும் அமத்சியாவும் ஆமோ 7:10-17

ஆமோ 7:10. அப்பொழுது பெத்தேலில் ஆசாரியனான அமத்சியா இஸ்ரவேலின் ராஜாவாகிய எரொபெயாமுக்கு ஆள் அனுப்பி: ஆமோஸ் இஸ்ரவேல் வம்சத்தாரின் நடுவே உமக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணுகிறான்; தேசம் அவன் வார்த்தைகளையெல்லாம் சகிக்கமாட்டாது.

ஆமோ 7:11. எரொபெயாம் பட்டயத்தினால் சாவான் என்றும், இஸ்ரவேல் தன் தேசத்திலிருந்து சிறைபிடித்துக்கொண்டுபோகப்படுவான் என்றும் ஆமோஸ் சொல்லுகிறான் என்று சொல்லச்சொன்னான்.

ஆமோ 7:12. அமத்சியா ஆமோசை நோக்கி: தரிசனம் பார்க்கிறவனே, போ; நீ யூதாதேசத்துக்கு ஓடிப்போ, அங்கே அப்பம் தின்று, அங்கே தீர்க்கதரிசனம்சொல்லு.

ஆமோ 7:13. பெத்தேலிலே இனித் தீர்க்கதரிசனம்சொல்லாதே; அது ராஜாவின் பரிசுத்த ஸ்தலமும் ராஜ்யத்தின் அரமனையுமாயிருக்கிறது என்றான்.

ஆமோ 7:14. ஆமோஸ் அமத்சியாவுக்குப் பிரதியுத்தரமாக: நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன்.

ஆமோ 7:15. ஆனால் மந்தையின் பின்னாலே போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்சொல்லு என்று கர்த்தர் உரைத்தார்.

ஆமோ 7:16. இப்போதும் நீ கர்த்தருடைய வார்த்தையைக் கேள்; இஸ்ரவேலுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனம் சொல்லாதே, ஈசாக்கின் வம்சத்தாருக்கு விரோதமாக ஒன்றையும் சொல்லாதே என்று சொல்லுகிறாயே.

ஆமோ 7:17. இதினிமித்தம்: உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியாவாள்; உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்; உன் வயல் அளவு நூலால் பங்கிட்டுக் கொள்ளப்படும்; நீயோவெனில் அசுத்தமான தேசத்திலே செத்துப்போவாய்; இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டுபோகப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

ஆமோஸ் தீர்க்கதரிசன ஊழியம் செய்கிற காலத்தில், இஸ்ரவேல் தேசத்திலே எரொபெயாம் ராஜாவாயிருக்கிறான். பெத்தேலிலே அமத்சியா என்பவன் ஆசாரியனாயிருக்கிறான். ஆமோஸ் தீர்க்கதரிசியைப்பற்றி, இஸ்ரவேலின் ராஜாவுக்கு தப்பிதமான கருத்துக்கள் சொல்லப்படுகிறது. ஆசாரியனாகிய அமத்சியாவே, ஆமோசைக் குறித்து, எரொபெயாமிடம் தப்பிதமான செய்தியை சொல்லியனுப்புகிறான்.

பெத்தேலிலே பொன்கன்றுக்குட்டி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அமத்சியா, வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு, பிரதான ஆசாரியனாயிருக்கிறான். அவன் பெத்தேலிலுள்ள பொன்கன்றுக்குட்டிக்கு பலிசெலுத்தி, ஆராதனை செய்து வருகிறான். ஒருவேளை, இந்த அமத்சியா, பெத்தேல் நகரத்திற்கு தலைவனாகயிருந்திருக்கவேண்டும் என்றும் ஒரு வியாக்கியானமுள்ளது.

ஆமோஸ் விக்கிரகங்களுக்கு விரோதமாகவும், விக்கிரகாராதனைக்கு விரோதமாகவும் கர்த்தருடைய செய்தியைச் சொன்னார். பெத்தேலிலே பொன்கன்றுக்குட்டிக்கு ஒரு பலிபீடம் உள்ளது. ஆமோஸ் இந்தப் பலிபீடத்திற்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனம் சொன்னார்.

ஆமோசுக்கு இஸ்ரவேல் தேசத்திலே இருக்கும் மதிப்பையும், அந்தஸ்தையும் நீக்கிப்போட்டால், ஜனங்கள் அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கமாட்டார்கள். ஆமோஸ் விக்கிரகாராதனைக்கு விரோதமாக எவ்வளவு பேசினாலும், ஜனங்கள் அவருடைய வார்த்தைகளை கவனித்து கேட்கமாட்டார்கள். விக்கிரகாராதனைக்கு ஒரு பாதிப்பும், ஒரு எதிர்ப்பும் இருக்காது என்று பெத்தேலில் ஆசாரியனான அமத்சியா நினைக்கிறான்.

அமத்சியா ஆமோசைப் பகைக்கிறான். ஆசாரியர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை உபத்திரவப்படுத்துகிறார்கள். ஆமோசின் நல்ல பெயரைக் கெடுத்துப்போட வேண்டுமென்று அமத்சியா ஆலோசனை பண்ணுகிறான். ஆமோசுக்கு விரோதமாக இஸ்ரவேலின் ராஜாவாகிய எரொபெயாமுக்கு, அமத்சியா தப்பான செய்திகளை சொல்லியனுப்புகிறான்.

அமத்சியா, ஆமோசுக்கு விரோதமாக இரண்டு குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறான். அவையாவன :

1. "ஆமோஸ் இஸ்ரவேல் வம்சத்தாரின் நடுவே, ராஜாவுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணுகிறான். இஸ்ரவேல் தேசம், ஆமோசின் வார்த்தைகளையெல்லாம் சகிக்கமாட்டாது" (ஆமோ 7:10).

2. "எரொபெயாம் பட்டயத்தினால் சாவான் என்றும், இஸ்ரவேல் தன் தேசத்திலிருந்து சிறைபிடித்துக் கொண்டுபோகப்படுவான்" (ஆமோ 7:11) என்றும் ஆமோஸ் சொல்லுகிறார்.

ஆமோஸ் தீர்க்கதரிசி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். பெத்தேலிலே ஆசாரியனாகயிருக்கிற அமத்சியாவோ, ஆமோசுக்கு விரோதமாக சதிஆலோசனைபண்ணுகிறான். அவன் ஆமோசுக்கு சத்துருவாயிருக்கிறான். ஆமோஸ் செய்கிற ஊழியத்தை, தேசதுரோக ஊழியம் என்று இஸ்ரவேலின் ராஜாவுக்கு முன்பாக வியாக்கியானம்பண்ணுகிறான்.

ஆமோசும் அமத்சியாவும் நெருங்கிய சிநேகிதர்கள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆமோஸ் அமத்சியாவுக்கு சிநேகிதனாயிருந்தாலும், ஆமோஸ் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள் அமத்சியாவுக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறது.

அமத்சியா ஆமோசுக்கு விரோதமாக ராஜாவிடத்தில் செய்தியனுப்பும்போது, ஆமோஸ் ராஜாவுக்கு விரோதமாகச் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளை, சொல்லியனுப்புகிறான். "எரொபெயாம் பட்டயத்தினால் சாவான் என்றும், இஸ்ரவேல் தன் தேசத்திலிருந்து சிறைபிடித்துக்கொண்டுபோகப்படுவான் என்றும் ஆமோஸ் சொல்லுகிறான்" (ஆமோ 7:11) என்று அமத்சியா எரொபெயாம் ராஜாவுக்கு சொல்லச்சொல்லுகிறான்.

அமத்சியா ஆமோசுடைய ஊழியத்தின் ஒரு பகுதியை மாத்திரமே ராஜாவுக்கு சொல்லுகிறான். மீதியை மறைத்துவிடுகிறான். இஸ்ரவேல் தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் வரக்கூடாது என்பதற்காக, ஆமோஸ் கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபித்தார். அவருடைய ஜெபத்தைப்பற்றி அமத்சியா ராஜாவிடம் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்னும் நல்ல செய்தியை ஆமோஸ் பல சமயங்களில் சொல்லியிருக்கிறார். ஆமோஸ் சொன்ன இந்த வார்த்தைகளை, அமத்சியா ராஜாவுக்கு சொல்லவில்லை.

ஆமோஸ் இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது, அவரைப்பற்றிய செய்தியை யாராவது எரொபெயாம் ராஜாவுக்கு சொல்லியிருப்பார்கள். ஆனால் எரொபெயாமோ ஆமோசைக் குறித்து கவலைப்பட்டதாகவும், அவர்மீது கோபப்பட்டதாகவோ தெரியவில்லை. எரொபெயாம் ஒருவேளை கர்த்தருடைய ஊழியக்காரர்களை மதிக்கிறவராக இருக்கவேண்டும். பெத்தேலிலே அமத்சியா ஆசரியனாகயிருந்தாலும், இஸ்ரவேலின் ராஜாவாகிய எரொபெயாம், அமத்சியாவின் வார்த்தையைவிட, தெய்வீக அதிகாரத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

அமத்சியா ஆமோசிடம் நேரடியாகவே பேசுகிறார். "அமத்சியா ஆமோசை நோக்கி: தரிசனம் பார்க்கிறவனே, போ; நீ யூதாதேசத்துக்கு ஓடிப்போ, அங்கே அப்பம் தின்று, அங்கே தீர்க்கதரிசனம்சொல்லு. பெத்தேலிலே இனித்தீர்க்கதரிசனம் சொல்லாதே; அது ராஜாவின் பரிசுத்த ஸ்தலமும் ராஜ்யத்தின் அரமனையுமாயிருக்கிறது என்றான்" (ஆமோ 7:12,13).

அமத்சியா ஆமோசுடைய சிநேகிதராயிருப்பதினால், அவரை தனிப்பட்ட முறையில் சந்தித்து, அவருடைய தீர்க்கதரிசன ஊழியத்தை நிறுத்தப்பார்க்கிறான். இஸ்ரவேல் தேசத்திலிருந்து யூதாதேசத்திற்கு ஆமோசை திருப்பியனுப்ப முயற்சி பண்ணுகிறான். ஆமோஸ் யூதாதேசத்திலே தீர்க்கதரிசன ஊழியம் செய்யலாம் என்றும், அவர் பெத்தேலிலே தீர்க்கதரிசனம் சொல்லவேண்டிய அவசியமில்லை என்றும் அமத்சியா சொல்லுகிறான்.

பெத்தேல் ராஜாவின் பரிசுத்த ஸ்தலமாகயிருக்கிறது. இது இஸ்ரவேல் ராஜ்யத்தின் அரமனையாகயிருக்கிறது. ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கு பெத்தேல் சரியான ஸ்தலமல்ல. பெத்தேலிலே ராஜகுடும்பத்தார் அரமனையில் வசித்து வருகிறார்கள். இங்கே இஸ்ரவேலின் நியாயாசனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. வழக்கு விசாரணை நடைபெறுகிறது. பெத்தேலிலே இஸ்ரவேல் ராஜ்யம் சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கப்படும். ஆமோசின் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாது. ஆகையினால் ஆமோஸ் பெத்தேலைவிட்டு, யூதாதேசத்திற்கு போய்விடவேண்டுமென்று அமத்சியா சொல்லுகிறான்.

பெத்தேல் ராஜாவின் பரிசுத்த ஸ்தலமாகயிருக்கிறது. இங்கு பொன்கன்றுக்குட்டியை ஆராதனை செய்கிறார்கள். ஆமோசின் தீர்க்கதரிசன வார்த்தைகள் விக்கிரகாராதனைக்கு விரோதமாகயிருக்கிறது. அதனால் ராஜாவின் பரிசுத்த ஸ்தலத்திற்கு கேடுண்டாகிறது என்று அமத்சியா சொல்லுகிறார்.

பெத்தேலிலே ராஜ்யத்தின் அரமனை இருக்கிறது. இங்கு இஸ்ரவேலின் ராஜா சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். ராஜாவைப் பார்க்க வருகிறவர்களெல்லோரும் அவரைப் புகழ்ந்து பேசவேண்டும். ராஜாவின் அரமனையிலும், அவருடைய பரிசுத்த ஸ்தலத்திலும் ராஜாவுக்கு பிரியமான வார்த்தைகளும், ராஜாவை சந்தோஷப்படுத்தும் வார்த்தைகளும் மாத்திரமே பேசப்படவேண்டும்.

ஆமோசோ இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அவர் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைப் பற்றியும், இஸ்ரவேல் தேசத்திற்கு வரப்போகும் அழிவைப்பற்றியும் சொல்லுகிறார். ராஜா சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, ஆமோஸ் ராஜாவை, கர்த்தருடைய நாமத்தினால், கடிந்துகொள்வதும், அவருடைய மனதை புண்படுத்துவதும், அவருக்கு விரோதமான வார்த்தைகளைச் சொல்லுவதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆகையினால் ஆமோஸ் பெத்தேலை விட்டுவிட்டு யூதாதேசத்திற்குப் போய்விடவேண்டும் என்று அமத்சியா சொல்லுகிறான்.

ஆமோஸ் இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தார் ஆமோசின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஒருவர்கூட ஆமோசையும், அவருடைய தீர்க்கதரிசன ஊழியத்தையும் உற்சாகப்படுத்தவில்லை. அவர்களெல்லோருமே ஆமோசை ஏளனம்பண்ணுகிறார்கள். அவருடைய ஜீவனுக்கு மோசம் உண்டாக சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

ஆமோஸ் இஸ்ரவேல் தேசத்திலே எவ்வளவு நாள் ஊழியம் செய்தாலும், அவர் கர்த்தருடைய வார்த்தையை எப்படி சொன்னாலும், இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகாராதனையிலிருந்து விலகி வரமாட்டார்கள். இஸ்ரவேல் தேசத்திலே, விக்கிரகாராதனைக்கு, ராஜாவின் ஆதரவும், பிரபுக்களின் ஆதரவும், அதிகாரிகளின் ஆதரவும் இருக்கிறது. ராஜா விக்கிரகாராதனைக்கு முன்மாதிரியாயிருக்கிறான். ராஜாவின் அதிகாரமும் விக்கிரகாராதனைக்கு ஆதரவாயிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஆமோஸ், இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே, விக்கிரகாராதனைக்கு விரோதமாகப் பேசுவதினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

ஆமோசின் ஊழியம், சுவற்றில் முழுபலத்தோடு முட்டுவதற்கு சமமாகயிருக்கும். எவ்வளவு முட்டினாலும் சுவற்றிற்கு ஒன்றும் ஆகாது. முட்டிய தலைதான் உடையும். ஆமோஸ் எவ்வளவுதான் ஊழியம் செய்தாலும், இஸ்ரவேல் வம்சத்தார் மனந்திரும்பமாட்டார்கள். ஆமோசுக்குத்தான் சோர்வும், களைப்பும், சரீர பெலவீனமும், தோல்வியும், அவமானமும், இலச்சையும் உண்டாகும்.

அமத்சியா ஆமோசை நோக்கி: "தரிசனம் பார்க்கிறவனே, போ; நீ யூதாதேசத்துக்கு ஓடிப்போ, அங்கே அப்பம் தின்று, அங்கே தீர்க்கதரிசனம்சொல்லு" (ஆமோ 7:12) என்று சொல்லுகிறான்.

ஆமோஸ் ஊழியம் செய்வதற்கு யூதாதேசமே சரியான ஸ்தலம். அங்கு ஆமோசுக்கு பாதுகாப்பாகயிருக்கும். யூதாவின் மனுஷர் ஆமோசின் வார்த்தைகளுக்கு செவிகொடுப்பார்கள்.

அமத்சியா மிகவும் தந்திரமாகப் பேசுகிறான். துன்மார்க்கர் தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற சதிஆலோசனை பண்ணுவார்கள். சாதுரியமான வார்த்தைகளைப் பேசுவார்கள். அமத்சியாவின் வார்த்தைகளில் கண்ணியும், சுருக்கும் மறைவாக விரிக்கப்பட்டிருக்கிறது.

துன்மார்க்கர் மற்றவர்களைப்பற்றி நிதானிக்கும்போது, தங்களை ஆதாரமாக வைத்தே மற்றவர்களை அளந்து பார்ப்பார்கள். அமத்சியா பெத்தேலிலுள்ள ஒரு ஆசாரியன். தன்னுடைய ஆசாரிய ஊழியத்தில் தனக்கு என்ன ஆதாயம் கிடைக்கும் என்று அமத்சியா கருத்தாயிருக்கிறான்.

தன்னைப்போலவே, ஆமோசுக்கும், அவருடைய ஊழியத்தின் மூலமாய் ஆதாயம் வரவேண்டுமென்று அமத்சியா எதிர்பார்க்கிறான். ஆமோஸ் இஸ்ரவேல் தேசத்தில் எவ்வளவுதான் ஊழியம் செய்தாலும், எப்படித்தான் ஊழியம் செய்தாலும், அவருக்கு ஒரு வருமானமும் வராது. அவர் யூதாதேசத்தில்போய் ஊழியம் செய்தால், அங்கே அவருக்கு நல்ல வருமானம் கிடைக்கும். அங்கே அவருக்கு புசிக்க அப்பம் கிடைக்கும். ஆமோஸ் இஸ்ரவேலிலே ஊழியம் செய்தால், அவர் புசிப்பதற்கு ஒன்றுமில்லாமல், பட்டினியாய்க் கிடக்கவேண்டும்.

ஆமோஸ் அமத்சியாவுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார். ஆமோஸ் கர்த்தருடைய தீர்க்கதரிசி. அவர் தன்னுடைய மாம்சத்தையோ அல்லது இரத்தத்தையோ ஆலோசனை செய்து, தீர்க்கதரிசன ஊழியம் செய்யவில்லை. அவர் தன்னுடைய பொருளாதார வசதிகளை அதிகரிப்பதற்காக கர்த்தருடைய ஊழியத்தை செய்யவில்லை. கர்த்தர் தனக்கு கொடுக்கும் செய்திகளை, ஜனங்களுக்கு உண்மையாய் அறிவிக்கவேண்டும். இதுவே ஆமோசின் ஊழியம்.

ஆமோசின் மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறது. அவரிடத்தில் மாய்மாலம் எதுவுமில்லை. கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற தீர்க்கதரிசன ஊழியத்தை, ஆமோஸ் உண்மையாய்ச் செய்கிறார். அவர் மனுஷருக்காக ஊழியம் செய்யவில்லை. மனுஷரைப் பிரியப்படுத்தவும் விரும்பவில்லை.

கர்த்தர் தம்முடைய ஊழியத்தை செய்யுமாறு ஆமோசை அழைத்திருக்கிறார். தன்னுடைய ஊழிய அழைப்பைக் குறித்து, ஆமோஸ் உண்மையுள்ளவராகவும், நிச்சயமுள்ளவராகவும் இருக்கிறார். ஆமோஸ் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன்" (ஆமோ 7:14) என்று சொல்லுகிறார்.

சாமுவேல், எரேமியா ஆகியோர் தீர்க்கதரிசிகளாகவே பிறந்தார்கள். தீர்க்கதரிசிகளின் ஊழியத்தை செய்ய விசேஷமான பயிற்சி எடுத்துக்கொண்டார்கள். ஆமோசோ மந்தை மேய்க்கிறவனாயிருந்தார். அவர் மந்தையின் பின்னாலே அவற்றை மேய்த்துக்கொண்டு போனார்.

ஆமோசின் பெற்றோர் ஐசுவரியவான்களல்ல. ஆமோசுக்கும் ஐசுவரியமில்லை. காட்டத்திப்பழங்களை பொறுக்குவதே ஆமோசின் வேலை. இந்த வேலையில் அவருக்கு பெருத்த வருமானம் கிடைக்காது. ஆமோஸ் மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்திருக்கவேண்டும்.

ஆமோஸ் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். கிராமத்தில் வசிப்பவர். அவருக்கு கிராமப்புறத்தில் நடைபெறுகிற வேலைகளை மாத்திரமே செய்ய தெரியும். அவருடைய பேச்சிலும், பழக்க வழக்கங்களிலும், அவருடைய கிராமப்புறத்து வாழ்க்கையும், மந்தை மேய்க்கும் வேலையும் வெளிப்படும்.

ஆமோஸ் மந்தை மேய்க்கிறவராகயிருந்தாலும், கர்த்தர் அவரை தம்முடைய தீர்க்கதரிசன ஊழியத்தை செய்யுமாறு அழைக்கிறார். கர்த்தரே அவருக்கு தீர்க்கதரிசன ஊழியத்தைக் கொடுத்து, அந்த ஊழியத்திற்கு அவரைத் தகுதிப்படுத்தி, அந்த ஊழியத்தை செய்வதற்கு அவரை பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார். ஆகையினால் ஆமோஸ், கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தின செய்திகளை, தீர்க்கதரிசனமாய்ச் சொல்லவேண்டும். ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொல்லாமல் அமைதியாயிருக்கக்கூடாது.

ஆமோஸ் கர்த்தருடைய கட்டளையினாலேயே தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அவர் தன்னுடைய சொந்த நாமத்தினால் பேசாமல், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் பேசும்போது, ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். அவருடைய வார்த்தைக்கு எதிர்த்து நிற்கிறவர்கள், தங்களுக்குத் தாங்களே அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள்.

நாம் கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களோடு எதிர்த்து நிற்பது, அவர்களை அனுப்பிய கர்த்தரோடு எதிர்த்து நிற்பதற்கு சமம். ஒரு தேசத்தின் தூதுவரை அவமானப்படுத்துவது, அவரை அனுப்பின ராஜாவை அவமானப்படுத்துவதற்கு சமமான காரியமாயிருக்கும்.

ஆமோஸ் தீர்க்கதரிசன ஊழியம் செய்ய வருவதற்கு முன்பாக, அவர் மந்தை மேய்க்கிறவராகவும், காட்டத்திப்பழங்களை பொறுக்குகிறவராகவும் இருந்தார். தீர்க்கதரிசன ஊழியத்திற்கும், அவருடைய பழைய எளிய வாழ்க்கைக்கும் சம்பந்தம் எதுவுமில்லை. ஆமோசை அழைத்தவர் கர்த்தர். அவர் கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியராயிருக்கவேண்டும். ஆமோஸ் தன்னுடைய பழைய ஏழ்மையான வாழ்வை நினைத்து, தாழ்வு மனப்பான்மை அடையக்கூடாது.

ஆமோஸ் தீர்க்கதரிசன ஊழியம் செய்யும்போது, அவர் கர்த்தரை மாத்திரமே நோக்கிப் பார்க்கிறார். அவர் தன்னுடைய பழைய ஜீவியத்தை சிந்தித்துப் பார்க்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் தனக்குக் கொடுக்கும் செய்திகளை, ஆமோஸ் அப்படியே சொல்லிவிடுகிறார். அவர் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு, தீர்க்கதரிசன ஊழியம் செய்கிறார்.

தீர்க்கதரிசன செய்திகளை எப்படி சொல்லவேண்டுமென்று, யாரும் ஆமோசுக்கு கற்றுக்கொடுக்கவில்லை. கர்த்தர் ஆமோசை அழைத்து, "நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லு" (ஆமோ 7:15) என்று சொன்னார். கர்த்தர் ஆமோசை அழைத்தபோது, அவரை தீர்க்கதரிசன ஊழியம் செய்வதற்கு தகுதிப்படுத்தவும் செய்கிறார். கர்த்தர் ஆமோசுக்குத் தேவையான ஆவியின் வரங்களையும், தாலந்துகளையும் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும் ஆரம்பத்தில் கல்வியறிவு இல்லாதவர்களாக, உலகப்பிரகாரமான ஞானம் இல்லாதவர்களாக இருந்தார்கள். ஆனாலும் அவர்கள் இயேசுவோடு கூடயிருந்ததினால், கிறிஸ்துவானவருடைய உபதேசத்தைக் கேட்கும் சிலாக்கியம் சீஷர்களுக்கு கிடைத்தது. அவர்கள் தங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து, தெய்வீக ஞானத்தையும், தெய்வீக அறிவையும், ஆவிக்குரிய வரங்களையும், ஊழியம் செய்வதற்கு தேவையான தாலந்துகளையும் பெற்றுக்கொண்டார்கள்.

"பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள்" (அப் 4:13).

ஆமோஸ் மந்தையின் பின்னாலே போகிறபோது, கர்த்தரே அவரை தம்முடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைத்தார். ஆமோசின் ஊழிய அழைப்பு உண்மையானது. ஆமோஸ் இதுவரையிலும் மந்தையை மேய்த்துக்கொண்டிருந்தார். காட்டத்திப்பழங்களை பொறுக்கிக் கொண்டிருந்தார். இப்போதோ இஸ்ரவேலுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆமோசை தம்முடைய தீர்க்கதரிசியாக அழைத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், தெய்வீக பராமரிப்பினாலும், ஆமோசையும் அவருடைய குடும்பத்தாரையும் போஷித்து பராமரிப்பார். ஆமோஸ் அப்பத்திற்காகவோ, ஒருவேளை போஜனத்திற்காகவோ, ஐசுவரியத்திற்காகவோ தீர்க்கதரிசனம் சொல்லவேண்டிய அவசியமில்லை.

அமத்சியா ஆமோசைப் பார்த்து, "தரிசனம் பார்க்கிறவனே, போ, நீ யூதாதேசத்திற்கு ஓடிப்போ, அங்கே அப்பம் தின்று, அங்கே தீர்க்கதரிசனம் சொல்லு" (ஆமோ 7:12) என்று சொன்னான். ஆமோஸ் அமத்சியாவின் வார்த்தையைக் கேட்டு, அப்பம் புசிப்பதற்காக, யூதாதேசத்திற்குப் போய், தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

கர்த்தர் ஆமோசை அழைத்து, "நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லு" (ஆமோ 7:15) என்று கட்டளை கொடுத்திருக்கிறார். ஆமோஸ் கர்த்தருடைய அழைப்புக்குக் கீழ்ப்படியவேண்டும். ஆமோஸ் ஒருவேளை போஜனத்திற்காக அமத்சியாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை. ஆமோசை அழைத்தவர் கர்த்தர். அவர் ஆமோசுக்கு அப்பத்தைக் கொடுப்பார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஜீவஅப்பமாகயிருக்கிறார்.

"கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப் போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன்" (ஏசா 50:7).

ஆமோஸ் தெக்கோவா ஊர் மேய்ப்பர். அமத்சியாவோ பெத்தேலிலுள்ள ஒரு ஆசாரியர். இவர் ஆசாரியர்களுக்கு தலைவர். ஆசாரிய ஊழியம் செய்வதற்கு பயிற்சி பெற்றவர். ஆமோஸ் அமத்சியாவிடம் ஞானமாய்ப் பேசுகிறார். கர்த்தர் ஆமோசுக்கு தம்முடைய வார்த்தைகளையும் கொடுத்திருக்கிறார். தம்முடைய ஞானத்தையும் கொடுத்திருக்கிறார். ஆமோஸ் கர்த்தருக்காக, அதிகாரத்தோடு பேசுகிறார். இது கர்த்தர் ஆமோசுக்குக் கொடுத்திருக்கிற தெய்வீக அதிகாரம்.

ஆமோஸ் அமத்சியாவை கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொள்கிறார். அமத்சியா கர்த்தருடைய ஊழியத்திற்கு தடையாகயிருக்கிறார். கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்கள் அழிந்துபோவார்கள். ஆமோஸ் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தெய்வீக அதிகாரத்தினால், அமத்சியாவை கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொள்கிறார்.

அமத்சியா ஆமோசுக்கு எதிர்த்து நிற்பதினாலும், கர்த்தருடைய ஊழியத்திற்கு தடையாயிருப்பதினாலும், அவரும் அவருடைய குடும்பத்தாரும் அழிந்து போவார்கள். அமத்சியா தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொள்கிறான்.

ஆமோஸ் அமத்சியாவைப் பார்த்து, "இப்போதும் நீ கர்த்தருடைய வார்த்தையைக் கேள்; இஸ்ரவேலுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனம்சொல்லாதே, ஈசாக்கின் வம்சத்தாருக்கு விரோதமாக ஒன்றையும் சொல்லாதே என்று சொல்லுகிறாயே" (ஆமோ 7:16) என்று ஆமோஸ் சொல்லுகிறார்.

ஆமோஸ் சொல்லுவது உண்மையான வார்த்தை. அமத்சியா தன்னிடத்தில் சொன்னதைத்தான் ஆமோஸ் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். ஆகையினால் ஆமோஸ் பேசும்போது, அமத்சியா அவருடைய வார்த்தையை தடைபண்ணவுமில்லை. ஆமோசின் வார்த்தைகளுக்கு எதிர்த்து பேசவுமில்லை.

ஆமோஸ் அமத்சியாவுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

"இதினிமித்தம்: உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியாவாள்; உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்; உன் வயல் அளவு நூலால் பங்கிட்டுக்கொள்ளப்படும்; நீயோவெனில் அசுத்தமான தேசத்திலே செத்துப்போவாய்" (ஆமோ 7:17) என்று ஆமோஸ் அமத்சியாவைப் பார்த்து சொல்லுகிறார்.

அமத்சியா ஆமோசின்மீது குற்றம் சொன்னபோது, "இஸ்ரவேல் தன் தேசத்திலிருந்து சிறைப்பிடித்து கொண்டுபோகப்படுவான் என்று ஆமோஸ் சொல்லுகிறான்" (ஆமோ 7:11) என்று சொன்னான். ஆமோஸ் மெய்யாகவே இந்த வார்த்தைகளைச் சொன்னார். ஆமோஸ் தான் சொன்னதை மறுதலிக்கவில்லை. தான் சொன்ன வார்த்தைகளை, ஆமோஸ் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். இது ஆமோசின் வார்த்தைகளல்ல. இது கர்த்தருடைய வார்த்தை.

"இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டுபோகப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆமோ 7:17) என்று ஆமோஸ் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரரின் வாய்களை அடைப்பதினால், கர்த்தருடைய ஊழியம் ஒருபோதும் நின்றுபோவதில்லை. கர்த்தருடைய வார்த்தையும் பலமிழந்து, செயலிழந்து போவதில்லை. கர்த்தருடைய வார்த்தை வல்லமையோடு வெளிப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தை எந்த நோக்கத்திற்காக சொல்லப்படுகிறதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றாமல், அது வெறுமையாய்த் திரும்பி வராது.

8 அதிகாரம்

இஸ்ரவேல் வம்சத்தார் பாவமான காரியங்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களுடைய பாவமான காலங்களைத் தொடர்ந்து, அவர்களுக்கு இப்போது வருத்தமான காலங்கள் வந்திருக்கிறது. இஸ்ரவேல் தேசம் அழிந்துபோகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் ஆமோசுக்கு பழுத்த பழங்களுள்ள ஒரு கூடையைக் காண்பிக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சீக்கிரத்தில் அழிவு வரப்போகிறது என்பதற்கு இது அடையாளம் (ஆமோ 8:1-3).

இஸ்ரவேல் தேசத்து ஐசுவரியவான்களும், அதிகாரத்திலுள்ளவர்களும் சிறுமைப்பட்டவர்களையும், தரித்திரரையும் ஒடுக்குகிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களைக் குறித்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (ஆமோ 8:4-10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். விக்கிரகாராதனைக்காரர்கள் ஆவிக்குரிய வேசித்தனம் பண்ணுகிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய வசனம் கேட்கக்கிடையாத பஞ்சம் வரும் (ஆமோ 8:11-14).

பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை ஆமோ 8:1-3

ஆமோ 8:1. பின்பு கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை இருந்தது.

ஆமோ 8:2. அவர்: ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்று கேட்டார்? பழுத்த பழங்களுள்ள ஒரு கூடையைக் காண்கிறேன் என்றேன். அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவுகாலம் வந்தது; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்.

ஆமோ 8:3. அந்நாளிலே தேவாலயப்பாட்டுகள் அலறுதலாக மாறும்; எல்லா இடத்திலும் திரளான பிரேதங்கள் புலம்பலில்லாமல் எறிந்துவிடப்படும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திற்கு அழிவு வரும். இந்த அழிவு அவர்களுக்கு சீக்கிரத்தில் வரும். கர்த்தர் ஆமோசுக்கு இந்த செய்தியை சொல்லுவதற்காக, பழுத்த பழங்களுள்ள ஒரு கூடையை அவருக்கு காண்பிக்கிறார். இந்தக் கூடையில் கோடைகாலத்து பழங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. இவை புசிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறது.

கர்த்தராகிய ஆண்டவரே ஆமோசுக்கு, பழுத்த பழங்களுள்ள ஒரு கூடையைக் காண்பிக்கிறார். கர்த்தர் ஆமோசிடம், "ஆமோசே நீ என்னத்தைக் காண்கிறாய்" என்று கேட்கிறார். ஆமோஸ் கர்த்தரிடம் "பழுத்த பழங்களுள்ள ஒரு கூடையைக் காண்கிறேன்" (ஆமோ 8:2) என்று சொல்லுகிறார்.

கூடையில் வைக்கப்பட்டிருக்கிற பழங்கள், ஏற்கெனவே நன்றாய்ப் பழுத்திருக்கிறது. இதை சீக்கிரம் சாப்பிட்டுவிடவேண்டும். இந்தப் பழங்கள் புசிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறது. இந்தப் பழங்களை புசிக்காமல், அப்படியே வைத்திருந்தால் சீக்கிரத்தில் அழுகிப்போகும். இஸ்ரவேல் வம்சத்தாரும் இந்தப் பழங்களைப்போல சீக்கிரத்தில் அழிந்துபோவார்கள். சத்துருக்களால் பட்சிக்கப்படுவதற்கு இஸ்ரவேல் வம்சத்தார் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாக பல வருஷங்களாக பாவம் செய்து வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய பொறுமைக்கும் எல்லை உண்டு. இனிமேல் கர்த்தர் தம்முடைய பொறுமையை அவர்களுக்கு காண்பிக்காமல், தம்முடைய நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு காண்பிக்கப்போகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு அழிவும், முடிவும் நெருங்கி வந்திருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இது அழிவு காலம். தேசத்தில் இலையுதிர்காலம் வந்திருப்பதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அழிவு காலம் வந்திருக்கிறது.

கூடையிலுள்ள பழுத்த பழங்கள் கோடைகாலத்து பழங்கள். இவற்றை குளிர்காலம் வரும் வரையிலும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது. கூடையிலுள்ள பழங்களை இப்போதே புசித்துவிடவேண்டும். இல்லையென்றால் இவை அழுகிப்போகும். கெட்டுப்போகும். பாழாய்ப்போகும்.

கூடையிலுள்ள பழங்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அடையாளமாயிருக்கிறது. அவர்களும் அழிவுக்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுதே அழிக்கப்படவேண்டும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய கோபம் நிறைவேறுவதில் காலதாமதமுண்டாகாது. இஸ்ரவேல் தேசத்தை இப்போதே அழிக்காமல் விட்டுவிட்டால், அவர்கள் இன்னும் அதிகமாக பாவம் செய்வார்கள். அவர்களுக்கு அதிக கேடுண்டாகும்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஜனமாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு முடிவுகாலம் வந்திருக்கிறது. அவர்கள் சீக்கிரத்தில் அழிந்துபோவார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் இதுவரையிலும் பொறுமையோடு காத்திருந்தார். ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் புத்திரர்மீது வருகிறது. "இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்" (ஆமோ 8:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவு காலம் வந்திருக்கிறது என்பதே, பழுத்த பழங்களுள்ள கூடைக்கு அடையாளம்.

"இதோ, இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன்; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்" (ஆமோ 7:8) என்று கர்த்தர் ஏற்கெனவே சொன்னதுபோல, இப்போதும், "இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்" என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் தேசத்தின்மீது வரும்போது, அந்த தேசம் அழிந்துபோகும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவாலயப்பாட்டுகள் அலறுதலாக மாறும்; எல்லா இடத்திலும் திரளான பிரேதங்கள் புலம்பலில்லாமல் எறிந்துவிடப்படும் (ஆமோ 8:3).

இந்த உலகத்தில் பாவங்கள் நிரம்பியிருக்கிறது. பாவமான இந்த உலகத்தில், பாவமான இஸ்ரவேல் தேசம் இருக்கிறது. பாவிகளுக்கு சந்தோஷமில்லை. துக்கம் அவர்களை ஆளுகை செய்யும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவாலயப்பாட்டுக்களெல்லாம் அலறுதலாக மாறும்.

தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் வரும்போது, அவர்களுடைய சந்தோஷங்கள் துக்கமாய் மாறும். அவர்களுடைய ஆறுதல்களும் சமாதானங்களும், பிரச்சனைகளாகவும், தொந்தரவுகளாகவும் மாறும். அவர்களுடைய இலகுவான இருதயங்கள் பாரமுள்ள இருதயங்களாக மாறும்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் வம்சத்தாருக்கு வருவதற்கு முன்பாக, அவர்கள் தேவாலயத்து பாட்டுக்களை சந்தோஷமாயும், சத்தமாயும் பாடினார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும்போது, அவர்களுடைய சந்தோஷம் ஒழிந்துபோகிறது. அவர்களுக்குள் துக்கமும், வேதனையும் உண்டாகிறது. அவர்கள் சத்தமாக அலறுகிறார்கள்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் வம்சத்தார்மீது வரும்போது துக்கமும், மரணமும் அவர்களை ஆளுகை செய்கிறது. எல்லா இடங்களிலும் திரளான பிரேதங்கள் புலம்பல் இல்லாமல் எறிந்துவிடப்படும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இவர்கள் பஞ்சத்தினாலோ அல்லது பட்டயத்தினாலோ செத்துப்போவார்கள்.

"அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்; எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார்; விஸ்தாரமான தேசங்களின்மேல் தலைவர்களாயிருக்கிறவர்களை நொறுக்கிப் போடுவார்" (சங் 110:6).

செத்துப்போனவர்களின் எண்ணிக்கை திரளாகயிருக்கும்போது, அவர்களுக்காக புலம்புகிறவர்கள் இருக்கமாட்டார்கள். செத்துப்போன பிரேதங்களை அடக்கம்பண்ணுவதற்குகூட ஆட்கள் கிடைக்கமாட்டார்கள். அவர்களுடைய பிரேதங்கள் அடக்கம்பண்ணப்படாமல் எல்லா இடத்திலும் எரிந்துவிடப்படும். இஸ்ரவேல் வம்சத்தார் எந்த இடத்தில் செத்துப்போனார்களோ, அந்த இடத்தில் பிரேதங்களாகக் கிடப்பார்கள்.

பண்டிகைகள் துக்கிப்பாக மாறும்
ஆமோ 8:4-10

ஆமோ 8:4. தேசத்தில் சிறுமைப்பட்டவர்களை ஒழியப்பண்ண, எளியவர்களை விழுங்கி:

ஆமோ 8:5. நாங்கள் மரக்காலைக் குறைத்து, சேக்கல் நிறையை அதிகமாக்கி, கள்ளத்தராசினால் வஞ்சித்து, தரித்திரரைப் பணத்துக்கும், எளியவர்களை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் கொள்ளும்படிக்கும், தானியத்தின் பதரை விற்கும்படிக்கும்,

ஆமோ 8:6. நாங்கள் தவசம் விற்கத்தக்கதாக மாதப்பிறப்பும், நாங்கள் தானியத்தின் பண்டசாலைகளைத் திறக்கத்தக்கதாக ஓய்வுநாளும் எப்போது முடியும் என்று சொல்லுகிறவர்களே, இதைக் கேளுங்கள்.

ஆமோ 8:7. அவர்கள் செய்கைகளையெல்லாம் நான் ஒருபோதும் மறப்பதில்லையென்று கர்த்தர் யாக்கோபுடைய மகிமையின்பேரில் ஆணையிட்டார்.

ஆமோ 8:8. இதினிமித்தம் தேசம் அதிரவும், அதின் குடிகள் எல்லாம் துக்கிக்கவும், எங்கும் நதிகளாய்ப் புரண்டோடவும், எகிப்தின் ஆற்றுவெள்ளத்தைப்போல் அடித்து, பெருவெள்ளமாகவும் வேண்டாமோ?

ஆமோ 8:9. அந்நாளிலே நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப்பண்ணி, பட்டப்பகலிலே தேசத்தை அந்தகாரப்படுத்தி,

ஆமோ 8:10. உங்கள் பண்டிகைகளைத் துக்கிப்பாகவும், உங்கள் பாட்டுகளையெல்லாம் புலம்பலாகவும் மாறப்பண்ணி, சகல அரைகளிலும் இரட்டையும், சகல தலைகளிலும் மொட்டையையும் வருவித்து, அவர்களுடைய துக்கிப்பை ஒரே பிள்ளைக்காகத் துக்கிக்கிற துக்கிப்புக்குச் சமானமாக்கி, அவர்களுடைய முடிவைக் கசப்பான நாளாக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரிடத்தில் உண்மையும் சத்தியமுமில்லை. அவர்கள் நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அநியாயம் பண்ணுகிறார்கள். அநீதி அவர்களை ஆளுகை செய்கிறது. இஸ்ரவேல் தேசத்தின் நியாயாதிபதிகளிடத்தில் தெய்வபக்தியில்லை. மனுஷநேயமும் இல்லை.

"ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான்" (லூக் 18:2).

இஸ்ரவேல் வம்சத்தாரிடம் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. ஆனால் தங்களிடத்தில் தெய்வபக்தியிருப்பதுபோல மாய்மாலம்பண்ணுகிறார்கள். அவர்கள் ஓய்வுநாளையும் மாசப்பிறப்புகளையும் ஆசரிக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் உண்மையான இருதயத்தோடு ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை. ஓய்வுநாளை ஆசரிப்பது அவர்களுக்கு சந்தோஷமாயில்லை.

வியாபாரம்பண்ணாமலிருப்பது அவர்களுக்கு கஷ்டமாயிருக்கிறது. "நாங்கள் தவசம் விற்கத்தக்கதாக மாதப்பிறப்பும், நாங்கள் தானியத்தின் பண்டசாலைகளைத் திறக்கத்தக்கதாக ஓய்வுநாளும் எப்போது முடியும்" (ஆமோ 8:6) என்று தங்களுக்குள் சொல்லிக்கொள்கிறார்கள். ஓய்வுநாள் எப்போது முடியும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க அவர்களுக்கு விருப்பமுமில்லை மனதுமில்லை.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஓய்வுநாளைவிட சந்தை நாளே முக்கியமான நாளாகவும், விருப்பமான நாளாகவும் இருக்கிறது. ஓய்வுநாள் எப்போது முடியும் என்றும், சந்தைநாள் எப்போது வரும் என்றும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்களிடத்திலுள்ள தவசத்தை விற்கவேண்டும் என்றும், தானியத்தின் பண்டசாலைகளைத் திறந்து வியாபாரம் பண்ணவேண்டுமென்றும் ஆசைப்படுகிறார்கள். ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரித்து, தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பலப்படவேண்டுமென்று அவர்களிடத்தில் விருப்பமில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஜனமாயிருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு அந்நியராயிருக்கிறார்கள். தங்களுக்குத் தாங்களே சத்துருக்களாயிருக்கிறார்கள். ஓய்வுநாட்களைவிட சந்தை நாட்களை நேசிக்கிறார்கள். கர்த்தரை ஆராதிப்பதைவிட, தானியங்களையும் தவசங்களையும் விற்பதற்கு பிரியப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரிடத்தில் நியாயமில்லை. அவர்கள் நீதியான காரியங்களை செய்வதில்லை. பிறருக்கு இரக்கம் காண்பிப்பதில்லை. தானியம் விற்கிறவர்கள், தங்கள் மரக்காலை குறைக்கிறார்கள். சேக்கல் நிறையை அதிகமாக்குகிறார்கள். கள்ளத்தராசைப் பயன்படுத்தி தானியம் வாங்குகிறவர்களை வஞ்சிக்கிறார்கள் (ஆமோ 8:5).

தானியத்தை மரக்காலால் அளந்துபோடுவது வழக்கம். மரக்காலின் அளவு குறைவாகயிருக்கும்போது, தானியம் வாங்குகிறவர்களுக்கு குறைந்த அளவு தானியமே கிடைக்கும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பணத்தை சேக்கல் என்னும் நிறையினால் நிறுத்து வாங்குவது வழக்கம். தானியம் விற்கிறவர்கள் சேக்கல் நிறையை அதிகமாக்கி, வாங்குகிறவர்களிடமிருந்து அதிகமான பணத்தை நிறுத்து வாங்கிக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரிடம் கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. மனுஷர்மீது பிரியமுமில்லை. அவர்களுடைய இருதயங்கள் கடினப்பட்டிருக்கிறது. கள்ளத்தராசும், கள்ளப்படிக்கல்லும் கர்த்தருக்கு அருவருப்பானது.

தானியத்தை விற்கிறவர்கள் சுத்தமான, தரமான தானியத்தை விற்பதில்லை. அவர்கள் தானியத்தின் பதரை விற்கிறார்கள். தரம் குறைந்த கோதுமையை விற்பனை செய்கிறார்கள். தானியத்தை விற்கிறவர்கள் வாங்குகிறவர்களின் நன்மையை நாடுவதில்லை. அவர்களை வஞ்சித்து, தங்களுக்கு ஐசுவரியம் சேர்க்கவேண்டும் என்று பேராசைப்படுகிறார்கள். இவர்கள் தேசத்தில் சிறுமைப்பட்டவர்களை ஒழியப்பண்ண, எளியவர்களை விழுங்குகிறார்கள் (ஆமோ 8:4).

தானியத்தை விற்கிறவர்கள், வாங்குகிறவர்களின் அறியாமையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள். வாங்குகிறவர்களுக்கு தானியத்தின் தரத்தை சோதித்துப் பார்க்க தெரியவில்லையென்றால், அவர்களுக்கு தரமான தானியத்தை விற்பதற்கு பதிலாக, தானியத்தின் பதரை விற்றுப்போடுகிறார்கள்.

தானியத்தை விற்கிறவர்கள் எளியவர்களை வஞ்சிக்கிறார்கள். தரித்திரரை பணத்திற்கும், எளியவர்களை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் கிரயத்திற்கு வாங்குகிறார்கள். எளியவர்களையும் தரித்திரரையும் சொற்ப கிரயத்திற்கு வாங்கிவிடுகிறார்கள். தானியத்தை வாங்குகிறவர்கள் அதிகமான கிரயம் கொடுப்பதினால், அவர்களுக்கு மற்ற பொருட்களை வாங்க பணம் இருக்காது. அவர்களிடத்திலுள்ள எல்லா பணத்தையும், தானியத்தை விற்கிறவர்களே வஞ்சனையாகப் பெற்றுக்கொள்கிறார்கள்.

தங்களுடைய மாய்மாலமும், அக்கிரமமும், ஏமாற்று வேலைகளும் யாருக்கும் தெரியாத இரகசியம் என்று தானியத்தை விற்கிறவர்கள் நினைக்கிறார்கள். கர்த்தரோ, "அவர்கள் செய்கைகளையெல்லாம் நான் ஒருபோதும் மறப்பதில்லை" (ஆமோ 8:7) என்று சொல்லுகிறார். கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமில்லை. அவர் சர்வஞானமுள்ளவர். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருடைய அக்கிரமச் செய்கைகளைப்பற்றிச் சொல்லும்போது, தம்முடைய வார்த்தைகளை யாக்கோபுடைய மகிமையின் பேரில் ஆணையிடுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரில் அநியாயமும், அக்கிரமமும் செய்கிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. கர்த்தர் அவர்களுடைய செய்கைகளை மறவாமல் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு தம்முடைய தண்டனையைக் கொடுக்கிறார். "அவர்கள் செய்கைகளையெல்லாம் நான் ஒருபோதும் மறப்பதில்லை" (ஆமோ 8:7) என்று கர்த்தர் சொல்லும் வாக்கியத்திற்கு, "அவர்கள் பாவங்களை நான் ஒருபோதும் மன்னிப்பதில்லை" என்று கர்த்தர் சொல்லுவதாக வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் பாவிகள்மீது அழிவையும், குழப்பதையும் வரப்பண்ணுகிறார். இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமாய், அவர்களுடைய தேசம் அதிரும். அவர்களுடைய குடிகளெல்லாம் துக்கிக்கும் (ஆமோ 8:8).

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக வரும்போது, அவர்களுடைய துக்கத்தின் ஆறுகள் நதிகளாய்ப் புரண்டு ஓடும். அது எகிப்தின் ஆற்றுவெள்ளத்தைப்போல் அடித்து, பெருவெள்ளமாகும். இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய துக்கத்திலும் வேதனையிலும் மூழ்குவார்கள். நதிகள் புரண்டு ஓடுவதுபோல துக்கமும், பயங்கரமும் அவர்கள்மீது புரண்டு ஓடும். அவர்களால் பிரவாகித்து வரும் ஆற்று வெள்ளத்திற்கு தப்பிக்க முடியாது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாளிலே, அவர் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப்பண்ணுவார். பட்டப்பகலிலே தேசத்தை அந்தகாரப்படுத்துவார் (ஆமோ 8:9). மத்தியானவேளையில் சூரியன் அதிக வெளிச்சத்தையும், அதிக உஷ்ணத்தையும் கொடுக்கும். ஆனால், கர்த்தருடைய வல்லமையோ மத்தியான வெளிச்சத்தை அந்தகாரப்படுத்திவிடும். அவர்களுக்கு சந்தோஷமாகயிருந்ததெல்லாம் துக்கமாக மாறும். அவர்களுடைய நம்பிக்கைகளெல்லாம் வீணாய்ப்போகும்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை, தம்முடைய நியாயத்தீர்ப்பின் நாளில் தண்டிப்பார்.

"அந்நாளிலே நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப்பண்ணி, பட்டப்பகலிலே தேசத்தை அந்தகாரப்படுத்தி, உங்கள் பண்டிகைகளைத் துக்கிப்பாகவும், உங்கள் பாட்டுகளையெல்லாம் புலம்பலாகவும் மாறப்பண்ணி, சகல அரைகளிலும் இரட்டையும், சகல தலைகளிலும் மொட்டையையும் வருவித்து, அவர்களுடைய துக்கிப்பை ஒரே பிள்ளைக்காகத் துக்கிக்கிற துக்கிப்புக்குச் சமானமாக்கி, அவர்களுடைய முடிவைக் கசப்பான நாளாக்குவேன்" (ஆமோ 8:9,10) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

மனந்திரும்பாத பாவிகளின் நிலமை மோசமாகிக்கொண்டே போகும். அவர்கள் மனந்திரும்பவில்லையென்றால், அவர்களுடைய நிலமை இன்னும் அதிகமாய் மோசமாகும். முடிவிலே பாவிகள் அழிந்துபோவார்கள். பாவத்தின் சம்பளம் மரணம்.

பஞ்சம்
ஆமோ 8:11-14

ஆமோ 8:11. இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக்குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆமோ 8:12. அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசைதொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள்.

ஆமோ 8:13. அந்நாளிலே சௌந்தரியமுள்ள கன்னிகைகளும் வாலிபரும் தாகத்தினால் சோர்ந்துபோவார்கள்.

ஆமோ 8:14. தாணே! உன் தேவனுடைய ஜீவனைக்கொண்டும், பெயெர்செபா மார்க்கத்தின் தேவனுடைய ஜீவனைக்கொண்டும் என்று சொல்லி, சமாரியாவின் தோஷத்தின்மேல் ஆணையிடுகிறவர்கள் விழுவார்கள்; இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டார்கள் என்றார்.

இஸ்ரவேல் தேசத்திலே ஆவிக்குரிய பஞ்சமுண்டாகும். கர்த்தர், இஸ்ரவேல் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும். அந்நாளிலே கர்த்தர், தம்முடைய வசனம் கேட்கக்கிடையாத பஞ்சத்தை, இஸ்ரவேல் தேசத்தின்மீது அனுப்புவார். ஆசாரியர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை பிரசங்கிக்கமாட்டார்கள். ஜனங்களால் ஆவிக்குரிய நல்ல செய்திகளைக் கேட்கமுடியாது. தேவனுடைய கற்பனைகளும், அவருடைய பிரமாணங்களும் என்ன என்பதுகூட ஜனங்களுக்குத் தெரியாது.

கர்த்தருடைய நாளின்போது பட்டப்பகலின் வெளிச்சம் ஒழிந்துபோகும். தேசத்திலே அந்தகாரமுண்டாகும். ஆமோஸ் தீர்க்கதரிசனம் உரைத்த காலத்திலும், அதற்கு பின்பும், இஸ்ரவேல் தேசத்திலே ஏராளமான தீர்க்கதரிசிகள், கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை அறிவித்தார்கள். ஜனங்களுக்கு தேவனுடைய வசனங்களை தாராளமாய்க் கேட்கும் சிலாக்கியம் கிடைத்தது.

கர்த்தரோ அவர்களுக்கு ஆவிக்குரிய பஞ்சத்தையும், வசனப்பஞ்சத்தையும் கொடுக்கப்போவதாகச் சொல்லுகிறார். தேசத்தில் ஆகாரக்குறைவினால் பஞ்சமுண்டாகும். ஜலக்குறைவினால் தாகமுண்டாகும். கர்த்தரோ இங்கு தம்முடைய வசனம் கேட்க கிடையாத பஞ்சத்தை இஸ்ரவேல் தேசத்தின்மீது அனுப்புகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அப்பமும் தண்ணீரும் தாராளமாய்க் கிடைக்கும். ஆனால், அவர்கள் மத்தியில் கர்த்தருடைய வார்த்தைகளை பிரசங்கம்பண்ணுகிற ஊழியக்காரர்களோ, தீர்க்கதரிசிகளோ ஒருவரும் இருக்கமாட்டார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை அவர்கள் நடுவிலிருந்து வெளியேற்றிவிடுவார்.

இஸ்ரவேல் தேசம் கர்த்தருக்கு பிரியமான தேசம். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அந்த தேசத்தை ஆசீர்வதித்தார். இஸ்ரவேல் வம்சத்தாரை தமக்கு சொந்தமானவர்களாகத் தெரிந்துகொண்டார். கர்த்தருடைய பிரமாணங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது. கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார். ஆகையினால் இஸ்ரவேல் தேசம், மற்ற தேசங்களைவிட, உயர்ந்த தேசமாகவும், உன்னதமான தேசமாகவும் இருந்தது.

கர்த்தரோ இப்போது தம்முடைய வசனங்களையும், பிரமாணங்களையும், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலிருந்து எடுத்துக்கொள்கிறார். அவர்கள் மத்தியிலே வசனம் கேட்க கிடைக்காத பஞ்சத்தை அனுப்புகிறார். அவர்களுக்கு ஆவிக்குரிய பஞ்சமுண்டாயிற்று. அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் பாவத்தினால் கறைபடிந்தது. அவர்களுடைய மேன்மைகளெல்லாம் ஒன்றுமில்லாமல் போயிற்று. உயர்ந்த நிலமையிலிருந்தவர்கள் இப்போது தாழ்ந்த நிலமையிலிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தொடர்ந்து துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபமும், நியாயத்தீர்ப்பும் அவர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய கோபத்தின் அடையாளமாகவே, கர்த்தர் அவர்கள் மத்தியில், தம்முடைய வசனம் கேட்கக்கிடையாத பஞ்சத்தை அனுப்புகிறார்.

இந்தப் பூமியிலே ஆகாரக்குறைவினால் பஞ்சமுண்டாகலாம். ஜலக்குறைவினால் தாகமுண்டாகலாம். மனுஷரால் இந்தப் பஞ்சத்தை ஓரளவு தாங்கிக்கொள்ள முடியும். கர்த்தருடைய வசனம் கேட்கக்கிடையாத பஞ்சம் மனுஷர் மத்தியில் வந்துவிட்டால், இந்த ஆவிக்குரிய பஞ்சத்தை, எந்த மனுஷனாலும் தாங்கிக்கொள்ள முடியாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளில், ஆவிக்குரிய பஞ்சமே, மிகவும் பயங்கரமான நியாயத்தீர்ப்பாகயிருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தில் ஆவிக்குரிய பஞ்சம் வரும்போது, இஸ்ரவேல் ஜனங்கள், கர்த்தருடைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசைதொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள். அந்நாளிலே சௌந்தரியமுள்ள கன்னிகைகளும் வாலிபரும் தாகத்தினால் சோர்ந்துபோவார்கள் (ஆமோ 8:12,13).

இஸ்ரவேல் வம்சத்தார் திபேரியா கடலிலிருந்து, பெருங்கடல் வரைக்கும் பிரயாணம் செய்வார்கள். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை அந்த தேசங்களில் அனுப்பியிருக்கிறாரா என்று தேடிப்பார்ப்பார்கள். யூதாமார்க்கத்தின் ஜெபாலயங்கள், "கன்னிகைகள்" என்றும், ஜெபாலயத்தலைவர்கள் "வாலிபர்" என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

தங்களுடைய சுயபலத்தையும், சுயபரிசுத்தத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறவர்கள், கிறிஸ்து தங்களுக்கு தேவையில்லை என்று சொல்லிவிடுவார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய சுயபலத்தை நம்பினார்கள். அந்நிய தேசத்தாரை நம்பினார்கள். அவர்கள் கர்த்தரை நம்பவில்லை. கர்த்தர் அவர்களுக்கு ஆவிக்குரிய பஞ்சத்தைக் கட்டளையிடுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரால் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கமுடியவில்லை. அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத்தேடி பல இடங்களுக்கும் அலைந்து திரிகிறார்கள். ஆனாலும் அவர்களால் அதை கண்டடைய முடியாது. அந்நாளிலே பக்தியுள்ள யூதர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் சோர்ந்துபோவார்கள்.

தங்களுடைய சுயபரிசுத்தத்தை நம்பாமல், கர்த்தருடைய கிருபையை சார்ந்திருக்கிறவர்கள், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைத்திருப்பார்கள். அவர்கள் கிறிஸ்துவின் நீதியின்மேல் தாகமுள்ளவர்களாகவும், பசியுள்ளவர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு சோர்வு உண்டாகாது. இயேசுகிறிஸ்துவைத் தேடுகிறவர்கள், அவரைக் கண்டுபிடிப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரில் அநேகர் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரருக்கு தலைவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் சமாரியாவின் தேவனைக்கொண்டு ஆணையிடுகிறார்கள்.

சமாரியாவின் தோஷத்தின்மேல் ஆணையிடுகிறவர்கள் விழுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஆமோ 8:14). சமாரியாவுக்கு அருகாமையிலுள்ள பெத்தேலிலே பொன்கன்றுக்குட்டி ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. "சமாரியாவின் தோஷம்" என்பது, இந்த பொன்கன்றுக்குட்டியைக் குறிக்கிறது.

தாணிலே மேலும் ஒரு பொன்கன்றுக்குட்டி நிறுவப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இவ்விரண்டு பொன்கன்றுக்குட்டிகளையும் ஆராதிக்கிறார்கள். "தாணே! உன் தேவனுடைய ஜீவனைக்கொண்டும், பெயெர்செபா மார்க்கத்தின் தேவனுடைய ஜீவனைக்கொண்டும்" (ஆமோ 8:14) என்றும் சொல்லி இஸ்ரவேல் வம்சத்தார் ஆணையிடுகிறார்கள்.

தாணிலுள்ள கன்றுக்குட்டி பொன்னால் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு ஜீவனில்லை. இஸ்ரவேல் வம்சத்தாரோ பொன்கன்றுக்குட்டிக்கு ஜீவனிருப்பதாக நினைத்து, அதன் பேரில் ஆணையிடுகிறார்கள். பெயர்செபாவில், கன்றுக்குட்டியை ஆராதனை செய்யவேண்டிய வழிமுறைகளும், மார்க்க முறைகளும் பின்பற்றப்படுகிறது.

இஸ்ரவேல் வம்சத்தார், தங்கள் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவரே இஸ்ரவேலின் தேவன். சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம். இஸ்ரவேல் புத்திரரோ தங்கள் தேவனாகிய கர்த்தரை ஆராதியாமல், தாணிலும், பெத்தேலிலுமுள்ள பொன்கன்றுக்குட்டிகளை ஆராதிக்கிறார்கள்.

BELLWETHER INTERNATIONAL

ஆமோஸ் - விரிவுரை
AMOS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

விக்கிரகங்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் வம்சத்தார், கர்த்தருக்கு கொடுக்கவேண்டிய கனத்தையும் மகிமையையும் விக்கிரகங்களுக்கு கொடுக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகத் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இவர்களை மனுஷரால் தண்டிக்க முடியாது. ஜீவனுள்ள தேவனால் மாத்திரமே இவர்களைத் தண்டிக்க முடியும். கர்த்தரால் மாத்திரமே இவர்களை கீழே விழச்செய்யமுடியும்.

விக்கிரகங்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் புத்திரரை கர்த்தர் கீழே தள்ளிவிடுவார். அவர்கள் கீழே விழுவார்கள். அவர்கள் ஆராதிக்கிற விக்கிரகங்கள் அவர்களுடைய உதவிக்கு வராது. அவற்றிற்கு ஜீவனுமில்லை பெலனுமில்லை. கீழே விழுந்துகிடக்கிற இஸ்ரவேல் புத்திரரால் மறுபடியும் எழுந்திருக்க முடியாது. அவர்களுடைய சுயபலத்தினால் அவர்களால் எழும்ப முடியாது. அவர்களுடைய விக்கிரகங்களும் அவர்களுக்கு உதவி செய்யாது. விக்கிரகாராதனைக்காரர்கள் இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டார்கள்.

9 அதிகாரம்

தேவனுடைய நியாயத்தீர்ப்பு பாவிகள்மீது வரும். பாவிகளால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது (ஆமோ 9:1-4) கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவர் தம்முடைய நீதியினாலும், வல்லமையினாலும் பாவிகளைத் தண்டிக்கிறார் (ஆமோ 9:5,6). ஆண்டவருடைய கண்கள் பாவமுள்ள ராஜ்யத்திற்கு விரோதமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை முற்றிலுமாய் அழித்துப்போடவில்லை (ஆமோ 9:7,8).

கர்த்தருக்கு மீதமானவர்கள் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்வார்கள் (ஆமோ 9:9). துன்மார்க்கர் அழிந்துபோவார்கள் (ஆமோ 9:11-15). மேசியாவின் நாட்களுக்கு அடையாளம் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

"எப்படியெனில், மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குபின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது" (அப் 15:16,17).

ஆண்டவரின் கண்கள்
ஆமோ 9:1-10

ஆமோ 9:1. ஆண்டவரைப் பலிபீடத்தின்மேல் நிற்கக்கண்டேன்; அவர்: நீ வாசல் நிலைகள் அசையும்படி போதிகையை அடித்து, அவைகளை அவர்கள் எல்லாருடைய தலையின் மேலும் விழ உடைத்துப்போடு; அவர்களுக்குப் பின்னாகவரும் மீதியானவர்களை நான் பட்டயத்தினால் கொன்றுபோடுவேன்; அவர்களில் ஓடுகிறவன் ஒருவனும் தப்புவதுமில்லை, அவர்களில் தப்புகிறவன் ஒருவனும் இரட்சிக்கப்படுவதுமில்லை.

ஆமோ 9:2. அவர்கள் பாதாளபரியந்தம் தோண்டிப் பதுங்கிக்கொண்டாலும், என் கை அவ்விடத்திலிருந்து அவர்களைப் பிடித்துக்கொண்டுவரும்; அவர்கள் வானபரியந்தம் ஏறினாலும், அவ்விடத்திலுமிருந்து அவர்களை இறங்கப்பண்ணுவேன்.

ஆமோ 9:3. அவர்கள் கர்மேலின் கொடுமுடியிலே ஒளித்துக்கொண்டாலும், அங்கே அவர்களைத் தேடிப்பிடிப்பேன்; அவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திலே போய் என் கண்களுக்கு மறைந்துகொண்டாலும், அங்கே அவர்களைக் கடிக்கப் பாம்புகளுக்குக் கட்டளையிடுவேன்.

ஆமோ 9:4. அவர்கள் தங்கள் சத்துருவுக்கு முன்பாகச் சிறைப்பட்டுப்போனாலும், அங்கே அவர்களைக் கொன்றுபோட பட்டயத்துக்கு நான் கட்டளையிட்டு, என் கண்களை அவர்கள்மேல் நன்மைக்கல்ல, தீமைக்கென்றே வைப்பேன்.

ஆமோ 9:5. சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் தேசத்தைத் தொட, அது உருகிப்போம்; அப்பொழுது அதின் குடிகளெல்லாரும் புலம்புவார்கள்; எங்கும் நதியாய்ப் புரண்டோடி, எகிப்தினுடைய ஆற்று வெள்ளத்தைப்போல் வெள்ளமாகும்.

ஆமோ 9:6. அவர் வானத்தில் தமது மேல்றைகளைக் கட்டி, பூமியில் தமது கீழறைகளை அஸ்திபாரப்படுத்தி, சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியினுடைய விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

ஆமோ 9:7. இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் எனக்கு எத்தியோப்பியரின் புத்திரரைப்போல் இருக்கிறீர்கள் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் இஸ்ரவேலை எகிப்துதேசத்திலிருந்தும், பெலிஸ்தரைக் கப்தோரிலிருந்தும், சீரியரைக் கீரிலிருந்தும் கொண்டுவரவில்லையோ?

ஆமோ 9:8. இதோ, கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பாவமுள்ள ராஜ்யத்துக்கு விரோதமாக வைக்கப்பட்டிருக்கிறது; அதை பூமியின்மேல் இராதபடிக்கு அழித்துப்போடுவேன்; ஆகிலும் யாக்கோபின் வம்சத்தை முழுவதும் அழிக்கமாட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 9:9. இதோ, ஜல்லடையினால் சலித்தரிக்கிறதுபோல் இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும்படிக்கு நான் கட்டளையிடுவேன்; ஆனாலும் ஒரு கோதுமைமணியும் தரையிலே விழுவதில்லை.

ஆமோ 9:10. தீங்கு எங்களை அணுகுவதுமில்லை, எங்களுக்கு நேரிடுவதுமில்லையென்று என் ஜனத்தில் சொல்லுகிற பாவிகளெல்லாரும் பட்டயத்தினால் சாவார்கள்.

கர்த்தர் பாவிகளுக்கு தம்முடைய நீதியான தீர்ப்பை கொடுக்கிறார். ஆமோஸ் ஆண்டவரை பலிபீடத்தின்மேல் நிற்கக்காண்கிறார் (ஆமோ 9:1). இது சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிற பலிபீடமாகும்.

கர்த்தர் இதுவரையிலும் தம்முடைய கிருபாசனத்தில் வீற்றிருந்தார். கேருபீன்களுக்கு நடுவிலே அமர்ந்திருந்தார். இப்போதோ கர்த்தர் கிருபாசனத்தை விட்டு எழுந்து, பலிபீடத்தின்மேல் நின்றுகொண்டிருக்கிறார். இந்த பலிபீடத்தின்மேல், பலிகள் செலுத்தப்படுவதை தடைபண்ணும் வண்ணமாக, கர்த்தர் பலிபீடத்தின்மேல் நிற்கிறார்.

கர்த்தர் ஆமோசுக்கு, "நீ வாசல் நிலைகள் அசையும்படி போதிகையை அடித்து, அவைகளை அவர்கள் எல்லாருடைய தலையின்மேலும் விழ உடைத்துப்போடு" (ஆமோ 9:1) என்று கட்டளை கொடுக்கிறார்.

ஆமோஸ் நிலைகளின் போதிகையை ஓங்கி அடிக்கவேண்டும். நிலைவாசல் அசையும்படி அடிக்கவேண்டும். போதிகை உடைந்து அது கீழே விழுந்துவிடவேண்டும்.

தேவனுடைய வாசஸ்தலத்தின் நிலைக்கதவை அடித்து உடைத்துப்போடுமாறு கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை புறக்கணித்துவிட்டு, அங்கேயிருந்து வெளியேறிப்போய்விடுவார் என்பதற்கு இது அடையாளம்.

இஸ்ரவேலின் ராஜா கதவுக்கு போதிகையைப்போல இருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தின் பிரபுக்கள் கதவுக்கு வாசல் நிலைகளைப்போல இருக்கிறார்கள். ஆமோஸ் போதிகையை அடிக்கும்போது, வாசல் நிலைகள் அசையும். நிலைவாசல் வழியாக யாரெல்லாம் போகிறார்களோ அவர்களுடைய தலைகள்மீது அவை விழும்.

ஆமோஸ் போதிகையை அடிக்கும்போது, வாசல் நிலைகள், உடைந்துபோகும். அவை, தனக்கு கீழுள்ள எல்லாருடைய தலையின்மேலும் விழும். அவர்கள் எல்லோரும் அங்கேயே மரித்துப்பேவார்கள்.

அவர்களுக்குப் பின்னாகவரும் மீதியானவர்களை கர்த்தர் பட்டயத்தினால் கொன்றுபோடுவார்; அவர்களில் ஓடுகிறவன் ஒருவனும் தப்புவதுமில்லை, அவர்களில் தப்புகிறவன் ஒருவனும் இரட்சிக்கப்படுவதுமில்லை (ஆமோ 9:1).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் இஸ்ரவேல் வம்சத்தார்மீது வேகமாய் வருகிறது. அவர்கள் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். தப்பித்தும் ஓடுகிறார்கள்.

"அவர்கள் பாதாளபரியந்தம் தோண்டிப் பதுங்கிக்கொண்டாலும், என் கை அவ்விடத்திலிருந்து அவர்களைப் பிடித்துக்கொண்டுவரும்; அவர்கள் வானபரியந்தம் ஏறினாலும், அவ்விடத்திலுமிருந்து அவர்களை இறங்கப்பண்ணுவேன்" (ஆமோ 9:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நீதிமான்கள் இந்த உலகத்தில் அநேக உபத்திரவங்களை அனுபவிக்கிறார்கள். நீதிமான்களுடைய மரணம் கர்த்தருடைய பார்வைக்கு பிரியமாயிருக்கிறது. அவர்களுக்கு இனிமேல் உலகப்பிரகாரமான பாடுகள் வராது. நீதிமான்கள் தங்களுடைய கல்லறைகளில், உலகத்தின் பாடுகளுக்கும், வேதனைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் விலகி இளைப்பாறிக்கொண்டிருப்பார்கள்.

"துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது; பெலனற்று விடாய்த்துப்போனவர்கள் அங்கே இளைப்பாறுகிறார்கள்" (யோபு 3:17).

துன்மார்க்கருக்கு இளைப்பாறும் ஸ்தலம் இல்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பித்து அவர்களால் எங்கும் ஓடி ஒழிந்துகொள்ள முடியாது.

"அவர்கள் கர்மேலின் கொடுமுடியிலே ஒளித்துக்கொண்டாலும், அங்கே அவர்களைத் தேடிப்பிடிப்பேன்; அவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திலே போய் என் கண்களுக்கு மறைந்துகொண்டாலும், அங்கே அவர்களைக் கடிக்கப் பாம்புகளுக்குக் கட்டளையிடுவேன்" (ஆமோ 9:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அக்காலத்திலே கர்த்தர் லிவியாதான் என்னும் நீண்ட பாம்பை, லிவியாதான் என்னும் கோணலான சர்ப்பத்தையே, கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் தண்டிப்பார்; சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்றுபோடுவார்" (ஏசா 27:1).

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பித்து அந்நிய தேசங்களுக்கும் ஓடிப்போகமுடியாது. அந்நியர்கள் இவர்களை சிநேகிக்கமாட்டார்கள்.

"அவர்கள் தங்கள் சத்துருவுக்கு முன்பாகச் சிறைப்பட்டுப்போனாலும், அங்கே அவர்களைக் கொன்றுபோட பட்டயத்துக்கு நான் கட்டளையிட்டு, என் கண்களை அவர்கள்மேல் நன்மைக்கல்ல, தீமைக்கென்றே வைப்பேன்" (ஆமோ 9:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எச்சரிப்புக்கள் நிறைவேறவில்லையென்றால் அவற்றிற்கு பெலனில்லை. நாம் சொல்லுகிற வார்த்தைகளை நிறைவேற்றுகிற பெலன் நம்மிடத்தில் இருக்கவேண்டும். நாம் கோபத்தோடு ஒரு வார்த்தையை சொல்லும்போது, அந்த வார்த்தையை நிறைவேற்றுகிற வல்லமை நம்மிடத்தில் இருக்கவேண்டும். நம்மிடத்தில் பெலனில்லையென்றால், நாம் கோபப்படுவதற்கு அர்த்தமில்லாமல் போய்விடும்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவரால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமே இல்லை. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தருடைய கோபம் மனுஷருடைய கோபம் போன்றதல்ல. மனுஷருடைய கோபம் பெலனற்றது. கர்த்தருடைய கோபமோ சர்வவல்லமையுள்ளது.

இஸ்ரவேலின் தேவன் சேனைகளின் கர்த்தராயிருக்கிறார். கர்த்தர் நமக்கு விரோதமாக எழும்பும்போது, அவருடைய சர்வசேனையும் நமக்கு விரோதமாக எழும்பும். சர்வசிருஷ்டிகளும் நமக்கு விரோதமாக எழும்பி வரும். கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவர் சர்வஆளுகையுள்ளவர். அவர் வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லா ஜீவராசிகளையும் சிருஷ்டித்தவர். எல்லா சிருஷ்டிகளும், சிருஷ்டிகருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்.

தேவனாகிய கர்த்தரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். வானமண்டலங்களிலுள்ள எல்லாவற்றையும் கர்த்தரே சிருஷ்டித்தார். கர்த்தர் வானத்தில் தமது மேலறைகளைக் கட்டியிருக்கிறார். பூமியில் தமது கீழறைகளை அஸ்திபாரப்படுத்தியிருக்கிறார் (ஆமோ 9:6).

கர்த்தர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியினுடைய விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர். கர்த்தர் வானத்தை ஆளுகை செய்வதுபோல, பூமியையும், சமுத்திரத்தையும் ஆளுகை செய்கிறார்.

கர்த்தருக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்க முடியாது. கர்த்தரோடு யுத்தம் செய்து ஒருவராலும் ஜெயிக்க முடியாது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறார். அவர் தம்முடைய சத்துருக்களைத் தண்டிக்கிறார்.

பூமியிலுள்ள சர்வசிருஷ்டிகளும், அம்பாறாதூணியிலுள்ள அம்புகளைப்போல இருக்கிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, ஒவ்வொரு அம்பாக எடுத்து, தம்முடைய சத்துருக்களுக்கு விரோமாக எய்கிறார்.

"அவனுக்கு மரணாயுதங்களை ஆயத்தம்பண்ணினார்; தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்கினார்" *(சங் 7:13).*

கர்த்தர் தம்முடைய சத்துருக்களோடு யுத்தம்பண்ணும்போது, சமுத்திரத்தையும், அதன் அலைகளையும், அதன் தண்ணீர்களையும் தம்முடைய ஆயுதமாகப் பயன்படுத்துகிறார். இவையெல்லாம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்புகளைச் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய சர்வஆளுகையினாலோ அல்லது சர்வவல்லமையினாலோ இஸ்ரவேல் வம்சத்தாரை அழிக்கவில்லை. கர்த்தர் தம்முடைய நீதியினால், அவர்களுக்கு விரோதமாக நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரைப் பார்த்து, "இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் எனக்கு எத்தியோப்பியரின் புத்திரரைப்போல் இருக்கிறீர்கள் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் இஸ்ரவேலை எகிப்துதேசத்திலிருந்தும், பெலிஸ்தரைக் கப்தோரிலிருந்தும், சீரியரைக் கீரிலிருந்தும் கொண்டுவரவில்லையோ?" *(ஆமோ 9:7)* என்று கேட்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே சோகமான மாற்றமுண்டாயிருக்கிறது. இவர்கள் கர்த்தருடைய ஜனம். கர்த்தரைப்பற்றிய ஞானமும், அறிவும் இவர்களுக்கு போதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருந்தது. இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டவர்கள்.

ஆனால் இப்போதோ அவர்கள் கர்த்தரைவிட்டுத் தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் காணியாட்சிக்கு அந்நியரைப்போல இருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து, "இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் எனக்கு எத்தியோப்பியரின் புத்திரரைப்போல் இருக்கிறீர்கள் அல்லவோ" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது புறஜாதியாரைப்போல இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை எத்தியோப்பியரின் புத்திரரைப்போல் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். மேசியாவின் நாட்களில், இயேசுகிறிஸ்துவை விசுவாசியாத யூதர்கள் இருப்பார்கள். அவர்கள் இயேசுவை மேசியாவாக அங்கீகரிக்கமாட்டார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காத யூதர்கள், கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகையினால் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு அந்நியராயிருப்பார்கள். கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்கமாட்டார்கள். மற்ற விசுவாசிகளோடு சேர்ந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஆராதிக்கவும்மாட்டார்கள். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையிலிருந்து, தம்மை விசுவாசிக்காத யூதர்களை வெளியேற்றிவிடுகிறார்.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையிலிருந்து தங்களை வெளியேற்றமாட்டார் என்று இஸ்ரவேல் வம்சத்தார் நம்புகிறார்கள். மற்ற தேசங்களைவிட இஸ்ரவேல் தேசம் உயர்ந்திருக்கும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். கர்த்தர் மற்ற தேசங்களுக்கு செய்யாத ஏராளமான நன்மைகளை இஸ்ரவேல் தேசத்திற்கு செய்திருக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதம் தங்களுக்கு தொடர்ந்து கிடைக்கும் என்று இஸ்ரவேல் வம்சத்தார் நம்புகிறார்கள்.

கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விசேஷித்த கிருபைகளையும், சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் கொடுக்க மறுத்துவிடுகிறார். ஒரு காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருந்தார்கள். அவர்கள் அந்நிய தேசத்தாரைப்போல ஜீவிக்காமல், கர்த்தருக்காக வேறுபிரிக்கப்பட்டு, பரிசுத்தமாய் ஜீவித்தார்கள். இப்போதோ இஸ்ரவேல் புத்திரருக்கும், அந்நிய ஜாதியாருக்கும் ஒரு வித்தியாசமுமில்லை. அந்நியரைப்போலவே, இஸ்ரவேல் புத்திரரும் பாவம் செய்கிறார்கள்.

"நான் இஸ்ரவேலை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரவில்லையோ" (ஆமோ 9:7) என்று கர்த்தர் கேட்கிறார். கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்தார். பெலிஸ்தரை கப்தோரிலிருந்து கொண்டு வந்தார். சீரியரை கீரிலிருந்து கொண்டு வந்தார்.

"அசீரியா ராஜா அவனுக்குச் செவிகொடுத்து, தமஸ்குவுக்குப்போய் அதைப்பிடித்து, அதின் குடிகளைக் கீர்பட்டணத்திற்குச் சிறைபிடித்துக் கொண்டுபோய், ரேத்சீனைக் கொன்றுபோட்டான்" (2இராஜா 16:9).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பரிசுத்தத்தில் கர்த்தருக்கு விசேஷமானவர்களாயிருக்க வேண்டும். அவர்களிடத்தில் விசேஷித்த பரிசுத்தம் இல்லையென்றால், அவர்கள் கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதங்களையும், விசேஷித்த சிலாக்கியங்களையும் இழந்துவிடுவார்கள்.

கர்த்தர் துன்மார்க்கமான இஸ்ரவேல் வம்சத்தாரைப் பார்த்து, "இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் எனக்கு எத்தியோப்பியரின் புத்திரரைப்போல் இருக்கிறீர்கள் அல்லவோ" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் துன்மார்க்கமான எத்தியோப்பியரைப்போல, துன்மார்க்கராயிருந்தாலும், கர்த்தர் அவர்களை இன்னும் "இஸ்ரவேல் புத்திரரே" என்றே அழைக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், அவர்களில் சிலர் கர்த்தருக்கு பயந்து பரிசுத்தமாய் ஜீவிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு மீதமானவர்கள். கர்த்தருடைய இருதயத்தில், இஸ்ரவேல் புத்திரருக்கு, ஒரு விசேஷித்த இடம் கிடைத்திருக்கிறது. "ஆகையினால் யாக்கோபின் வம்சத்தை முழுவதுமாய் அழிக்கமாட்டேன்" (ஆமோ 9:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இதோ, கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பாவமுள்ள ராஜ்யத்துக்கு விரோதமாக வைக்கப்பட்டிருக்கிறது; கர்த்தர் அதை பூமியின்மேல் இராதபடிக்கு அழித்துப்போடுவார் (ஆமோ 9:8). கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதியாயிருக்கிறார். அவர் துன்மார்க்கருக்கும், நீதிமான்களுக்கும் இடையே வித்தியாசம் காண்கிறார்.

கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பூமியிலுள்ள பாவிகளையும் நோக்கிப் பார்க்கிறது. இங்குள்ள பரிசுத்தவான்களையும் நோக்கிப் பார்க்கிறது. "இதோ, ஜல்லடையினால் சலித்தரிக்கிறதுபோல் இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும்படிக்கு நான் கட்டளையிடுவேன்; ஆனாலும் ஒரு கோதுமைமணியும் தரையிலே விழுவதில்லை" (ஆமோ 9:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பூமியிலுள்ள நீதிமான்கள் கோதுமை மணியைப்போல இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரும் அழிந்துபோகமாட்டார்கள். ஒரு கோதுமை மணியும் தரையில் விழாது. கர்த்தர் எந்தக் கோதுமை மணியையும் மறந்துவிடவும் மாட்டார். நாம் கர்த்தருடைய சமுகத்தில் பாவிகளாயிருக்கக்கூடாது. நீதிமான்களாயிருக்கவேண்டும். அப்போது கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும், கிருபையும் நமக்கு கிடைக்கும்.

பாவிகள் தங்கள் சுயபரிசுத்தத்தை நம்புகிறார்கள். அவர்கள் தங்கள் சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். "தீங்கு எங்களை அணுகுவதுமில்லை, அது எங்களுக்கு நேரிடுவதுமில்லை" (ஆமோ 9:10) என்று பாவிகள் இறுமாப்பாய் சொல்லுகிறார்கள். இவர்கள் அந்நிய தேசத்தாரல்ல. இவர்கள் இஸ்ரவேல் தேசத்தார். ஆனாலும் "என் ஜனத்தில் இவ்வாறு சொல்லுகிற பாவிகள் எல்லாரும் பட்டயத்தினால் சாவார்கள்" (ஆமோ 9:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தாவீதின் கூடாரம்
ஆமோ 9:11-15

ஆமோ 9:11. ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு,

ஆமோ 9:12. அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 9:13. இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப் பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்து பிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 9:14. என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக்கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப்புசிப்பார்கள்.

ஆமோ 9:15. அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு மகிமையான பெரிய காரியங்களை செய்வார். இந்தப் பூமியிலே மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். கிறிஸ்துவானவர் மனுஷர் மத்தியிலே தம்முடைய சபையை ஸ்தாபிப்பார். கிறிஸ்துவே சபைக்கு தலையாயிருக்கிறார்.

"அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குபின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது" (அப் 15:15-17).

மேசியாவில், தாவீதின் கூடாரம் திரும்பவும் ஸ்தாபிக்கப்படும். "அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து ஸ்தாபிப்பேன்" (ஆமோ 9:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஜனம் இப்போது கூடாரத்தில் வாசம்பண்ணுவதுபோல வாசம்பண்ணுகிறார்கள். யுத்தவீரர்கள் யுத்தகளத்திலே கூடாரத்தில் தங்கியிருப்பதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாரும் தங்கியிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, அதை "தாவீதின் கூடாரம்" (ஆமோ 9:12) என்று சொல்லுகிறார்.

தாவீதின் குடும்பத்தார் மிகவும் தாழ்வான நிலமையிலிருக்கிறார்கள். அவர்களுடைய வல்லமைகளும், அதிகாரங்களும், பெலனும் குறைந்துபோயிற்று. தாவீதின் வம்சத்தாரில் அநேகர் ஒன்றுமில்லாமல் போய்விட்டார்கள். தாவீதின் குடும்பத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போனதினால், அவர்களுடைய ராஜ்ய அந்தஸ்தும் அவர்களை விட்டு நீங்கிப்போயிற்று.

தாவீதின் வீட்டாரைப்போலவே, யூதர்களும், கடைசி நாட்களில், தங்களுடைய மகிமையையும், மேன்மையையும் இழந்தவர்களாகயிருப்பார்கள். அவர்கள் பழுதாய்ப்போன கூடாரத்தைப்போல மகிமையில்லாதவர்களாயிருப்பார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, விழுந்துபோன கூடாரங்களை திரும்பவும் எடுப்பித்து ஸ்தாபிப்பார். அதன் திறப்புகளை அடைப்பார். அதில் பழுதாய்ப்போனதை சீர்படுத்துவார். பூர்வநாட்களில் இருந்ததுபோல, கிறிஸ்துவானவர், அந்தக் கூடாரங்களை ஸ்தாபிப்பார்.

கர்த்தர் தாவீதோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இந்த உடன்படிக்கை இயேசுகிறிஸ்துவிலே நிறைவேறுகிறது. தாவீதின் குடும்பத்தார் தாங்கள் இழந்துபோன மகிமையை திரும்பவும் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் மறுபடியும் புதுப்பிக்கப்படுவார்கள்.

தாவீதின் குடும்பத்தாருக்கு உலகப்பிரகாரமான மகிமை கொடுக்கப்படுகிறது. இது தற்காலிக மகிமை. இயேசுகிறிஸ்துவின் குடும்பத்தாருக்கோ ஆவிக்குரிய மகிமை கொடுக்கப்படும். இந்த மகிமை, தாவீதின் குடும்பத்தாருடைய மகிமையைவிட, மேன்மையான மகிமையாயிருக்கும்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இந்த உடன்படிக்கையும், இயேசுகிறிஸ்துவில் நிறைவேறுகிறது. கிறிஸ்துவானவர் இந்தப் பூமியிலே சுவிசேஷ சபையை ஸ்தாபிக்கிறார். தேவனுடைய கூடாரமானது, மனுஷர் மத்தியிலே, சுவிசேஷ சபையாக மறுபடியும் ஸ்தாபிக்கப்படுகிறது.

ஏதோமில் மீதியானவர்களையும், கர்த்தருடைய நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு, அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை கர்த்தர் திரும்ப எடுப்பித்து ஸ்தாபிப்பார் (ஆமோ 9:11,12).

தேவனுடைய ராஜ்யம் விஸ்தாரமாயிருக்கும். கர்த்தர் தாவீதின் கூடாரத்தை திரும்ப எடுப்பித்துக் கட்டுவார். அதின் எல்லைகளை விஸ்தாரமாக்குவார். ஏதோமில் மீதியானவர்களும், கர்த்தருடைய நாமம் விளங்கிய சகல ஜாதிகளும், தாவீதின் குடும்பத்தாருடைய ஆளுகையின் கீழ்வருவார்கள்.

"என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங் 2:8).

கர்த்தருடைய பிள்ளைகள் உலகமெங்கும் சிதறியிருக்கிறார்கள். அவர்களை ஒரே ஜனமாய் கூட்டிச்சேர்ப்பதற்காக, கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையிலே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். கர்த்தருடைய நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும், கிறிஸ்துவானவர் தம்முடைய வசமாக்கிக்கொள்வார்.

மேசியாவின் ராஜ்யத்தில் சகலமும் சம்பூரண ஆசீர்வாதத்தோடிருக்கும். அங்கே செழிப்பும் தாராளமும் உண்டாயிருக்கும். உழுகிறவன் அறுக்கிறவனை தொடர்ந்து பிடிப்பான். ஒவ்வொரு வருஷமும் திரளான அறுவடையிருக்கும். கோடைகாலம் வரையிலும் அறுவடை நடைபெறும். அறுவடை இலையுதிர் காலத்திலும் தொடரும். இலையுதிர்காலம் நிலத்தை உழுகிற காலம். உழுகிற காலத்திற்கும், அறுவடை காலத்திற்கும் இடைவெளி இல்லாத அளவுக்கு, எப்போதுமே அறுவடை நடந்துகொண்டிருக்கும்.

திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனைத் தொடர்ந்து பிடிப்பான். உழுகிறவன் அறுக்கிறவனை தொடர்ந்து பிடிப்பதுபோல, ஆலையாடுகிறவன் விதைக்கிறவனைத் தொடர்ந்து பிடிக்கிறான். மேசியாவின் ராஜ்யத்தில் வறட்சி காலம் என்பதே இல்லை. எல்லாமே செழிப்பின் காலமாயிருக்கிறது. நிலத்தின் ஒரு பக்கத்தில் உழவு உழும்போது, மற்றொரு பக்கத்தில் அறுவடை நடைபெறுகிறது.

கர்த்தருடைய கோபமும், சாபமும் இஸ்ரவேல் தேசத்தின்மீது வந்தபோது, தேசத்தின் பர்வதங்களெல்லாம் காய்ந்து கிடந்தது. இப்போதோ மேசியாவின் ராஜ்யத்தில், கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை ஆசீர்வதிக்கிறார். அதின் பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிற நாள் வரும் என்றும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஆமோ 9:13).

கர்த்தர் இங்கு சொல்லுகிற ஆசீர்வாதங்களெல்லாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாகும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களுக்கும், இயேசுகிறிஸ்துவின் சபையில் உண்மையான விசுவாசிகளாயிருக்கிறவர்களுக்கும், ஆவிக்குரிய ஆசீர்வாதம் திரளாய் உண்டாகும்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஜீவஅப்பம் உண்டாயிருக்கும். அவர்களுடைய இருதயங்கள் பெலப்படும். அவர்களுக்கு தெய்வீக ஆறுதல்கள் கிடைக்கும். அவர்கள் சந்தோஷமாயிருப்பார்கள். கர்த்தருடைய வார்த்தையின் மூலமாகவும், தேவஆவியானவர் மூலமாகவும், மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

திரளான ஜனங்கள் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறவர்கள், சந்தோஷமாய் பிரசங்கம்பண்ணுவார்கள். திரளான ஆத்தும அறுவடை இருக்கும். விதைக்கிறவர்களும் அறுக்கிறவர்களும், கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சுறுசுறுப்பாய் ஊழியம் செய்வார்கள். ஊழியக்காரர்கள் ஒரு பக்கத்தில் வசனத்தை விதைப்பார்கள். மற்றொரு பக்கத்தில் ஆத்துமாக்களை அறுவடை செய்வார்கள்.

மேசியாவின் ராஜ்யத்தில் ஏராளமான ஜனங்கள் இருப்பார்கள். அங்கே ஆகாரமும் அதிகமாயிருக்கும். அதைப் புசிப்பதற்கு ஜனங்களும் அதிகமாயிருப்பார்கள்.

"என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக்கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப்புசிப்பார்கள்" (ஆமோ 9:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்" என்று கர்த்தர் சொல்லுகிற வாக்குத்தத்திற்கு, விசுவாசிகள் மத்தியில் பாரம்பரிய பிரமாணங்களும், சடங்காச்சார பிரமாணங்களும் ஒழிக்கப்படும் என்று பொருளாகும். அவர்களுக்கு விடுதலை உண்டாகும். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள், பழைய ஏற்பாட்டுக்காலத்து சடங்காச்சார பிரமாணங்களுக்கு அடிமைகளாயிருக்க மாட்டார்கள். கர்த்தருடைய ஜனம் ஆவியோடும், உண்மையோடும், விடுதலையோடும், கர்த்தரைத் துதித்து ஆராதனை செய்வார்கள்.

"ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலா 5:1).

மேசியாவின் ராஜ்யத்தில் திராட்சத்தோட்டங்களை நாட்டுகிறவர்கள் அவைகளுடைய பழரசத்தைக் குடிப்பார்கள். அங்கே தோட்டங்களை உண்டாக்குகிறவர்கள், அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். கர்த்தருடைய ராஜ்யத்தில் ஊழியம் செய்கிறவர்கள், அதன் பலனை அனுபவிப்பார்கள்.

மேசியாவின் ராஜ்யம் வலுவாக ஸ்தாபிக்கப்படும். கர்த்தர் தம்முடைய ஜனத்தை அவர்கள் தேசத்திலே நாட்டுவார். மேசியாவின் ராஜ்யம் ஆழமாய் வேர்விட்டு, வேரூன்றி நிற்கும். அதை யாராலும் பிடுங்க முடியாது. கர்த்தர் தம்முடைய ஜனத்தை அவர்களுடைய தேசத்தில் நாட்டும்போது, கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த தேசத்திலிருந்து, அவர்களை யாரும் பிடுங்க முடியாது.

கர்த்தரே இந்தப் பூமியில் தம்முடைய சபையை ஸ்தாபித்திருக்கிறார். சபையில் ஒரு சில அவிசுவாசிகள் இருக்கலாம். அவர்கள் சபையின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கலாம். கர்த்தர் அவர்களை தண்டித்து திருத்துவார். கர்த்தர் ஒருபோதும் தம்முடைய சபையைக் கைவிட்டுவிடமாட்டார். கர்த்தருடைய கிருபை அவரை நம்புகிறவர்களுக்கும், அவருக்கு பயப்படுகிறவர்களுக்கும் என்றென்றுமுள்ளது.

ஆமோஸ் - விரிவுரை
AMOS - COMMENTARY

இந்த உலகம் உள்ளவரையிலும் கர்த்தருடைய சபையும் நிலைத்திருக்கும். கர்த்தருடைய சபையை யாராலும் அழிக்க முடியாது. கர்த்தரே தம்முடைய சபையை, இந்தப் பூமியில் ஸ்தாபித்திருக்கிறார். ''நான் அவர்களுக்கு கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனி பிடுங்கப்படுவதில்லை'' என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திடம் அன்பாகயிருக்கிறார். அவர்கள்மீது அக்கரையுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய சபைக்கு, தம்முடைய வாக்குத்தத்தத்தைச் சொல்லும்போது, இதை, ''உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்'' என்று சொல்லுகிறார். கர்த்தர் நம்முடைய தேவனாயிருக்கிறார். அவர் நம்மை ஆளுகை செய்கிறார். கர்த்தர் நித்தியகாலமாய் ஜீவிக்கிறவர். அவருடைய சபையும் நித்தியகாலமாய் ஜீவிக்கும்.